ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 7 18 – 24 ஜனவரி 2001 முழக்கம்: 314

FORWARD CONSULTANTS
CONSULTING FOR PEOPLE
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants.co.uk
www.forwardconsultants.co.uk
Pub.



சுவிசில் நடைபெற்ற கேணல் கிட்டுவின் எட்டாவது ஆண்டு நினைவு நிகழ்வில்




நிர்மூலமாக்கப்பட்டுள்ள தென்மராட்சியின் சில தோற்றங்கள்

## புகலிடத் தமிழ் சமூகம் எழுச்சி கொள்ள வேண்டும் யாழ். பல்கலைக்கழகம் வேண்டுகோள்
பக்கம் 03

## முழுமையான போரை நோக்கி சிறீலங்கா பெரும் இரத்தக்களறியையே ஏற்படுத்தும்
அன்ரன் பாலசிங்கத்தின் முழுமையான பேட்டி
பக்கம் 15

## தலைவர் வழங்கிய நேரடிப் பயிற்சி
பக்கம் 17

## சந்திரிகாவின் பே(ர)ருரை
பக்கம் 07

## புலிகள் எவ்வளவு தூரம் பின்வாங்குவார்கள் ?
பக்கம் 20

தமிழினி
TAMILINI
பல்பொருள் அங்காடி
Cash and Carry
195-197 The Broadway, Southall, Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0208-813 8269
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

- MD JAM - 99 P
- KIST JAM - 99P
- MD CORDIAL - £1.99P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
- KIST CORDIAL - £1.99 P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
- LARICH மோர்மிளகாய் (ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்)
- ROSE SYRUP - £1.99
- RED BULL (Imp) - £12.00 Case (24x 250 Ml)
- பனங்களி - £1.79P

தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"


# போரே தீர்வு

சிறீலங்கா அரசின் கடந்தவார நிகழ்வுகள் அதனது நோக்கம், முடிவு என்ன என்பதை மிகவும் தெளிவாக்கியுள்ளது. சமாதானப் பேச்சுக்களைத் தவிர்த்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஆயுதரீதியில் அடக்கி, அம்மக்களை அழிப்பதற்கே சிறீலங்கா அரசும் அதனது படைகளும் தயாராகி வருகின்றன என்பதை இந் நிகழ்வுகள் வெளிப்படையாக்கியுள்ளன. சமாதானப் பேச்சுக்களுக்கு ஓர் இயல்புநிலையை தோற்றுவிப்பதற்காக விடுதலைப் புலிகள் நல்லெண்ண நோக்கத்துடன் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தம் மேற்கொண்டு அதனை நடைமுறைப் படுத்திவரும் நிலையில், சிறீலங்கா அரசும் அதன் படைகளும் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கு மறுத்து, இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெரும் போர் ஒன்றுக்கு தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர். சிறீலங்கா அரசின் இந் நடவடிக்கைகளை, விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இலண்டனில் இருந்து வெளிவரும் ஆங்கில இதழொன்றுக்கு வழ்ங்கிய செவ்வியில் குற்றம்சாட்டியுள்ளதுடன், போர் நிறுத்தத்திற்கு உடன்படாது அரசு தாக்குதலைத் தொடருமானால் அது பெரும் இரத்தக்களரியை ஏற்படுத்தி, போர் என்றுமில்லாத அளவிற்கு விரிவடையும் எனவும் எச்சரித்துக் கூறியுள்ளார்.

ஆனால், அதனைச் செவிமடுக்கும் நிலையில் இப்போது சிங்கள தேசம் இல்லை என்பதே உண்மை. கடந்த வாரம் யாழ்.குடா மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரைநிகழ்த்திய சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா, புலிகளின் யுத்த நிறுத்தத்தை தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனக் கூறியதுடன், போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும் எனவும் கூறியிருந்தார். இதேநேரம் சிறீலங்காவின் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சரும் போர் மூலமே பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என குரல் எழுப்பி வருவதுடன் போருக்கான ஆயத்தங்களையும் மிகத்தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, இராணுவத்தினரும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுமாறு அரசை வற்புறுத்தி ஊர்வலங்களையும், போராட்டங்களையும் நடாத்துவதற்கு பொது மக்களுக்கு தடைவிதித்துள்ளனர்.

இந்நிலையில் தான் கடந்தவாரம் கொழும்பு சென்ற நோர்வே தூதர் சிறீலங்காவின் ஜனாதிபதியையும், அமைச்சர்களையும், எதிர்க்கட்சியினரையும் சந்தித்துத் திரும்பியுள்ளார். நோர்வே தூதர் கொழும்பில் தங்கி நின்றவேளை, சிங்கள இனவாதக் கட்சிகளின் தலைவர்கள் தூதரை மிகவும் தரக்குறைவான, நாகரீகமற்ற வார்த்தைகளால் தாக்கிப் பேசி தமது சமாதானத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இதேநேரம் இலங்கையின் இனப்பிரச்சனை போரின் மூலமே தீர்க்கப்பட வேண்டும் என கூறியுள்ள கண்டிச் சிங்கள பௌத்தபிக்குவான மல்வத்த தேரர், இலங்கைப் பிரச்சனைகளை வெளிநாட்டுத் தூதுவர்களிடம் கூறவேண்டிய அவசியம் தமக்கில்லை, 'வெளிநாட்டுத் தூதர்களினால் ஆலோசனையை மட்டுமே கூறமுடியும்' எனவும் தன்னைச் சந்திக்க வந்த அமெரிக்கத் தூதரிடம் தெரிவித்துள்ளார்.

எனவே சிங்கள அரசுக்கு முண்டுகொடுத்திருக்கும், அரசியல் நடவடிக்கைகளை தீர்மானிக்கும் சிங்கள தேசத்தின் பௌத்த-சிங்கள இனவாத ஒட்டுமொத்தக் குரலும், போர் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என் வலியுறுத்திவரும் நிலையில், சமாதானப் பேச்சுக்களுக்கு எந்த வித இயல்பு நிலைகளையும் தோற்றுவிக்காது சர்வதேச சமூகத்தை ஏமாற்றியவாறு, தொடர்ந்து போருக்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுவரும் சிறீலங்கா அரசின் நிலைப்பாடும் போர்தான் என்றிருக்கும் போது, சிறீலங்கா அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வருமா என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்று!




# பார்வை

## தமிழர்களின் பொதுஅறிவை கேலி செய்யும் சந்திரிகா!

சந்திரிகா ஏன் கடந்த வாரம் யாழ். மக்களிற்கான உரை என்ற பெயரில் ஒரு அரசியல் பரப்புரை நாடகத்தையாடினார்?

புலிகளின் தொடர் அரசியல் நகர்வுகளினாலும், தமிழ் மக்கள் புலிகளின் நகர்வுகளுக்கு அளிக்கும் மிகப் பிரமாண்டமான ஆதரவும் (சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு மத்தியிலும் கூட) சந்திரிகாவின் இவ்வுரை நாடகத்திற்குக் காரணம் என மேலோட்டமாகக் கூறப்பட்டாலும், தமிழ் மக்களின் பொது அறிவை எப்போதும் குறைத்து மதிப்பிடும் சந்திரிகாவுக்கு இது மட்டும் போதுமான காரணமாக இருக்காது.

தனது உரையில் சந்திரிகா அழுத்திக் கூற முயன்ற விடயம் யாழ்.புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு என்பனவே. தான் யாழ்ப்பாணத்தை புனரமைப்புச் செய்யப் போவதாக சந்திரிகா கூறியதும், அதற்காக தான் பெரும் தொகை நிதியை ஒதுக்கப் போவதாகச் சொன்னதும் ஒரு திட்டத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகும். தனது அமைதிக்கான மூன்றாவது(?) வழி, யாழ். புனரமைப்பு எனக் கூறும் சந்திரிகா, பாரிஸ் நிதி மாநாட்டில் யாழ். புனரமைப்புக்கு தான் நிதி கேட்டதாகவும், உலக நாடுகள் 'மில்லியன்கள்', 'மில்லியன்களாக' அள்ளித் தந்ததாகவும் கூறுகின்றார். தனக்கு உலக நாடுகள் ஆதரவளிப்பதால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று மக்களை அச்சுறுத்தும் தோரணை அவரது உரையில் காணப்பட்டது. ஆயினும் சந்திரிகாவின் உண்மையான நோக்கம் யாழ் புனரமைப்பு என்ற காரணத்தைக் காட்டி பல தரப்பட்ட கடன்களையும் பெற்று சிங்களத்தின் பொருளாதாரத்தை காப்பாற்றுவதேயாகும். மேலும், உலக அபிப்பிராயத்தில் வீழ்ந்து வரும் தனது செல்வாக்கை நிமிர்த்துவதாக நினைத்துக் கொண்டும் சந்திரிகா இந்த உரையை ஆற்றியுள்ளார். ஆயினும், பொங்கு தமிழ் எனும் மக்களின் எழுச்சி நிகழ்வை அச்சுறுத்தி தடை செய்தவாறே தமிழ் மக்களினை முழு முட்டாள்களாக நினைத்து சந்திரிகா நிகழ்த்தும் இந் நாடகம், தமிழ் மக்களினை மேலும் விழிப்படைய வைப்பதாகவே அமையும்.

★ ★ ★

## திரு.பாலசிங்கத்திற்கு ஈடுகொடுக்க ஆள் தேடல்

முன்பு சந்திரிகாவின் போரை ஆதரித்த (அல்லது மௌனமாக ஏற்றுக் கொண்ட) சில சர்வதேச தரப்பினருக்கு இப்போது மீண்டும் மீண்டும் சிக்கல்கள் உருவாகின்றன. பௌத்த பிக்குக்களிடம் வாங்கிக் கட்டிய அமெரிக்கா, மட்டக்களப்பில் அரச அடக்குமுறையை நேரடியாகக் கண்ட நெதர்லாந்து, தனது சிறப்புத் தூதுவரை கேவலமாக அவமதிக்கும் சிங்கள இனவெறியாளர்களால் அதிர்ச்சியுற்றுள்ள நோர்வே என இவ் வாரமும் இந்தப்பட்டியல் நீண்டது. பல வருடங்களாக கதிர் தலைமையில் கட்டியெழுப்பப்பட்ட சிங்களவர்களின் பரந்த மனப்பான்மை பற்றிய தோற்றத்தை 'கொஞ்சமேனும்' பாதுகாக்க முடியாத வகையில் புலிகளின் அரசியல் வலிந்த தாக்குதல்கள் பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்த சிக்கல்களுக்கு மத்தியில் சிறீலங்கா ஒரு கடுமையான பேச்சுவார்த்தையாளரை தேடுவதாக Gulf news எனும் பத்திரிகை நிருபர் கொழும்பிலிருந்து அறிவிக்கின்றார். புலிகளின் அனுபவம் மிக்க பேச்சுவார்த்தையாளரான பாலசிங்கம் அவர்களுக்கு ஈடுகொடுக்கும் திறன்மிக்க ஒருவரை சிறீலங்கா தேடுகின்றதாம்! அவரது எழுத்துக்களின் பிரகாரம் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு இணையமைச்சர் ஆகியோர் புலிகளுக்கு எதிரான கடும் போக்கால் பேச்சுவார்த்தையாளராக இருக்க முடியாது எனவும், பீரிஸ், மங்கள சமரவீர ஆகியோர் சிங்களவர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவர்கள் எனவும் கூறப்படுகின்றது. ஈற்றில், முன்பு போன்று அதிகாரங்கள் எதுவுமற்ற அதிகாரிகளை நியமித்து தனது அரசியல் நாடகங்களுக்கு ஏற்ப நுட்பமான - பல்வேறு காரணங்களை தேடிப்பிடித்து திசை திருப்பும் உத்திகள் கொண்ட தந்திரோபாயத்தை சந்திரிகா மேற்கொள்ளலாம் என நம்பப்படுகின்றது.

★ ★ ★

## விசுவாசப் போட்டி

எதிர்ப்படும் அனைவரிடமும் புலிகளை தடைசெய்யவும் என வேண்டுதல்விடும் கதிர்காமர் கொழும்புக்கு பயணம் செய்த மொரீசியஸ் வெளிவிவகார அமைச்சரிடமும் புலிகளை தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஏன் இவ்வாறு கதிர், மொறிசியஸ் அரசுக்கு வேண்டுதல் விடுத்தார் என்று அறிய முற்பட்ட போது மொரிசியஸ் நாட்டில் தமிழ் இந்து மாநாடு இடம்பெறவுள்ளதாக மேலதிக தகவலை அரச ஏடான டெய்லிநியூஸ் தருகின்றது. அங்கு புலிகளின் ஆதரவாளர்கள் உள்நுழைந்து விடுவார்கள் என சிங்களவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். அதனால், மொறிசியஸ் அரசிடம் முதலிலேயே வாக்குறுதியை வாங்கிட கதிர் முயன்றுள்ளார். சந்திரிகா மீது டக்ளஸ் தேவானந்தா காட்டும் விசுவாசத்திற்கு தான் எவ்வழியிலும் குறைந்தவனில்லை என ஒற்றைக்காலில் நின்று நிரூபிக்க முயலும் கதிர்காமர், பிரித்தானிய காலனி ஆட்சியின்போது மொறிசியசில் தஞ்சமடைந்து மரணித்த ஒரு பௌத்தரின் வீட்டை நினைவிடமாகப் பாதுகாப்பதற்காக மொறிசியஸிற்கு நன்றி தெரிவித்தார்.

★ ★ ★

## புறக்கணிப்பு

விடுதலைப் புலிகளின் 'அரசியல் ஆலோசகர் திரு.பாலசிங்கம் அவர்கள் தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் சிறீலங்காவின் பலதரப்பட்ட பரப்புரைகளுக்கு பதில் வழங்கினார். சிறீலங்காவின் பல தரப்பட்ட குரல்களும் பல தரப்பட்ட விதத்தில் பேசுகையில் தமிழர்களின் குரல் உறுதியாகவும், தெளிவாகவும் விடயங்களை தெளிவுபடுத்திவரும் பிரபாகரன் அணுகுமுறையின் தொடர்ச்சியாகவே. இச் செவ்வி அமைந்தது.

பல்வேறு அனைத்துலக ஊடகங்கள் இச் செவ்வியை தேர்வு செய்து வெளியிட்ட போதும் கொழும்பு ஊடகங்கள் அதனை இருட்டடிப்புச் செய்துவிட்டன. சிங்களத்தின் பல்வேறு புரட்டல்களுக்கு அதில் பதில் காணப்பட்டது. சந்திரிகாவின் யாழ். மக்களுக்கான உரையை ஒரு 'கட்டுப் பொய்' என விபரித்த பாலசிங்கம் அவர்கள், இதுவரை காலமும் பிரச்சினையின் மைய விடயத்தைப் புலிகள் அணுகுகின்றனர் இல்லை என 'கதையளந்து வந்தமைக்கும்' பதிலளித்தார். திம்பு கோட்பாடுகளை மீள கோடிட்டுக் காட்டி, சந்திரிகாவின் மறதிக்கு அங்கு பாலசிங்கம் அவர்கள் குட்டு வைத்தார். அவரது பேட்டி நியாயமாக ஒலித்தமையாலும், அதில் காணப்பட்ட நியாயங்களை மறுக்கும் தார்மீக பலம் சிங்களத்திற்கு இல்லாமையாலும் ஒட்டு மொத்தப் புறக்கணிப்பை சிங்கள ஊடகங்கள் மேற்கொண்டன.

## அவர்கள் சொன்னவை – எமக்குள் கேட்டவை

'எனது கருத்து இந்தப் போரை இராணுவ ரீதியாக வெல்ல முடியாது.'

**– மல்வத்த பீடத்திடம் அமெரிக்க தூதுவர் வில்ஸ் –**

*அமெரிக்கா தனது இராணுவ உதவிகளை இனியாவது நிறுத்துமா?*

'எமது தரைப்படைகளின் மனோபலம் உச்சத்தில் உள்ள வேளையில் போர்நிறுத்தத்தை பிரகடனப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு இல்லை.'

***– சிறீலங்காப் பிரதமர் ஊனமுற்ற இராணுவத்தினர் முன்னால் ஆற்றிய உரை –***

*புலிகளின் போர்நிறுத்தம் உங்களுக்குத் தந்த மனோபலம் அது!*

மிருசுவிலில் சக இராணுவ வீரனை வல்லுறவுக்கு உட்படுத்திக் கொன்றனர் இராணுவத்தினர்...

**– தமிழ் நெற்றில் காணப்பட்ட செய்தி –**

*படையினரின் மனோபலம் உச்சத்தில் உள்ளதாக பிரதமர் கூறுகின்றாரே!*

**- ராஜா**

# பொங்குதமிழ் எழுச்சிக்கு இன்னல் விளைந்தால் புகலிடத் தமிழ் சமூகம் எழுச்சி கொள்ள வேண்டும்

## - யாழ். பல்கலைக்கழக மாணவ சமூகம் -

(16.01.01)

யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை நடைபெற ஏற்பாடாகியுள்ள பொங்கும் தமிழ் எழுச்சி நிகழ்வு திட்டமிட்டபடி நடைபெறும் என யாழ். பல்கலைக்கழகம் சமூகம் தெரிவித்துள்ளது. சிறீலங்கா இராணுவமும், பொலிசாரும் கடும் எச்சரிக்கைகளையும், தடைகளையும் விடுத்துள்ள நிலையிலேயே பல்கலைக்கழக சமூகம் இவ்வாறு தெரிவித்துள்ளது. தமது இம் முயற்சிக்கு புகலிடச் சமூகத்தின் பேராதரவினையும் யாழ். பல்கலைக்கழக மாணவ சமூகம் வேண்டி நிற்பதாகவும், தமது இவ் எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவாக உலகெங்குமுள்ள தமிழ் அமைப்புகள் ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஊர்வலங்களையும், பொதுக்கூட்டங்களையும் நடத்தி எமக்கு ஆதரவு தருவதுடன் தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகள் என்ன என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் சிறீலங்கா அரசை ஈடுபடுமாறு வலியுறுத்தியும் கடந்த இருவாரங்களுக்கு மேலாக எழுச்சி நிகழ்வுகளை நடத்தி வந்த பல்கலைக்கழக சமூகம், அதன் உச்சக்கட்ட நிகழ்வாக பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வொன்றை நடாத்துவதற்கு தீர்மானித்திருந்தது. இதற்கு சுமார் ஐம்பது வரையான சமூக அமைப்புக்களும் தமது ஆதரவை வழங்கியருந்தமை தெரிந்ததே. இவ் எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்வதற்கு யாழ்குடாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் மாணவ சமூகம் அழைப்பு விடுத்திருந்ததுடன், வீடுவீடாகச் சென்று பிரச்சாரங்களையும் மேற்கொண்டிருந்தனர். இந் நிலையில்தான் சிறீலங்காவின் யாழ்குடா இராணுவத் தளபதி அன்ரன் விஜயேந்திரா, குடாநாட்டில் தற்போது நிலவும் அமைதியை குழப்பி, குழப்பங்களை ஏற்படுத்த மாணவர்களை அனுமதிக்க முடியாது எனவும், அவசரகாலச் சட்டத்தின் கீழ் இங்கு கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கு கட்டுப்பாடுகள், விசேட விதிகள் உள்ளன. எனவே கண்டபடி யாரும் கூட்டம், ஊர்வலம், ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியாது. அமைதிச் சூழலைக் கலைக்க, குழப்ப முயலும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் அனுமதிக்க மாட்டோம் எனக்கூறி மாணவர்களின் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு தடைவிதித்திருந்தார்.

இதேவேளை, சிறீலங்காவின் யாழ்குடா பொலிஸ் அதிகாரி பல்கலைக்கழக மாணவர்களின் எழுச்சி நிகழ்வை தடுத்து நிறுத்துவதற்காக யாழில் உள்ள, கிராமசேவகர்கள் அனைவரையும் அழைத்து கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளார். இதன் போது பல்கலைக்கழக மாணவர்கள் குழப்பம் விளைவிக்க முயலுகின்றனர் எனவும் மீறி இந்நிகழ்வு நடைபெறுமானால் பொலிசார் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும். அப்போது சில விரும்பத்தகாத சம்பவங்களும் இடம் பெறலாம். அதாவது குண்டாந்தடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்வதுடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியும் நேரிடும் எனவும் எச்ச

(☞ 4ம் பக்கம்)

# பொங்கு தமிழை தடுத்து நிறுத்த இராணுவம் - பொலிஸ் தீவிரம்

## தொலைபேசிகள் நிறுத்தப்பட்டு ஊரடங்கு சட்டம் அமுலாகலாம்

(15.01.01)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்த ஏற்பாடாகியுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை தடுத்து நிறுத்துவதற்கு சிறீலங்கா இராணுவமும், பொலிசாரும், தமிழகக்குழுவான ஈ.பி.டி.பி.யும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக யாழ்.குடாச் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ். பல்கலைக்கழகத்தை சுற்றி நூற்றுக்கணக்கான பொலிசாரும் படையினரும் குவிக்கப்பட்டு பல்கலைக்கழகம் சென்றுவருபவர்கள் கடும் சோதனைகளுக்கும், விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்துடன் தொடர்பு படாதவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைவதற்கு சிறீலங்காப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதேவேளை, பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறும் நாளன்று இணையத்தளம் ஊடாக வெளிவரும் யாழ்.குடா பத்திரிகையின் செய்திகளை தடுப்பதற்கும், யாழ்.குடாவிற்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசித் தொடர்புகளை இடைநிறுத்துவதுடன் அத்தினத்தில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்தி பொதுமக்களின் நடமாட்டத்தை முற்றாகத் தடைசெய்வதற்கும் படையினர் திட்டமிட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை பொங்கு தமிழ் நிகழ்ச்சி நடைபெறும் தினத்தில் அதில் கலந்துகொள்பவர்கள் மீது பொலிசார் தாக்குதல் நடாத்தவார்கள் என அறிவித்துள்ளதையடுத்து, அதனைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது சிறீலங்கா அரசின் கூலிக்குழுவான ஈ.பி.டி.பி.யும் தாக்குதல்களை நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

(☞ 4ம் பக்கம்)

# நோர்வே தூதர் அமைதியாகவே செயற்படுவார் ஆனால் வெற்றிபெறுவார்

## - பிரிட்டிஷ் தூதர் -

நோர்வே தூதர் அமைதியாகவே செயற்படுபவர், தாம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பற்றி அலட்டிக்கொள்வதில்லை. ஆனால் அவர்கள் தமது முயற்சியில் வெற்றிபெறுவார்கள் என சிறீலங்காவின் பிரிட்டன் தூதர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நோர்வேக்கு இலங்கைப் பிரச்சினையைப் போன்று பல நாட்டு பிரச்சினைகளை தீர்த்து வைத்த அனுபவம் உள்ளது. அவர்கள் தம்மை அலட்டிக் கொள்வதில்லை. ஊடகங்களுக்கு அறிக்கை கொடுப்பதில்லை.

ஆனால் முயற்சியில் அவர்கள் வெற்றி பெறுவார்கள். நாமும் அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், பங்களிப்புக்களையும் பூரணமாக வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.


## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய $20M^3$ வாகனத்தில்
பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லோர்த்,
ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

Pub Fr


# சிறீலங்காவின் குற்றப்புலனாய்வு கலைக்கப்பட்டது

(15.01.01)

சிறீலங்காவின் குற்றப்புலனாய்வுப் பிரிவு கலைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து நேற்றில் இருந்து இதன் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. 1972 ஜனவரியில் சிறீலங்கா அரசு குற்றப்புலனாய்வுப் பிரிவை ஆரம்பித்திருந்தது. தற்போது கடமையாற்றும் உயரதி

(☞ 4ம் பக்கம்)

# போர் மூலமே பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## - கண்டி மகாநாயக்க தேரோ

(15.01.01)

அண்மையில் அமெரிக்க தூதர் ஆஸ்லி வில்ஸ் அவர்கள் சிறீலங்காவின் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரோவான, வம்புக்வெல்ல சிறீ விபாசி மகாநாயக்க தேரோவை சந்தித்து உரையாடினார். கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற இச்



மகாநாயக்க தேரோவும் - அமெரிக்க தூதரும்

சந்திப்பின்போது, பத்திரிகையாளர்கள் அவசியம் இல்லை என தூதுவர் கூறியதற்கு, நான் விவகாரங்களை இரகசியமாக ஆலோசித்து நாட்டுக்கு துரோகம் செய்யும் அரசியல் வாதிகளின் நிலைக்கு கீழிறங்கி வரமாட்டேன். பத்திரிகையாளர்கள் கட்டாயம் இருக்கவே வேண்டும் என மகாநாயக்கர் கூறினார். அவருக்கும் அமெரிக்க தூதுவருக்கும் இடையே நடந்த சம்பாசனையின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

**தூதுவர்:-** எவ்வளவு காலமாக இந்தப் பதவியை நீங்கள் வகித்து வருகிறீர்கள்?

மகாநாயக்கர்:- கடந்த 11 வருடங்களாக...

**தூதுவர்:-** கடந்துபோன இந்த 11 வருடங்களில் பலவிதமான மாறுதல்களை கண்டிருப்பீர்களே?

மகாநாயக்கர்:- ஆமாம்... நிறைய மாறுதல்களை கண்டிருக்கிறேன்.

**தூதுவர்:-** இந்த யுத்தம் கடந்த 18 வருடங்களாகத் தொடர்கின்றது. இதற்கு என்ன தீர்வொன்றை நீங்கள் பார்க்கின்றீர்கள்?

மகாநாயக்கர்:- யுத்தம் முடிவடையத்தான் வேண்டும். ஆனால், யுத்தத்துடன் ஈடுபடும் ஒரு மனிதன் அல்ல நான்.

**தூதுவர்:-** எப்படி இந்த யுத்தம் முடிவடைய வேண்டும்?

(☞ 25ம் பக்கம்)

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 40 04 17, 40244 Langenfeld
Tel/Fax: 02102158108 / 0210228672
தர்சனன்: 01732620605

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877

ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07801383857
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4 .
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

# படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

(15.01.01)

மட்டு. பிள்ளையாரடி பகுதியில் சிறீலங்காப் படையினரின் சுட்டதில் 11 வயதுச் சிறுமி உட்பட இரு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் இன்று காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தில்லைரத்தினம் லதா(23), கருணாகரன் அனித்தா(11) ஆகிய இருவருமே காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு நகரிலிருந்து பொலனறுவை நோக்கி செல்லும் சிறீலங்கா படையினரின் வாகன தொடரணிக்கு வீதிப்பாதுகாப்பு வழங்குவதற்காகச் சென்ற படையினரே பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் செய்ததாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இன்று காலையில் வீட்டு வாசலில் இருந்து மரக்கறி வெட்டிக்கொண்டிருந்தபோதே படையினரின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி காயமடைந்ததாக பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் லதா என்பவர் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் இளைஞர் சுட்டுக்கொலை

(15.01.01)

வவுனியா தொடருந்துநிலைய வீதி வைரவப்புளியங்குளத்தில் தமிழர் இளைஞர் ஒருவர் சிறீலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று மாலை 5.45 மணியளவில் வாகனம் ஒன்றில் வந்த சிறீலங்காப் படையினர் இளைஞரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர். இதன்போது அவ் இளைஞர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். கொல்லப்பட்ட இளைஞரின் சடலத்தைப் படையினர் வவுனியா வைத்தியசாலையில் புலி உறுப்பினர் எனக் கூறி ஒப்படைத்த படையினர், அவரிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கியும், சைனைட் குப்பியும் கைப்பற்றியுள்ளதாகக் கூறியுள்ளனர்.

ஆனால், நேற்றைய தினம் பொங்கலை முன்னிட்டு வீதியில் சனநடமாட்டம் குறைந்திருந்தவேளையே படையினர் இச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## பொங்குதமிழ்...

ரித்துள்ளதுடன். மக்கள் இதில் கலந்து கொண்டால் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வேண்டாத விளைவுகளும் ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் பொங்கு தமிழ் நிகழ்வு எவ்வாறான இடையூறுகள் ஏற்பட்டாலும் அமைதியான் முறையில் நடைபெறுமென பல்கலைக்கழகச் சமூகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ் அறிக்கையில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாங்கள் கடந்த 29ம் திகதியிலிருந்து பல்கலைக்கழக எல்லைக்குள் எழுச்சி நிகழ்வை நடத்தி வருகின்றோம். இறுதி நிகழ்வாக பொங்கு தமிழ் என்ற நிகழ்வு எதிர்வரும் 17ம் திகதி பல்கலைக்கழக வளாகத்துக்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இதில் பொது மக்களும் கலந்து கொண்டு தங்களுடைய அபிலாசைகளை ஒரே குரலில் உலகுக்கு எடுத்துரைக்க உள்ளோம். இந்த எழுச்சி நிகழ்வானது எவருக்கும் எதிரானதோ அல்லது யாருக்கும் ஆதரவானதோ இல்லை. சிறீலங்கா அரசும் அதன் படைகளும் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் இராணுவத் தீர்வையே விரும்புகின்றனர். அங்கு தற்போது தமிழ் மக்களுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை புலிகளுக்கு அவர்கள் எதிரானவர்களாகவே உள்ளனர். ஒரு குறிப்பிட்ட குழுவே இப்போராட்டத்தை நடத்தி வருகின்றது. என வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆனால் உண்மையில் இங்கு தமிழ் மக்கள் பல இன்னல்களை தினமும் அனுபவித்து வருகின்றனர். அவர்களின் அபிலாசைகள் என்ன என்பதை வெளி உலகுக்குக் காட்டுவ்தற்காகவே இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கிகரிக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் மரபு வழித்தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும், சிறீலங்கா அரசாங்கம் போர் நிறுத்தத்தை ஏற்படுத்திப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்வைத்தே இந்நிகழ்வு இடம் பெற்று வருகின்றது. எனவே இந்நிகழ்வை படையினரும் குடாநாட்டில் இயங்கி வரும் சில ஆயுதக் குழுக்களும் கொச்சைப் படுத்தி வருவதுடன், குழப்பவும் முனைகின்றன. நாங்கள் எந்தவொரு பொது மக்களையும் பலவந்தப்படுத்தியோ மிரட்டியோ இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கூறவில்லை. அவர்களாகவே முன்வந்து இதில் பங்குகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். அத்துடன் யாழிலுள்ள 47 அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளும் ஆதரவு வழங்கி வருகின்றன. எனவே அன்றைய தினம் உலகெங்குமுள்ள தமிழ் அமைப்புகள் எமது எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஊர்வலங்களையும், பொதுக் கூட்டங்களையும் நடத்தி எமக்கு ஆதரவு தருவதுடன் தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகள் என்ன என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## பொங்குதமிழை...

இது இவ்வாறிருக்க, இணுவில் பகுதியில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஒன்பது பல்கலைக்கழக மாணவர்கள் இன்று சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறீலங்காவின்...

காரிகளின் சில செயற்பாடுகளில் அரசாங்கம் முரண்பாடு கொண்டுள்ளதே இப்பிரிவு கலைக்கப்பட்டதற்குக் காரணமென கூறப்பட்டுள்ளது.

சிறீலங்காப் பண்டயினரால் கைது செய்யப்படும் அப்பாவித் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது கொடூரமான சித்திரவதைகளுக்கும், உயிரிழப்புக்களுக்கும் தமிழர்கள் உள்ளாகியிருந்தனர் என்பது குறிப்படத்தக்கது.

## முதலாம் ஆண்டு வீரவணக்கம்



### மேஜர் மன்மதன்

**நாகேந்திரன் வாணிகர்ந்தன் (காந்தன்)**
**வீரமரணம்: 16.02.2000 (சாவகச்சேரி)**
*சாவகச்சேரி – யாழ்ப்பாணம்*
**(சாவகச்சேரி றிபேக்கல்லூரி பழையமாணவன்)**

மண்மீட்புக்காக மன்மதன் என பெயர்சூடி,
மண் காத்தாய் மகனே.
மறைந்தும் உனது புகழ், நினைவு
அழியவில்லையே.
சொந்த மண்ணிலே வீரகாவ்யமான
உனது கதை சோகமானதே.
ஆண்டுகள் எத்தனையோ சென்றாலும்
நாம் உன்னை மறவோமே.
மண்ணுக்குள் மறைந்த மாவீரனே.
மீண்டும் மறுபிறவி எடுத்து
மண்மகனாக நீ வருவாயென.
காத்திருக்கிறோம் உன் நினைவுடனே.

உன் ஆத்மா சாந்திக்கா, நித்தம் பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: வை. நாகேந்திரன் (தந்தை) சியோன் - சுவிஸ்.
Tel: 0792528112
வை. யோகசுந்தரம்(சிறியதந்தை) பேர்ண் -சுவிஸ்
Tel: 031 - 3114960

Pub.Fr.

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,950 Frs. |
| Madras | - | 4,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# சமாதானத்திற்கு குரல் கொடுப்பவர்கள் குற்றவாளிகள்!

## - சிறீலங்காப்படை அறிவிப்பு

(14.01.01)

சமாதானத்திற்கு ஆதரவாக குரல் கொடுப்பதும், யுத்த நிறுத்தம் செய்யுமாறு கோரி ஊர்வலம், பேரணி நடத்துவதும் சிறீலங்காப்படையினரால் தடை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே. தற்போது இவ்வாறான நடவடிக்கைளில் ஈடுபடுபவர்கள் குற்றவாளிகள் எனக்கருதி தண்டிக்கப் படுவார்கள் எனப் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வாழ் மக்களே என்ற தலைப்பில் சிறீலங்காப் படையினரால் விடப்பட்ட துண்டுபிரசுரம் 'ஒன்றிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இத்துண்டுப் பிரசுரம், மட்டு. மாநகரசபையின் ஒலிபரப்பு சேவையிலும் ஒலிபரப்பபட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, பாதுகாப்பு படையையும், அரசையும், இந்த பொய்யான யுத்த நிறுத்தத்திற்கு வருமாறு புலிகள் தங்கள் அரசியல் பிரிவின் உறவினர்கள் மூலம் ஊர்வலம், எதிர்ப்பு பேரணிகள் ஊடாக வற்புறுத்துகின்றனர். இந்த எதிர்ப்பு பேரணி மட்டக்களப்பிலும் அதையண்டிய பகுதிகளிலும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர். இப்படியான வேலைகளில் சிக்கி அரசுக்கு எதிராக செயற்பட்டு குற்றவாளியாகி விடாதீர்கள். பொய்யான யுத்தநிறுத்தத்திற்காக ஏமாறவேண்டாம். சமாதான பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராகவே உள்ளது. அதற்கு யுத்தநிறுத்தம் தேவையில்லை. உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பயங்கரவாதிகளை ஒழிக்கவேண்டும். நாங்கள் உங்களுக்காக அதை செய்துதர கடமைப்பட்டுள்ளோம் என அதில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போர் நிறுத்தம் செய்யுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும், சமாதான ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவோர் குற்றவாளிகளாக கருதப் படுவார்கள் என்று படையினர் ஒலிபெருக்கி மூலமும், துண்டுப் பிரசுரம் மூலமும் அறிவித்திருப்பதற்கு, மட்டு. திருமலை ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மட்டக்களப்பு மாவட்ட சிறீலங்கா இராணுவ கட்டளையிடும் அதிகாரியும், பாதுகாப்பு இணைப்பதிகாரியுமான பிரிகேடியர் வி.ஆர்.அன்ரனியைச் சந்தித்து தமது கடும் ஆட்சேபனையை தெரிவித்துள்ளார். சமாதானம் ஏற்படவேண்டும், போர் நிறுத்தப்படவேண்டும் என கோருபவர்கள் குற்றவாளியாக கருதப்படுவார்கள் என கூறுவது ஆபத்தான ஒரு விடயமாகும், இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடும் என ஆயர் மேலும் தெரிவித்தார்.

# அதிபர்கள் ஆசிரியர்களுக்கு தமிழ்க்குழு மிரட்டல்

(14.01.01)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிறீலங்கா படையினர், பொலிசாரின் கடும் எச்சரிக்கைகளுக்கு மத்தியில் ஏற்பாடு செய்துவரும் பொங்கும் தமிழ் எழுச்சி நிகழ்வை குழப்பும் நடவடிக்கையில் தமிழ்க் குழுவொன்று மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக யாழ். குடாச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா அரச படைகளுடன் இணைந்து இயங்கும் இக் கூலிக்குழுவின் பிரதேச சபைத் தலைவர் ஒருவர், அப் பகுதியில் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களை தனது அலுவலகத்திற்கு வரவழைத்து, எழுச்சி நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது மாணவர்களை அத்தினத்தில் பாடசாலையைவிட்டு தேவையற்ற விதத்தில் வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது என எச்சரித்து அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாசை பற்றிய முடிவு ஒரே குரலில் ஒலிக்க வேண்டும் என்பதற்காக 17ம் திகதி இடம்பெறவுள்ள இந்த எழுச்சி நிகழ்வில் சகல தரப்பினரும் பங்குபற்றவேண்டும் என ஆதரவைக்கோரி, இதன் ஏற்பாட்டாளர்கள் பாடசாலைகள், கிராமங்கள் தோறும் சென்று பிரசாரம் செய்து வருவது தெரிந்ததே. இதனைத் தடுக்கும் முகமாகவே இக் கூலிக்குழு இந் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

# மல்லாவியில் 22 குழந்தைகள் நிறைகுறைந்து பிறந்தன

(14.01.01)

வன்னிப் பகுதி மீது சிறீலங்கா அரசு விதித்துவரும் பொருளாதாரத் தடைகளால் போசாக்கான உணவுகளின்றி கர்ப்பிணிப் பெண்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் மல்லாவி வைத்தியசாலையில் 22 குழந்தைகள் நிறை குறைந்து பிறந்துள்ளதாக வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த மாதம் பிறந்த 101 குழந்தைகளிலேயே 22 குழந்தைகள் நிறைகுறைந்து பிறந்துள்ளன. இது எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த மாதம் மல்லாவி வைத்தியசாலையில் 12,917 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களில் 2,034 பேர் மலேரியாவுக்கும், காய்ச்சலுக்கு 2,138 பேரும், வயிற்றோட்டத்திற்கு 209 பேரும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர் எனவும், இதேவேளை வைத்தியசாலையில் தங்கியிருந்து 964 பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள் எனவும் புள்ளி விபரம் தெரிவித்துள்ளது.

# பாசிக்குடா நீற்றுச்சூழைகள் பொதுமக்களால் தரைமட்டமாக்கப்பட்டன!

(14.01.01)

மட்டு. கல்குடா-பாசிக்குடாவில் இயங்கி வந்த சுமார் 80 நீற்றுச்சூழைகள் அப்பகுதி மக்களால் கடந்த வியாழனன்று உடைத்துத் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள கடற்கரையிலும் அதை அண்டிய பகுதிகளிலும் முருகைக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீறு தயாரிப்பதில் சிறீலங்கா பொலிசாரினதும், இராணுவத்தின் உதவியுடன் வெளியிடங்களைச் சேர்ந்த பலர் ஈடுபட்டிருந்தனர். இந்த நீற்றுச்சூழைகளினால் பாசிக்குடா கிராமத்தில் கடலரிப்பு ஏற்பட்டு கிராமத்து வீதிகள் மற்றும் வளவுகள் கடலினால் அரிக்கப்பட்டுவதுடன் சூழலும் மாசடைந்து வருகின்றது. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இந் நடவடிக்கையை நிறுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சிறீலங்காப் பொலிசாரின் தலையீட்டினாலும் எச்சரிக்கைகளினாலும் மீளப்பெறப்பட்டன. இந்நிலையில் அண்மையில் மட்டக்களப்பில் வீசிய சூறாவளியின்போது பாசிக்குடாக் கிராமம் கடல் நீரினால் மூழ்கியதால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகினார்கள். கடலரிப்புக் காரணமாக இக் கிராமத்திலுள்ள கிணறுகள் உப்பு நீராக மாறியுள்ளன.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள், கடந்த வியாழனன்று இரவோடிரவாக நீற்றுச்சூழைகளை உடைத்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். இதேவேளை மக்களின் இந்நடவடிக்கையால் ஆத்திரமடைந்த பொலிசாரும் இராணுவத்தினரும் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன்போது காயமடைந்தவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(14.01.01)

சிறீலங்கா அரசினால் பல ஆண்டுகளாக நீடிக்கப்பட்டுவரும் அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப் பட்டுள்ளது. அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை வாக்களிப்பு பாராளுமன்றத்தில் இடம்பெற்றவேளை, பிரேரணைக்கு ஆதரவாக 110 வாக்குகளும் எதிராக 16 வாக்குகளும் அளிக்கப்பட்டமையை அடுத்து, 94 மேலதிக வாக்குகளால் நீடிப்பு நிறைவேற்றப்பட்டது.

# ஓய்வு பெறும் பெரேரா

(14.01.01)

சிறீலங்கா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரெல் ஜானகப் பெரேரா தனது பணியில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 31ம் திகதியுடன் தனது 34 வருட இராணுவ பணிய்யை முடிக்கும் பெரேரா அத்துடன் ஓய்வு பெறவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ALL @ NET

INTERNET, CARTES TELEPHONIQUE, TELEPHONE.

161, Rue de Paris, 93260 Les Lilas.

Tél: 01 43 62 64 76

Ouverture 7j/7 -09h30 à 20h00

Europe 10 Heure pour 100F

குறைந்த செலவுடன் நீண்ட நேரம் உரையாட சர்வதேச தொலைபேசி அட்டைகள்.

Pub Fr.

# தமிழ் பத்திரிகைகளைத் தடைசெய்ய படையினர் திட்டம்

(14.01.01)

தமிழர் பகுதிகளில் மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொள்கின்ற மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டுகின்ற பத்திரிகைகள் மற்றும் விடுதலைப் புலிகள் வெளியிடுகின்ற அறிக்கைகளை பிரசுரிக்கும் பத்திரிகைகளை தடைசெய்வதற்கு சிறீலங்கா இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக சிறீலங்காவின் ஊடகத்துறை தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், புலிகள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், படையினரின் நடவடிக்கைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதத்தில் செய்திகளை வெளியிட்டும் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து சில பத்திரிகைகள் வருவதாகக் கூறியுள்ளதுடன், புலிகளுக்கு ஆதரவான விதத்தில் செய்திகளையும் அறிக்கைகளையும் வெளியிடுவது கவனமாகத் தயாரிக்கப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் என்பதை இராணுவ அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர் எனவும் கூறியுள்ளது. சில உள்ளூர் வெளியூர் ஊடக நிறுவனங்களின் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது அவை இராணுவ நடவடிக்கைகளின் அடிப்படையில் அமையாத அறிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது தெரிய வந்துள்ளது எனவும், அது தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் ஓரிரு பத்திரிகைகள் இராணுவத்தினரால் தடைசெய்யப்படலாம் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சிறையில் பாதுகாப்பில்லை! தமிழ்க் கைதிகள் முறைப்பாடு

(14.01.01)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தங்களுக்குப் போதிய பாதுகாப்பில்லை என கொழும்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரிகள் அடங்கிய குழுவினர் களுத்துறை சிறைச்சாலைக்கு விஜயம் செய்து, தமிழ் இளைஞர்களின் நிலைமைகளை நேரில் பார்வையிட்டு உரையாடியபோது தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் கூறுகையில், தமக்கு ஒழுங்கான மருத்துவ வசதிகள், தரமான, அளவான உணவுகள் வழங்கப்படுவதில்லை எனவும், அத்துடன், வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உள்ள தமது குடும்பத்தினர் அல்லது உறவினர்கள் களுத்துறைக்குத் தங்களை வந்துபார்ப்பதில் பல்வேறு சிரமங்களையும் துன்பங்களையும் எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன், மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகளும் தங்களை வந்து பார்ப்பதில்லை என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் பைஸ் முஸ்தபா, மனித உரிமைகள் குழுவின் ஆணையாளர்களாகிய மனோரி முத்தெட்டுவேகம, என்.செல்வகுமாரன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளாகிய எஸ்.சிறீதரன் ஜ.எம்.பௌமி, ரி.ஏ.ரி ஜமால்தீன் ஆகியோர் இக் குழுவில் சென்றிருந்தார்கள். கடந்த 4ம் திகதி களுத்துறையில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

## யாழில் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தி சக சிப்பாய் கொலை

(14.01.01)

யாழ். தென்மராட்சி மிருசுவில் பகுதியில் சிறீலங்கா சிப்பாய் ஒருவர் சக படையினரால் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று கடந்தவாரம் இடம்பெற்றுள்ளது. புதிதாக படையில் இணைந்திருந்த மேற்படி சிப்பாயை கொன்றது தொடர்பாக இரு படையினரை சிறீலங்கா இராணுவப் பொலிசார் கைது செய்து விசாரணை செய்துள்ளனர். இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவ்ருவதாவது,

கடந்த 6ம் திகதி மிருசுவில் பகுதியில் சிறீலங்காவின் 5வது கவசவாகனப் படையணியின் 7வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு மது போதையிலிருந்த ஒரு சில படையினர் புதிதாக இணைந்திருந்த பயிலுனரான சிப்பாயை கட்டாயக் தன்னினச்சேர்க்கைக்கு உட்படுத்திய பின் படுகொலை செய்துவிட்டு அருகிலுள்ள வாய்க்காலுக்குள் சடலத்தைப் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இவரைக் காணாது தேடிய போதே இவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக்வும் இதனையடுத்து மேற்கொண்ட விசாரணைகளின்போதே இரு படையினர் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது உண்மைகள் தெரியவந்ததாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

## சொல் ஹெய்ம்-இந்தியத் தூதர் சந்தித்திப்பு

(14.01.01)

கடந்த புதனன்று கொழும்பு சென்ற நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல் ஹெய்ம் சிறீலங்காவின் இந்தியத் தூதர் கோபால்கிருஸ்ண காந்தியைச் சந்தித்து பேசியுள்ளார். சுமார் இரண்டு மணி நேரம் இச் சந்திப்பு இடம்பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் என்ன பேசினார்கள் என்பதை வெளியிட இந்தியத் தூதரகம் மறுத்துவிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. இதேவேளை சொல் ஹெய்ம் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரட்ணசிறி, வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லீம் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 16 மீனவர்கள் திரும்பினர்

(14.01.01)

யாழ். குடாக் கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போனதாகக் கூறப்பட்ட 16 மீனவர்கள் புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ். குடா செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த நான்கு மாதங்களின் முன்னரும், கடந்த ஐந்து வாரங்களின் முன்னரும் காணாமல்போன மீனவர்கள் 16 பேரே கடந்த வாரம் வன்னியில் வைத்து விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மீண்டும் ஆள்சேர்க்கும் முயற்சியில் இராணுவம்

(14.01.01)

சிறீலங்கா இராணுவம் கடந்த பல தடவைகளாக எடுத்துவரும் படைக்கு ஆள்சேர்க்கும் நடவடிக்கைகள் வெற்றியளிக்காத நிலையில் மீண்டும் படைக்கு ஆள்ச்சேர்க்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இராணுவத்துக்கு மேலும் 15,000 பேரைத் திரட்டும் நடவடிக்கை மீண்டும் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக சிறீலங்கா இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்குள் மட்டும் படைகளுக்கு ஆட்களைத்திரட்ட ஐந்து தடவைகள் முயற்சி எடுக்கப்பட்டது என்றும் ஆனால் எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்கவில்லை என்றும் தலைமையகத்தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினர் மோட்டார் சைக்கிள் மோதி குடும்பஸ்தர் மரணம்

(14.01.01)

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் சிறீலங்கா அதிரடிப்படையினரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த பரமேஸ்வரன் ஆனந்தமூர்த்தி என்ற குடும்பஸ்தர் கொழும்பு வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாயன்று மரணமடைந்துள்ளார்.

## ஊடகவியலாளர் ஒன்றியத் தெரிவு

(14.01.01)

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தெரிவு கடந்தவாரம் இடம்பெற்றது. இதில் தலைவராக பி.மாணிக்கவாசகரும், செயலாளராக ஆர். பாரதி, பொருளாளராக சிறிகஜன், உப தலைவர்களாக எஸ். கணேசன், நடேசன், ஏ.எல்.எம். சலீம் ஆகியோரும் நிர்வாக சபையின் ஆலோசனைக் குழு அங்கத்தவர்களாக வீ.தேவராஜ், வீ.தனபாலசிங்கம், டி.சிவராம், எஸ்.எம்.கோபாலரட்ணம், இரா.செல்வராஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

37, Palmerston Road, Walthamstow E17 6PR

Tel: 02085219767

தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!



Pub.Lon.

# படையினரின் ஆனையிறவுக் கனவு
# புலிகள் எவ்வளவு தூரம் பின்வாங்குவார்கள்?

விடுதலைப் புலிகளை வெற்றிகொள்வதன் மூலமே சமாதானத்திற்கான பாதையைத் திறக்க முடியும் என தனது 120,000 படையினருக்கும் நாட்டு மக்களுக்கும் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் சிறீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத்தை ஒடுக்கி யுத்தத்தில் வெற்றி கொள்வதே எமது இலக்கு, இதற்குத் தேவையான நவீன ஆயுதங்கள் கிடைத்த வண்ணமுள்ளன, எனவே இந்த புத்தாண்டு படையினருக்கு ஒரு வெற்றிகரமான ஆண்டாக இருக்க வேண்டுமென்றும் அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளதுடன், கடந்த வருட இறுதியில் நாம் அடைந்த வெற்றிகளை பாதுகாக்கும் அதேவேளை, புது வருடத்தில் பயங்கரவாதத்தை வேரோடு கிள்ளியெறிய நாம் திடசங்கற்பம் பூணுவோம் எனவும் கூறியுள்ளார். இராணுவத் தளபதிக்கு தான் எந்தவகையிலும் சளைத்தவன் இல்லை என்ற வகையில், அலரி மாளிகையில் புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தில் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பேசுகையில், பயங்கரவாதிகளுடன் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தப் பயங்கர வாதத்திற்கு எதிரான போர் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமெதுவும் இல்லை என அழுத்திக் கூறியுள்ளார்.

> விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தத்தை அறிவித்துள்ள போதிலும் தற்பாதுகாப்புக்காக பதிலடி கொடுக்கவும் தயங்கமாட்டோமென்று போர் நிறுத்த அறிவிப்பின்போது கூறியிருந்தனர். அந்த வகையில் விடுதலைப் புலிகளின் பின்வாங்கலும் படைத்தரப்புக்கு விட்டுக் கொடுத்தலும் எழுதுமட்டுவாளுக்கு அப்பாலும் தொடருமா என்பது கேள்விக்குறியே.

கடந்த 5ம் திகதி நடைபெற்ற மந்திரிசபை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை அரசாங்கம் நிராகரித்துள்ளது. மொத்தத்தில் இலங்கை மீண்டும் போர் கவசத்திற்குள் இறுக்க மூடப்பட்டுள்ளது என்பதையே அரச தரப்பு நடவடிக்கைகள் உறுதிப்படுத்துக்கின்றன. சிறீலங்கா அரசும், படைத்தரப்பும் விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை சாதகமாகக் கொண்டு படை நகர்வை மேற்கொண்டு பிரதேசங்களை விஸ்தரித்துக் கொள்ளலாமென நினைக்கின்றன. இந்த நவடிக்கைகளில் ஓரளவு வெற்றியையும் அவர்கள் பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரையிலான ஏ—9 வீதியை மிக இலகுவாகத் தமது வசமாக்கிக் கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு நடைமுறையிலிருக்க, எவ்வித எதிர்ப்புமின்றி ஏ—9 வீதியைக் கைப்பற்றிவிட்டதாகப் படைத்தரப்பும் அறிவித்துள்ளது.

இந்த ஒரு பின்னணியிலேயே படைத்தரப்புப் பெற்றுக்கொண்டுள்ளதாகக் கூறும் வெற்றிகளுடன் மேலும் தொடர்ந்தும் வெற்றிகளைப் பெற்று யாழ். குடாநாட்டிலிருந்து விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விடலாம் என்ற நம்பிக்கையில் படைத்தரப்பு மிதந்து கொண்டிருக்கின்றது. எனவேதான் போர் நிறுத்தம் ஒன்றுக்கு வருமாறு சர்வதேச அரங்கிலிருந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் ஆனையிறவைப் படைத்தரப்பு கைப்பற்றும்வரை சர்வதேச அழுத்தத்திற்கு இசைந்து கொடுக்காத போக்கினை சிறீலங்கா அரசு கடைப்பிடித்து வருகின்றது. அதாவது போர் நிறுத்தமொன்றுக்கு இணங்குவதற்கு முன்னர் ஆனையிறவைக் கைப்பற்றுவதற்கு படைத்தரப்புக்குக் கால அவகாசம் வழங்குவதாகவே அரசின் போக்கு உள்ளது. எதிர்வரும் 24ம் திகதியுடன் விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சப் போர் நிறுத்தம் முடிவுக்கு வருகின்றது. இந்த போர் நிறுத்தகால எல்லைக்குள் சிறீலங்கா அரசும், படைத்தரப்பும் தமது ஆனையிறவு நோக்கிய பயணத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யலாமென நம்புகின்றன. இந்த வகையில் தற்போதைக்கு விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றுவதற்கு இடமில்லை.

அத்துடன் விடுதலைப் புலிகளின் ஒருதலைப் பட்சமான போர் நிறுத்த அறிவித்தலுக்கு சாதகமாக சிறீலங்கா அரசின் தரப்பிலிருந்து போர் நிறுத்த அறிவித்தல் தொடர்பான பதில் வருவதற்கும் இடமில்லை. மொத்தத்தில் மீண்டும் பெரும் மோதலொன்று வடபுலத்தில் வெடிப்பதற்கான சாத்தியங்களே வெகுவாக உள்ளன. இத்தகைய பெரும் மோதலுக்கு வழிசமைப்பதாக சிறீலங்கா அரசினதும் படைத்தரப்பினதும் செயற்பாடுகள் அமைய உள்ளன. விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தத்தை அறிவித்துள்ள போதிலும் தற்பாதுகாப்புக்காக பதிலடி கொடுக்கவும் தயங்கமாட்டோமென்று போர் நிறுத்த அறிவிப்பின்போது கூறியிருந்தனர். அந்த வகையில் விடுதலைப் புலிகளின் பின்வாங்கலும் படைத்தரப்புக்கு விட்டுக் கொடுத்தலும் எழுதுமட்டுவாளுக்கு அப்பாலும் தொடருமா



என்பது கேள்விக்குறியே.

சமாதான நல்லெண்ண சமிக்ஞைக்காக தொடர்ந்தும் விட்டுக் கொடுப்பதானது விடுதலைப் புலிகளுக்கு அச்சுறுத்தலாகவே இருக்கும். அதேவேளையில் அரசும் படைத்தரப்பும், விடுதலைப் புலிகள் பலவீனமாகி விட்டார்கள் தம்மைத் தயார் படுத்திக் கொள்வதற்காகவே போர் நிறுத்தம் மற்றும் சமாதானம் பற்றிப் பேசுகின்றனர் என்று கூறுகின்றனர். விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்துள்ளனர் என்ற தமது கருத்தின் அடிப்படையிலேயே வெற்றிகளைக் குவித்துவிடலாமென்று நம்புகின்றனர். அத்துடன் போர்க்களச் சூழலில் சமநிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு பேச்சு வார்த்தைக்குப் போகலாமென்ற கருத்திலும் சிறீலங்கா தரப்பு அமிழ்ந்துபோயுள்ளது. எனவேதான் போர் ஒருபுறம் சமாதான பேச்சுவார்த்தை மறுபுறம் என்ற கொள்கையில் அரசு நாட்டம் கொண்டுள்ளது. உண்மையில் இந்தக் கொள்கை விடுதலைப் புலிகளுக்கு ஏற்புடையதாகும். ஏனெனில் அவர்களே போர்க்கள நிலவரத்தில கையோங்கியவர்களாக உள்ளனர். இத்தகைய ஒரு சாதகமான நிலையில் விடுதலைப் புலிகள் இருந்தபோதும் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை அதற்கான நல்லெண்ணச்சூழலை ஏற்படுத்தப் போர் நிறுத்தம் என்றெல்லாம் யோசனைகளை முன்வைப்பதுடன் அதனைச் செயலிலும் காட்டவும் முன்வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் இத்தகையப் போக்குக்கு ஒரே காரணம், சிறீலங்கா அரசு கூறுவது போன்று பலவீனம் அல்ல. சர்வதேச அரங்கின் நல்லெண்ணத்தைச் சாம்பாதிப்பதற்கும், அதனைத் தமிழர் போராட்டம் நோக்கி திசைதிருப்பி நியாயப் படுத்துவதற்குமே ஆகும். எனவேதான் சர்வதேச அரசியல் நலன்களுக்காக தமது வெற்றிகளைத் தாரை வார்த்துக் கொடுத்துக் கொண்டிருகின்றனர். சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது அரசு வெற்றிப் பெருமிதத்தில் மிதந்தது. யாப்பட்டுணாவைக் கைப்பற்றியதற்காக பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் படைத்தரப்பின் உயர் அதிகாரிகளுக்கும் பட்டங்களை வழங்கி சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா கௌரவித்தார். அவ்வேளையில் விடுதலைப் புலிகளுக்கு உதவ எந்தவொரு வெளிநாடும் முன்வரவில்லை. யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சி தமிழ் மக்களின் மனதில் ஏற்படுத்திய ரணத்தைக்கூடச் சர்வதேச சமூகம் கணக்கிலெடுக்க வில்லை. ஆனால் ஓயாத அலைகள்—3 படைநடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழும் சூழ்நிலை உருவாகியபோது சிறீலங்கா அரசு அகில உலக நாடுகளிடமும் அழுது புலம்பியதுடன், யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியை தடுத்து நிறுத்துவதற்கான உதவியையும் கோரி நின்றது. உலக நாடுகள் பலவும் சிறீலங்கா அரசின் புலம்பலுக்குச் செவிசாய்த்து உதவ முன்வந்தன, உதவின.

இதனால், யாழ்ப்பாணம் மீண்டும் விடுதலைப் புலிகளின் கைகளுக்கு வருவது சர்வதேச சமுகத்தின் அங்கீகார உதவியுடன் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்தவகையில் சர்வதேச சமுகத்தின் முன் தமிழர்களின் போராட்டத்தை நியாயப்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இன்று கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். அத்துடன் சமாதானத்தின் மீது தமக்குள்ள ஆர்வத்தை அக்கறையை உலகச் சமூகத்திற்கு உணர்த்துவதற்காகவும் அவர்களின் இன்றைய நடவடிக்கைகள் அமைந்துள்ளன. மொத்தத்தில் சமாதானப் பேச்சு வார்த்தைக்கோ போர் நிறுத்தத்திற்கோ காலம் கனியவில்லை. இன்னும் ஒரு பேரழிவுக்கும் உயிரிழப்புகளுக்குமே சிறீலங்கா அரசு தயாராகி வருகின்றது.

ஆனால், சமாதானப் பேச்சு வார்த்தைகள் மற்றும் போர் நிறுத்தம் குறித்துச் சாதகமான சூழலை இலங்கையின் அரசியல் போர்க்கள நிலவரத்தில் காணமுடியாதிருந்தபோதும், அமெரிக்கத் தூதுவர் இனிவரும் காலங்களில் இலங்கையின் இனவிவகாரம் தொடர்பாக ஆச்சரியப்பட வைக்கும் நிகழ்வுகள் நடைபெற உள்ளதாகத் தெரிவித்துள்ளார். கடந்த 5ம் திகதி வெள்ளிக்கிழமை தம்மைச் சந்தித்த தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவிடமே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

போர் நிறுத்தத்திற்கு வெளிநாடுகள் தம் நல்லெண்ணத்தைப் பயன்படுத்த இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்ற கோரிக்கையைப் பிரதானமாக முன்வைத்து தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவினர் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திப்பதாக முடிவெடுத்திருந்தனர். இதற்கமையவே அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பு இடம் பெற்றுள்ளது. மேற்படி சந்திப்பின்போது தமிழ் கட்சிகள் போர் நிறுத்தத்திற்கு அரசை வற்புறுத்த வேண்டுமெனக் கோரியுள்ளன. இதற்குப் பதிலளித்த அமெரிக்கத் தூதுவர், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுப் பேச்சு வார்த்தைக்கு வருவார்களா? இதற்கு விடுதலைப் புலிகளை உங்களால் வற்புறுத்த முடியுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் விடுதலைப் புலிகளின் கடந்த காலச் செயற்பாடுகள் நம்பிகை தருவனவாக இல்லை. தற்போது மாத்திரம் அவர்களை எப்படி நம்புவது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மொத்தத்தில் சிறீலங்கா அரசாங்கத்தின் உத்தியோகபூர்வற்ற பேச்சாளர் போன்று சிறீலங்காவிலுள்ள அமெரிக்கத் தூதுவரின் பேச்சுகள் அமைந்ததாக தமிழ் பிரதிநிதி ஒருவர் இச்சந்திப்புப் பற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

**கொழும்பிலிருந்து**
**ரி.தேவராஜ்**

அதேவேளையில் கடந்த 3ம் திகதி அமெரிக்காவும் சிறீலங்காவும் நாடுகடத்தல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. இப்புதிய உடன்படிக்கை 1931ம் ஆண்டு அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட குற்றவாளிகளை நாடுகடத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட பண்டரவளை பிந்துனுவெவ திறந்தவெளிச் சிறைச்சாலையில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை, அண்மையில் மிருசுவிலில் ஐந்து வயதுச் சிறுவன் உட்பட எட்டுப்பேர் படுகொலை செய்யப்பட்டது குறித்து வாய் திறக்காத அமெரிக்கா, நாடு கடத்தல் உடன்படிக்கையில் அவசர அவசரமாகக் கைச்சாத்திட வேண்டிய தேவை ஏன் வந்தது என்று தெரியவில்லை. மொத்தத்தில் இலங்கை இனவிவகாரம் உள்நாட்டுச் சிக்கல் என்ற நிலையிலிருந்து சர்வதேச சிக்கல்களுக்குள் இழுத்துவிடப் படுகின்றது என்பதையே மேற்கூறிய சம்பவங்கள் காட்டி நிற்கின்றன.

Book a Flight
கொழும்பு, சென்னை சென்றுவர இந்திய விசா வசதிகளுடன் மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்!
மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்
Tel: 031 318 44 60
Natel 079 622 46 61
Fax: 031 318 44 61
Eamil: info@sivatravel.ch
Siva Travel
Worldwide Travel Service
பிரயாண காப்புறுதி! தமிழ் நாட்டு சுற்றுலா ஒழுங்குகள், மற்றும் விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்
SIVA TRAVEL AND FINANCE (PVT) LTD
Spitalgasse- Passage 16,
3011 BERN
Pub

# 2000 ஆண்டு வீதி விபத்துகளில் தமிழ்நாட்டில் 8,561 பேர் மரணம்

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் இடம்பெற்ற வீதிவிபத்துக்களில் மட்டும் 8,561 பேர் உயிரிழந்துள்ளதாக வீதிப் போக்குவரத்துத்துறை அதிகாரி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இறுதி வரைக்கும் 44,753 விபத்துக்கள் இடம்பெற்றதாகப் பதியப்பட்டுள்ளதாகவும், இதில் 8,561 பேர் பலியாகியுள்ளனர், 7,670 பேர் படுகாயமடைந்துள்ளனர், 41,227 பேர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்வேறு மேம்பாலங்களை அமைத்து போக்குவரத்து நெரிசல்களைக் குறைத்துள்ளபோதிலும் விபத்துக்கள் அதிகரித்து வருவது கவலையானதெனத் தெரிவித்துள்ளது தமிழக அரசு. பெரும்பாலான விபத்துக்கள் ஓட்டுநர்களின் கவனமின்மையாலேயே ஏற்பட்டுள்ளது எனக்கூறியுள்ளது. கடந்த ஆண்டு இடம்பெற்ற விபத்துக்களில் 43,044 விபத்துக்கள் சாரதிகளின் தவறினால் ஏற்பட்டமை என போக்குவரத்துத்துறை அறிக்கை குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1999ம் ஆண்டு 9,653பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர்.

# சென்னையில் மனித உரிமை மாநாடு

மனித உரிமைகள் மீறப்படுவதை, கண்டித்தும், மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சென்னை புதுப்பேட்டையில் மனித உரிமைகள் மாநாடு, ஒன்று இவ்வாரம் நடாத்தப்பட்டுள்ளது. மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் பாலகுரு தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் வீரப்பன் பிரச்சினையில் அதிரடிப்படையினர் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள், சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் உட்பட பல விடயங்கள் சுட்டிக்காட்டி உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இம் மாநாட்டில் பேசிய முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன், அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவித்துவரும் சிங்கள இராணுவத்திற்கு போர்க் கப்பல் ஒன்றினை இந்திய அரசு அளித்தது மனிதாபிமானமற்ற செயல். அப்பட்டமான மனித உரிமை மீறல்களை செய்துவரும் சிங்கள அரசை கண்டிப்பதற்கு பதில் அவர்களுக்கு ஆயுதம் கொடுத்து உதவுவதென்பது மிகவும் தவறான செயல் எனத் தெரிவித்தார்.

பழ. நெடுமாறன் அவர்கள் பேசுகையில், சந்தன வீரப்பன் பிரச்சினையில் எந்த விசாரணைகளையும் சந்திக்கத் தயார் எனத் தெரிவித்தார். மேலும் இம் மாநாட்டில் விடுதலை இராசேந்திரன், பெ.மணியரசன், சுப.வீரபாண்டியன் கவிஞர் இன்குலாப், அருட்தந்தை ஜீவா, கவிஞர் அறிவுமதி, கொளத்தூர் மணி, சுகுமாரன், திருமறவன், க.ப. சின்னராசு, மு.இராமச்சந்திரன், அ. விநோத் உட்பட பலர் எழுச்சியுரை ஆற்றியிருந்தனர்.

# ராமதாஸ் - கருணாநிதி சந்திப்பு

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தமிழக முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து பேச்சுக்களை நடாத்தியுள்ளார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் வாழப்பாடி ராமமூர்த்தியின் கட்சியான தமிழக ராஜீவ் காங்கிரஸ் இருந்தால் பாட்டாளி மக்கள் கட்சி இருக்காது என்ற பல்வேறு குழப்பகரமான செய்திகள் நிலவி வந்தநிலையில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.



சுமார் 30 நிமிடம் இடம்பெற்ற இச் சந்திப்பு வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள சட்ட மன்றத் தேர்தலில் கூட்டணியில் நீடிப்பது பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதன்போது தமிழக ராஜீவ் காங்கிரசை கூட்டணியில் இருந்து வெளியேற்றுவது குறித்தும் டாக்டர் ராமதாஸ் முதல்வர் கருணாநிதியிடம் கூறியிருந்ததாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பிணம் தின்னி கைது

உத்தரப் பிரதேசம் மாநிலத்தின் பிஜினோர் என்ற பகுதியில் சுடுகாடுகளில் பாதி எரிந்து மீதி எரியாமல் இருக்கும் பிணங்களை எடுத்துத் தின்று வந்த நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பிணம் தின்று வந்த நபர் ஒருவர் குறிப்பிட்ட சுடுகாட்டில் தான் இறந்தால் எரிக்கவேண்டாம் என தனது உறவினர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். அப்போது தான் அவர் தாங்கள் மூன்று பேர் சுடுகாடுகளில் உள்ள பிணங்களைத் தின்று வருவது பற்றி கூறியுள்ளார். தான் இறந்து அச்சுடுகாட்டில் எரித்தால் தன்னையும் மற்ற இரு நண்பர்களும் தின்றுவிடுவார்கள் என்ற அச்சத்தினாலே இதனைக் கூறியுள்ளார்.

இந் நிலையிலேயே, இவர் இறந்த சில தினங்களில் அவரது மற்றொரு நண்பர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் தாம் பிணங்கள் அரைகுறையாக எரிந்துகொண்டிருக்கும்போது அவற்றை வெளியே இழுத்து உண்பதாக பொலிசாரிடம் ஒத்துக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. குழுவில் அமர்த்தியா சென்

நோபல் பரிசு பெற்ற இந்தியப் பொருளியல் அறிஞர் அமர்த்தியா சென் சர்வதேச மனித நேய பாதுகாப்பு ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். எல்லைகளுக்குள் ஏற்படும் மோதல்கள் தவிர்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு ஆகிய பணிகளில் இக் குழுவினர் ஈடுபடவுள்ளனர். அமர்த்தியா சென் நியமிக்கப்பட்டமைக்கு சீனா உட்பட பல நாட்டின் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# இணையத்தளம் ஊடாக அமெரிக்க 'விசா'

சென்னையில் அமெரிக்க 'விசா' பெற விரும்புபவர்களுக்கு சென்னை அமெரிக்க துணைத் தூதரகம் இலகுவான வழியொன்றை வெளியிட்டுள்ளது. 'விசா' விற்கான விண்ணப்பங்களை `www.ttsdropbox.com என்ற இணையத்தளத்தில் உள்ள படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பி வைத்தால், அவர்கள் அவ் விண்ணப்பத்தை பரிசீலித்து உங்கள் இலத்திரனியல் முகவரிக்கு நீங்கள் எந்தத் திகதியில் தூதரகத்திற்கு சமூகமளிக்க வேண்டும் என்ற முன் அனுமதியை வழங்குவார்கள்.

## இந்தியச் செய்திகள்

# 50 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட கும்பமேளா விழா

வட இந்தியாவின் மிகவும் பிரசித்திபெற்ற விழாவாக கருதப்படும் கும்பமேளா விழா கடந்த 9ம் திகதி ஆரம்பமாகியது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இவ் விழாவின் ஆரம்ப நாளன்று மட்டும் சுமார் 50 இலட்சம் பக்தர்கள் கலந்து கொண்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வானில் உள்ள 12 கிரகங்களும் ஒரே நேர்கோட்டில் வருகின்றன. இந்நாளில் புனி நதிகளில் நீராடினால் புண்ணியம் என்ற ஐதீகம் சிலவுகிறது. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் ஒன்றாக சங்கமிக்கின்ற வட இந்தியாவின் அலாகாபாத் நகரில் தான் கும்பமேளா விழா நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வு அடுத்த மாதம் 28ம் திகதிவரை இடம்பெறும். இதில் ஐந்துகோடி வரையான மக்கள் கலந்து கொள்வார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

### 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அலகாபாத் கும்பமேளா விழாவில் இருந்து சில காட்சிகள்



தன்னை கடவுளாக வேடமிட்டு வந்த பெண் பக்தர் ஒருவர்



பல வருடங்களாக தனது கைகளை உயர்த்தியபடி அமர்ந்திருக்கும் பாபா விஸ்ப பாரதி முனிவரைச் சுற்றி அவரது வெளிநாட்டு பக்தர்கள்.



கும்பமேளாவில் கலந்துகொண்ட முற்றும் துறந்த நிர்வாண சாதுக்களின் அணிவகுப்பு



ஜேர்மன் நாட்டில் இருந்து கும்பமேளாவில் கலந்து கொள்ள மிதிவண்டியிலேயே வந்து சேர்ந்த தத் என்பவர்.



கும்பமேளாவில் கலந்துகொண்ட பின்னர் சந்தோஷமாக கஞ்சாவை புகைக்கும் சாமியார் ஒருவர்.

# இந்தியா வரும் முஷாரப்?

காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் - இந்திய எல்லைப் பகுதியில் ஏற்படும் மோதல்கள் குறித்து பேச்சுக்களை நடாத்துவதற்கு பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் இந்தியாவிற்கு வர உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் வாஜ்பாய் பேச்சுக்களை நடாத்த வருமாறு முஷாரப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும், இவ் அழைப்பை ஏற்று இம்மாத இறுதியில் இந்தியா வருவார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இவரது பயணத்திற்கான ஏற்பாடுகளை பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அதிகாரிகள் கவனித்து வருவதாகவும் இவ்வாறான ஒரு பயணம் இடம்பெற்றால் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பயணமாக இது அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பின்போது இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக தீர்வு காணும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீர் பிரச்சினை தீர்ப்பது தொடர்பாக இந்திராகாந்தி - பூட்டோ ஒப்பந்தம் சிம்லாவில் இடம்பெற்றது. அதன் பின்னர் லாகூரில் வாஜ்பாய்க்கும் - நவாஸ் ஷெரிப்பிற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, இந்தியா முஷாரப்பை அழைப்பது தொடர்பாக அழைப்பு எதனையும் விடுக்கவில்லை என, தற்போது இந்தோனேசியாவிற்கு பிரதமர் வாஜ்பாயுடன் சென்றுள்ள பிரதமரின் முதன்மைச் செயலாளர் பிரிஷேஜ் மிஷ்ரா, பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் கூறியுள்ளார்.

## தமிழக மீனவர்கள் மீது சிறீலங்கா தாக்குதல்

தமிழக மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு மீனவர் படுகாயமடைந்துள்ளார். கடந்த செவ்வாயன்று, இந்திய கடற்பரப்பினுள் நுழைந்த சிறீலங்காப் படையினர் மீன்பிடிப் படகுகளை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கி வேட்டுக்களை நடாத்தியுள்ளனர். இதில் மீனவர்கள் கடலில் குதித்து பாதுகாப்பு தேடிக்கொண்டனர். எனினும் இதில் புதுக்கோட்டையைச் சேர்ந்த மீனவரான வீரன் என்பவர் துப்பாக்கி வேட்டுப் பட்டதில் படுகாயமடைந்து ஏனைய மீனவர்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிறீலங்கா கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

## சிறீநகரில் இரு குண்டு வெடிப்புகள்! 50 பேர் படுகாயம்

காஷ்மீர் தலைநகர் சிறீநகரில் கடந்த 9ம் திகதி இடம்பெற்ற இரு குண்டு வெடிப்பு சம்பவங்களில் 50 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். சிறீநகர் மத்திய தபால் அலுவலகம் முன்பாக காலை 9.45 மணியளவில் இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது அங்கு குழுமியிருந்த 36 பேர் படுகாயமடைந்தனர். இக்குண்டு வெடிப்பிற்கு இதுவரை யாரும் உரிமை கோரவில்லை.

இதேவேளை அதே தினம் ஆனந்தநாக் மாவட்டத்தில் உள்ள சந்தைப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு குண்டு வெடிப்பில் மேலும் 14 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## முருகனை சிறீலங்கா துணைத்தூதர் சந்தித்தார்

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முருகனை இந்தியாவின் சிறீலங்கா துணைத்தூதர் ஜெயசிங்கே வேலூர் சிறைச்சாலை சென்று சந்தித்துப் பேசியுள்ளார். சுமார் ஒரு மணிநேரம் இச் சந்திப்பு இடம் பெற்றதாகவும் முருகனின் மகளுக்கு இலங்கைப் பிரஜா உரிமை சான்றிதழ் வழங்குவது தொடர்பாகவே இச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாம்பை அடித்த இருவர் கைது

திருவில்லிபுத்தூர் பகுதியில் உள்ள இயற்கை சரணாலயம் பகுதியில் தமது ஆட்டை உண்ண முயன்ற மலைப்பாம்பை தாக்



கிய இருவர் வனத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். மயக்கமடைந்த நிலையில் கிடந்த மலைப்பாம்பு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தமது ஆடு கத்தும் சத்தம் கேட்டு அருகில் சென்று பார்த்தபோது மலைப்பாம்பொன்று அதனை சுற்றிவளைத்து உண்பதற்கு தயாராகிக்கொண்டிருந்ததாகவும், அதனால் அதனை கற்களாலும், தடியாலும் தாக்கியதாகவும் இதன்போது பலமாக காயமடைந்த பாம்பு வலியினால் ஆட்டைவிட்டு விட்டதாகவும் தொடர்ந்து தாக்கியதில் பாம்பு மயக்கமடைந்ததாகவும் கைதாகிய இருவரும் தெரிவித்தனர். மயங்கிய பாம்பை இவர்கள் தூக்கிக்கொண்டு சென்ற போது வனத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். தற்போது இருவரும் உசிலம்பட்டி நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பாம்பு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் உயிர் தப்பினால் மீண்டும் சரணாலயத்தில்கொண்டு சென்று விடப்படும் என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழக திரை விருதுகள் 2000



தமிழக அரசின் சிறந்த திரைப் படங்களுக்கான விருதுகள் வழங்கும் விழா கடந்த 12ம் திகதி வெள்ளியன்று சென்னையில் நடைபெற்றது. இதில் சிறந்த படம், மற்றும் கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. சிறந்த படமாக படையப்பா தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. இப் படம்தான் சிறந்த நடிகர், சிறந்த சிறப்பு நடிகை, சிறந்த பாடகர், ஆகிய 4 விருதுகளையும் பெற்றுக்கொண்டது. சங்கமம் மூன்று விருதுகளை பெற்றுக்கொண்டது.

## இவ்வாரச் செய்திகள்



- ★ சீனாவின் முன்னாள் பிரதமர் லீ பெங் 118 பேர் அடங்கிய உயர் நிலைக் குழுவுடன் இந்தியா வந்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையில் நட்புறவை பலப்படுத்தும் நோக்கமே இப் பயணம் என லீ பெங் தெரிவித்துள்ளார்.
- ★ காஷ்மீர் வடக்கு பகுதியில் இராணுவ நிலை மீது கடந்த வெள்ளியன்று எறிகணைத் தாக்குதல். ஐவர் காயமடைந்தனர்.
- ★ பாடசாலை செல்லும் மாணவ மாணவிகள் 6000 கிலோ புத்தகங்களை ஆண்டுதோறும் சுமந்து செல்வதாக அக்கு பஞ்சர் விஞ்ஞான அக்கடமி நடாத்திய ஆய்வொன்று தெரிவித்துள்ளது. நாள் ஒன்றுக்கு 20 கிலோ வீதம் மாதம் 500 கிலோ எனவும் வருடம் 6000 கிலோ எனவும் இந் நிறுவனம் கணித்து கூறியுள்ளது.
- ★ லீ பெங்கிற்கு கறுப்புக்கொடி காட்ட முயன்ற திபெத்தியர்கள் டெல்லியில் கைது செய்யப்பட்டனர். திபெத்திய பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு வருவதற்காகவே இந் நடவடிக்கையில் திபெத்தியர்கள் ஈடுபட்டதாக தெரிவித்தனர்.
- ★ நடிகை ரோஜா நூறு படங்களில் நடித்தமைக்கான பாராட்டு விழா சென்னையில் இடம்பெற்றது. இயக்குநர் பாரதிராஜா ரோஜாவையும் செல்வமணியையும் இணைத்துவைத்தார்.
- ★ டெல்லியில் இருந்து உத்திரப்பிரதேசம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்று பாலத்தின் மேல் இருந்து கீழே விழுந்ததால் ஏழு பேர் பலியாகி 25 பேர் படுகாயமடைந்தனர்.

## ஈழத் தமிழ்க்குலத்தை சூழ்ந்துள்ள இருள் விலகி பொற்காலம் மலரட்டும்!

### – வைகோ

ஈழத் தமிழர் வாழ்வில் விடுதலை மலர்ந்திடவேண்டும் என்பதை தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலர் வைகோ தனது தமிழர் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலர் வைகோ வெளியிட்டுள்ள தமிழர் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில், பாலஸ்தீனத்துக்கும் வட அயர்லாந்துக்கும் பரிந்து பேசும் உலகம், துன்பத்தில் தவிக்கும் ஈழத் தமிழர்களுக்காக மனிதாபிமானத்தோடு ஆதரவுக்குரல் கொடுக்க வருங்காலம் வழியமைக்கவேண்டும்; புராதனமான தமிழ்க் கலாச்சாரத்தைத் தனித்தன்மை கெடாமல் காப்பாற்றி வரும் ஈழத் தமிழ்க்குலத்தைச் சூழ்ந்துள்ள இருள் விலகி, விடியல் பிறக்க உலகெங்கும் வாழும் தமிழர்கள் கடமை மறவாமல் ஓங்கிக் குரல் கொடுக்கும் பொற்காலம் மலரட்டும் என்று தெரிவித்துள்ளார்.

## 127 வயதில் மரணம்

வங்கதேசத்தில் 127 வயதுடைய முதியவர் ஒருவர் இறந்துள்ளார். இவர்தான் வங்கதேசத்திலேயே மூத்தவராக திகழ்ந்தார் என்றும் கூறப்படுகிறது. வங்கதேசத்தில் உள்ள தாகூர்கான் மாவட்ட வடக்குப் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் அப்துல் பாசெத் ஒரு விவசாயி. அப்துல்லின் 2-வது மனைவிக்கு 60 வயது. 7 மகள்களும் உள்ளனர். சைக்கிள் ஓட்டுவதற்கு அப்துல் பிரியப்படுவார் எங்கு போனாலும் சைக்கிளில் தான் செல்வாராம். அதனால் தான் இவர் உடல் ஆரோக்கியத்துடன் இவ்வளவு அதிகமான காலம் வாழ்ந்தார்' என்று அந்தப்பகுதி டாக்டர்களும், கிராமவாசிகளும் தெரிவித்துள்ளனர்.

## உத்தரப்பிரதேசத்தில் கடும் குளிர் 90 பேர் பலி!

உத்தரப்பிரதேச மாநிலத்தில் கடும் குளிருக்கு 90 பேர் பலியாகி உள்ளனர். வட மாநிலங்களில் குறிப்பாக டெல்லி, பீகார், இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கடும் குளிருக்கு நூற்றுக்கணக்கான பேர் பலியாகி உள்ளனர். உத்தரப்பிரதேச மாநிலத்தில் குளிருக்கு 90 பேர் இறந்துள்ளனர். பனிப்பொழிவு காரணமாக வடமாநிலங்களில் தொடருந்து, வாகன மற்றும் விமான போக்குவரத்துக்கள் யாவும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பனிமூட்டம் காரணமாக தெருக்களில் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


# உலகச் செய்திகள்

# மத்திய அமெரிக்காவை தாக்கிய நிலச்சரிவு

## பல நூறு பேர் மரணம்!

(14.01.01)

மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடோர் சனியன்று இடம் பெற்ற மிகப் பெரும் நிலநடுக்கத்தினால் பாரிய சேதங்களை அடைந்தது. இதுவரை மேற்கொண்ட கணிப்புக்களின்படி 400 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் சல்வடோரிற்கு மேற்கேயுள்ள பகுதிகளிற்கு அனுப்பி, மீட்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இப்பகுதியே மிகப்பெரும் பாதிப்பினை அடைந்துள்ளதென அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எல்சல்வடோரின் பாதுகாப்புப் பிரிவினர் விடுத்த அறிக்கையில் 400 பேர் இறந்துபோயுள்ளனர் என உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளனர். மேலும் 16,148 வீடுகள் சேதமடைந்தும், 4202 வீடுகள் முற்றாக தரைமட்டமாகியுள்ளன என்றும் அறிவித்துள்ளனர். புனித பாப்பரசர் ஞாயிறன்று சர்வதேச சமூகத்தை மத்திய அமெரிக்க நிலநடுக்கப் பகுதியில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செல்லுமாறு கோரிக்கை விடுத்தார்.



நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுடன் மீட்புக் குழுவினர்

மேலும் பல ஆயிரம்பேர் காணாமலும் போயுள்ளனர். இதே சமயம் மற்றைய மத்திய அமெரிக்க நாடான குவாத்தமாலாவும் இந் நிலநடுக்கத்தினால் குறிப்பிடத்தக்க பாதிப்பினை அடைந்துள்ளதெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

செஞ்சிலுவைச் சங்கம் தனது பணியாளர்களை தலைநகர் சான்

மெக்சிக்கோ உடனடியாக விமானப்படை விமானமொன்றினை அப்பகுதிக்கு அனுப்பிவைத்தது. ஐக்கிய அமெரிக்கா, ஸ்பெயின், தாய்வான் போன்ற நாடுகள் தங்களது மீட்புக் குழுக்களையும் உதவிகளையும் அனுப்பிவைத்துள்ளன. சல்வடோர் ஜனாதிபதி பிரான்சிஸ்கோ பிளோரஸ் தேசிய அவசர நிலையை பிரகடனப்படுத்தி உயிர் தப்பியவர்களைக் கண்டுபிடிக்க சர்வதேச உதவியைக் கோரியுள்ளார்.

குவாத்தமாலாவில், தென் பகுதியில் நிலநடுக்கத்தினால் குறிப்பிடத்தக்க சேதங்கள் ஏற்பட்டுள்ளன என அரசு அறிவித்துள்ளது. இப் பகுதியில் உள்ள பிரபல தேவாலயம் ஒன்று தரைமட்டமாகி உள்ளதுடன் ஏராளமான வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன. இப்பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து இதுவரை எதுவும் அறியப்படவில்லை.

## எத்தியோப்பிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சோமாலியர்கள் ஆர்ப்பாட்டம்

(14.01.01)

எத்தியோப்பியா, சோமாலியாவின் பல பகுதிகளையும் ஆக்கிரமித்திருப்பதாகக்கூறி உடனடியாக சர்வதேச நாடுகள் தலையிட்டு இவ் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கவேண்டுமெனக் கோரி பல்லாயிரம் மக்கள், அந்நாட்டின் தலைநகர் மொகடிசுவில் ஞாயிறன்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். நகரின் மத்தியில் அமைந்திருந்த பிரதான மைதானமொன்றில் புதிய சோமாலிய அரசின் தலைவர்கள் உட்பட பல வர்த்தகப் பிரமுகர்கள் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மக்களுடன் கலந்துகொண்டனர். இவ் ஆர்ப்பாட்ட நிகழ்வின் மத்தியில் பேசிய ஓர் பிரபல வர்த்தகர், சோமாலியாவின் நிலப் பகுதியில் இருந்து எத்தியோப்பியா உடனடியாக தனது படைகளை விலக்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் சோமாலியாவில் இயங்கிவரும் சில குழுக்களுக்கு ஆயுத தளவாடங்களை வழங்குவதையும் எத்தியோப்பியா நிறுத்திக்கொள்ளவேண்டும் எனக் கூறினார். கடந்த வெள்ளியன்று பிரதமர் அலி காலிவ் கலாயாத் அமெரிக்காவில் ஐ.நா. சபையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது, ஐ.நா. இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு எத்தியோப்பியாவின் படைநகர்வை தடுத்து நிறுத்தவேண்டுமென கோரிக்கை விடுத்தார். அவர் மேலும் கூறுகையில் எத்தியோப்பிய படைகள் சோமாலியாவின் தென்மேற்கு எல்லைப் பகுதி நகரங்களில் இருந்து பல குழுத் தலைவர்களை கடத்திச் சென்று, அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை தங்களது பகுதியுடன் இணைத்துக்கொள்ளும் பத்திரங்களில் கையெழுத்துப் பெற்று வருகின்றனர். இது முழு எத்தியோப்பியாவின் 1/3 பகுதி நிலப்பரப்பாகும் என்றார்.

எத்தியோப்பியாவின் ஐ.நா. தூதுவர் அப்துல் மஜித் ஹுசேன் சோமாலியாவின் குற்றச்சாட்டுகளை முற்றுமுழுதாக மறுத்தார். பல வருடங்களாக, மக்கள் கலவரங்களால் சிதைந்து போயுள்ள தங்களது அண்டை நாட்டில், உறுதியான அமைதியான அரசு அமையவேண்டுமென்பதே தங்களது விருப்பம் எனவும் அவர் கூறினார்.

சோமாலியாவில் 1991ம் ஆண்டு முதல் மத்திய அரசு ஒன்று இயங்கவில்லை. கடந்த வருட இறுதியில் ஜிபுட்டியில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் புதிய அரசொன்று அமைக்கப்பட்டது. இப் புதிய அரசிற்கு பல குழுக்கள் ஆதரவு வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சோமாலியாவில் ஏற்கனவே பிரிந்துபோன இரண்டு பிராந்தியங்க்ள் தன்னாட்சியுடன் தங்களை நிர்வகித்து வருகின்றனர். சோமாலி லான்ட், புண்ட் லாண்ட் எனப்படும் இவைகள் சமாதானமாயும் உறுதியுடனும் தங்களது உறவுகளை வளர்த்து வருகின்றனர். இதற்கிடையே தலைநகர் மொகடிசுவில் இருந்து 155 மைல்கள் வடமேற்காகவுள்ள பைதோவா பகுதியில், சோமாலியாவில் ஐ.நா. கண்காணிப்பு நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று, அரச எதிர்ப்பாளர்களால் ஞாயிறன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜேர்மனி அமைச்சரவையில் மாற்றம்! அமைச்சர்களின் இராஜினாமாவிற்கு 'BSE' காரணமாகியது

(13.01.01)

ஜேர்மனிய அதிபர் ஜெராட் ஸ்ரூடர் தனது புதிய விவசாயத் துறை அமைச்சராக பசுமைக் கட்சியின் ரெனேட் குவேனாஸ்ட்டை நியமனம் செய்துள்ளார். அதேவேளை புதிய சுகாதார அமைச்சராக சோஷலிச ஜனநாயகக் கட்சியின் உல்லா ஸ்மிட்டை நியமித்துள்ளார்.

BSE எனப்படும் மாட்டுவிசர் என்னும் நோயானது ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டதும், அரசின் உதாசீனமான போக்குகளும் இந்நோய் தோன்றுவதற்குக் காரணமானது என்றும் மக்கள் மத்தியிலும், ஊடகவியலாளர் மத்தியிலும் விசனம் தெரிவிக்கப்பட்டதையடுத்து மேற்கண்ட அமைச்சர்கள் தங்களது பதவிகளை கடந்தவார ஆரம்பத்தில் ராஜினாமாச் செய்தனர். புதிய அமைச்சராகப் பதவியேற்ற குவேனாஸ்ட் கடந்த வருடங்களில் நடந்திருந்த முறைகேடுகள், பிழைகள் யாவும் களையப்பட்டு புதிய நடைமுறைகள் அடுத்துவரும் மாதங்களில் அமுலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார். மேலும் விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டுவரும் குறைகள் யாவையும் முறையாக அணுகி நடவடிக்கைகள் மேற்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் கூறினார். ஆனால் ஜேர்மனியில் 400000 வயதான மாடுகளை அழித்தல் எனும் கேள்விக்கே இடமில்லை என்றும் அவர் கூறினார். ஜேர்மனியில் கடந்த நவம்பர் மாதம் முதல் மேற்கண்ட நோய் அறிகுறியுள்ள 11 மாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்போது புதிய பரிசோதனைகள் மூலம் நாட்டின் சகல மாடுகளும் 'ஆகூக்' அறிகுறிகள் உள்ளனவா எனச் சோதிக்கப்பட்டுவருகின்றன.

கடந்த வாரம் பதவி விலகிய அமைச்சர்கள் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசியபோது மக்களிடம் நம்பிக்கையீனம் ஏற்பட்டதனாலேயே தாம் பதவிகளை இராஜினாமாச் செய்ததாயும், அரசுடனும் அரசின் புதிய நடவடிக்கைகளுக்கும் தமது ஒத்துழைப்பு தொடரும் என்றும் கூறியுள்ளனர்.

## கொன்கோர்ட் மீண்டும் வியாழனன்று பறக்கின்றது

(15.01.01)

ஏயார் பிரான்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான கொன்கோர்ட் விமானம் எதிர்வரும் வியாழனன்று மட்டுப்படுத்தப்பட்ட பறப்பு ஒன்றினை மேற்கொள்ளவிருக்கின்றது என விமான நிறுவன வட்டாரங்கள் கூறியுள்ளன.

பிரான்சின் பாரீஸ் சார்ல்ஸ் டி கோல் விமான நிலையத்தில் இருந்து மார்சேலுக்கு அண்மையில் உள்ள இஸ்திரெஸ் எனும் இடத்துக்கே இப் பயணம் அமையவுள்ளது. அங்கு இவ் விமானம் தரையில் பல சோதனைகளை மேற்கொள்ளவுள்ளது. கடந்த ஞாயிறன்று பிரெஞ்சு போக்குவரத்து அமைச்சர் கெய்சோ கொன்கோட் விமானங்கள் 2001ம் ஆண்டு மீண்டும் பறக்கும் எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜூலை மாதம் பாரீசுக்கு அருகில் 113 பயணிகளுடன் கொன்கோட் விமானம் விபத்துக்குள்ளாகிய தன் பின் முதன் முறையாக மீண்டும் இவ் விமான நிலையத்தில் இருந்து புறப்படவிருக்கின்றது. கடந்த வருட விபத்தின் பின் கொன்கோட் விமானங்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை விமான பாதுகாப்பு சங்கம் இரத்துச் செய்தது. இனிவரும் வாரங்களில் இடம்பெறும் தரை பரிசோதனைகளின் முடிவில் மீண்டும் இவ் விமானங்கள் பறப்பதற்கான உத்தரவாதம் மீண்டும் வழங்கப்படும் என்று எயார் பிரான்ஸ் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## தென்கொரிய கடலில் எண்ணெய் கப்பல் வெடித்து மூழ்கியது

(15.01.01)

தென் கொரியக் கடற்பகுதியில் 5,000 தொன் கொள்ளக் கூடிய எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று வெடித்து கடலில் மூழ்கியுள்ளது. இவ் விபத்தில் மூன்று மாலுமிகள் உயிரிழந்துள்ளனர். மேலும் ஆறுபேர் காணாமல் போயுள்ளனர். மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் இருந்து ஏழு சிப்பந்திகள் மீட்புக்குழுவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். தென் கொரியாவின் மிகப் பெரிய துறைமுகமான புசானுக்கு தென்பகுதியில் 30 மைல்கள் தொலைவில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. தென்கொரியாவின் பில்ஒசியன் எனும் நிறுவனத்துக்குச் சொந்தமான பீ - ஹார்மனி எனும் இக்கப்பலில் எப்படி வெடிவிபத்து ஏற்பட்டது என்பதுபற்றிய விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. இக் கப்பல் மூழ்கியவேளை அதில் எண்ணெய் இருக்கவில்லை என்றும் கப்பலில் சில திருத்த வேலைகள் இடம்பெற்று வந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகத்தின் கீழ்
AMIRTHAAM
முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு
ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.

OPENING HOURS:
Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm
200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tél: 020 8423 9666/ 020 8864 3636

# யாசீர் அரபாத் - சிமோன்பெரெஸ் பேச்சுவார்த்தை

(14.01.01)

பாலஸ்தீனிய அதிபர் யாசீர் அரபாத்தும், இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் சிமோன்பெரெசும் காசா நகரில் மூன்று மணி நேர பேச்சுவார்த்தையை மேற்கொண்டனர். இப்பேச்சுவார்த்தையின் முடிவில் பாலஸ்தீன அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், மிகவும் தீவிரமான நம்பிக்கை அளிக்கக்கூடிய பேச்சுக்கள் இது. இரு தரப்பினரிடையும் முரண்பாடுகள் உள்ளன தான். ஆனாலும் அவைகள் தீர்த்துக்கொள்ளக் கூடியவகையில் அடுத்தகட்டப் பேச்சுக்கள் இடம்பெறலாம் எனக் கூறினார். இதே வேளை பிரதமர் எகுட்பராக்கின் அலுவலகத்திலிருந்து விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில், கலவரங்களை கூடிய அளவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும், குறைக்கக்கூடிய நகர்வுகளை மேற்கொள்வதும் இப்போது அவசியமானது என்றும், அதிபர் கிளின்டனின் ஆட்சிக்கால முடிவிற்குள் ஓர் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் உடனடியாக அவசியமானது என்றும் கூறியுள்ளது. ஜனவரி 20 கிளின்டனின் ஆட்சிக்கால இறுதிநாளாகும். அத்தினத்திற்கு முன்பாக ஓர் ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ள அமெரிக்கா மத்திய கிழக்கின் இரு தரப்பினரையும் நெருக்கிவருகின்றது.

ஜனாதிபதி கிளின்டன் தனது திட்டமாக பாலஸ்தீனிய அரசானது காசா, மேற்குக்கரை, ஜெரூசலேமின் இஸ்லாமிய புனிதத் தலங்கள் மற்றும் அரபுப் பகுதிகள் போன்றவற்றை உள்ளடக்கி அமைகின்றது. ஆனால் பாலஸ்தீனர்கள் இடம்பெயர்ந்துள்ள பாலஸ்தீன மக்களின் மீள் குடியேற்றக் கோரிக்கையை கைவிட்டுவிடவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இதற்கு பாலஸ்தீனத் தரப்பில் சற்று சாதகமான பதில் கிடைத்துள்ளபோதிலும், இஸ்ரேலியத் தரப்பிலிருந்து இதுவரை எதுவும் கூறப்படவில்லை. இதற்கிடையே பாலஸ்தீனத்தில் இயங்கிவரும் தீவிரவாத அமைப்புக்கள், யாசீர் அரபாத் அமெரிக்காவின் தூண்டுதலின்பேரில் ஒப்பந்தங்கள் எதிலாவது கையெழுத்திடுவாரானால் அது மிகப் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளன. இஸ்ரேலிய தீவிரவாதத் தலைவர் ஆரியல்சரோன் எதிர்வரும் தேர்தலில் மிக முன்னணியில் நிற்கின்றார் என்பதும், பாலஸ்தீனர்களுக்கு நிலப்பகுதியை விட்டுக்கொடுப்பதில் இஸ்ரேலியர்களுக்குள்ள எதிர்ப்பே இவரது செல்வாக்கின் காரணமெனவும் சொல்லப்படுகிறது.



உளவாளிகள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்கள்

கடந்தவாரம் நடந்த பேச்சுவார்த்தைகளின் இறுதியில், சில பகுதிகளின் தடைகளை இஸ்ரேலிய அரசு விலக்கிக்கொண்டது. பாலஸ்தீன நகரங்களாக பெத்தலகேம், ஜெரிக்கோ போன்றவைகளுக்குச் செல்லும் வழிகளை இஸ்ரேலியப் படைகள் திறந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரு பாலஸ்தீனர்களுக்கு பகிரங்க மரண தண்டனை

இஸ்ரேலிய இரகசிய பிரிவுடன் தொடர்புகள் வைத்திருந்தனர் என்றும் பாலஸ்தீனப் போராளிகளை காட்டிக்கொடுத்தனர் என்றும் குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கு பகிரங்க மரணதண்டனை வழங்கப்பட்டது. மேற்குக்கரை நகரமான நப்ளூசின் மையப் பகுதியில் அமைந்திருந்த ஒரு பகுதியில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் மத்தியில் இவ்விருவரதும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இவர்களுடன் கைது செய்யப்பட்ட மேலும் இருவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

மேற்கண்ட நால்வரும் ஹமாஸ் அமைப்பின் தளபதிகள் சிலரது மரணத்திற்கும், பாத்தா அமைப்பின் தலைவர்களின் ஒருவரான ஜமால் அப்துல் ராசிக்கினது மரணத்திற்கும் காரணமாக இருந்துள்ளனர் என பாலஸ்தீன நீதிஅமைச்சர் கூறியுள்ளார். மேற்படி மரண தண்டனைகள் பகிரங்கமாக வழங்கப்பட்டதானது, மக்களுக்கும் தாய் நிலத்திற்கும் துரோகம் செய்ய நினைக்கும் யாருக்கும் இதுதான் முடிவு எனத் தெளிவுபடுத்துவதற்கே என. அவர் மேலும் கூறினார்.

# அமெரிக்க உதவிகளுடன் விமானம் ஈராக் சென்றது

(14.01.01)

அமெரிக்காவில் உள்ள மனிதாபிமான உதவி அமைப்புக்கள், சமய அமைப்புக்கள் போன்றவற்றின் கூட்டு அமைப்பு ஒன்றின் செயற்பாட்டாளர்கள் ஈராக்கிய தலைநகர் பாக்தாத்துக்கு உதவிப் பொருட்களுடன் பறந்துள்ளனர். அமெரிக்காவில் இருந்து செல்லும் முதலாவது மக்கள் அமைப்பின் விமானம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இவ் அமைப்பின் 27 உறுப்பினர்கள் ஜோர்தானிய விமானம் ஒன்றின் மூலம் சுமார் 150,000 அமெரிக்க டொலர் பெறுமதியான புத்தகங்கள், மருந்துகள், உடைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுடன் வந்து சேர்ந்தனர். அமெரிக்க தலைமையிலான ஐநா படைகள் ஈராக் மீது தாக்குதல் நடத்திய 10வது ஆண்டினை நினைவு கூறுமுகமாகவும் அந்த யுத்தத்தில் ஈராக்கிய மக்கள் இன்றும் அனுபவிக்கும் இன்னல்களை உலகிற்கு தெரியப்படுத்தவும் தங்கள் பயணம் அமைந்துள்ளது என இப் பயணத்தை ஏற்பாடுசெய்த ஜேம்ஸ் ஜெனிங்ஸ் தெரிவித்துள்ளார்.



ஈராக்கிய தலைநகரில் அமெரிக்க உதவி அமைப்பினர்.

# வானியல் ஆய்வில் சீனாவும் நுழைகிறது

உலகில் வானியல் துறையில் கலங்களை அனுப்பும் துறையில் அமெரிக்கா, ரஷ்யா போன்றவைகளுக்கு அடுத்த மூன்றாவது நாடாக சீனா காலடி வைக்கிறது. கடந்த் புதனன்று சென்சூ - 2 என அழைக்கப்படும் பரீட்சார்த்த வான்கலம் சீனாவினால் அனுப்பிவைக்கப்பட்டது. இக் கலம் ஒருவார காலத்திற்கு வானில் நிற்குமென சீன வானியல் துறையினர் அறிவித்துள்ளனர். 8 தொன் எடையுள்ள இந்த கலமானது ரஷ்யாவின் 'சோயுஸ்' வான்கலத்தை ஒத்ததாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சோயுசைவிட பெரிதானதும், பாரமானதும் இது என்றும் சுமார் நான்கு விண்வெளி ஆய்வாளர்களுக்கு தங்கக்கூடிய வசதிகள் இதில் உள்ளன என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது அனுப்பப்பட்டுள்ள சென்சூ - 2 ஆனது 64 வீதமான பரிசோதனைகளை மேற்கொள்கின்றது. 19 வீதமான தாவரங்கள் சிறு விலங்குகள் போன்றவைகளைக்கொண்டு இச் சோதனைகள் நடாத்தப்படுகின்றன. சீனா, 'சென்சூ' என்றும் பெயரில் முதலாவது வான்கலத்தை 99ம் ஆண்டு நவம்பர் மாதம் விண்ணிற்கு அனுப்பிவைத்தது. இது வானில் நின்ற 21 மணி நேரங்களில் 14 தடவைகள் உலகை வலம் வந்தது. மீள பயன்படுத்தக்கூடிய தன்மைகளைக்கொண்ட இக் கலம் பரசூட் மூலம் மொங்கோலியாவில் தரையிறக்கப்பட்டது. தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ள கலமானது ஓர் முழுமையான வேலைத் திட்டங்களை செயல்படுத்தக்கூடிய ஒன்று என்றும், சீன வானியலாளர்கள் எதிர்காலத்தில் அமைக்க உத்தேசித்துள்ள அண்டவெளி பரிசோதனை நிலையத்திற்கு இக் கலத்தின் பங்களிப்பு பெருமளவில் இருக்குமென்றும் கூறியுள்ளனர்.

# ஐ.நா. வழக்கு தொடுநரை சந்திக்க யுகோ அதிபர் மறுப்பு

(15.01.01)

யுகோஸ்லாவியாவின் புதிய அதிபர் வொஜிஸ்லாவ் கொஸ்தோனிச்சா இம்மாத இறுதியில் பெல்கிரேட்டுக்கு விஜயம் செய்யவுள்ள ஐநாவின் பிரதான வழக்குத் தொடுநரை சந்திக்கமாட்டார் என அவரது ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர். நெதர்லாந்தை மையமாகக்கொண்டு இயங்கும் போர்க் குற்ற நீதிமன்றத்தின் பிரதான வழக்குத்தொடுநர் கார்லாடெல் பொன்டே இம்மாதம் 23ம் திகதி பெல்கிரேட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார். இதன்போது யுகோஸ்லாவிய அரசின் முழுமையான உதவி தனக்கு தேவை என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். இவரது விஜயத்தில் கொசோவோவில் இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பான குற்றவாளிகளை விசாரிப்பது, முக்கியமாக அங்கு நடைபெற்ற போர்க் குற்றங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி மிலோசோவிச்சை கைது செய்து நாடுகடத்துதல் போன்ற விவகாரங்கள் அடங்கியிருக்கும்.

அதிபர் கொஸ்தோனிச்சாவின் சகாக்களில் ஒருவரான ஜனநாயகக் கட்சியின் அலெக்சான்டர் பொபோவிச் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஹாக் நீதிமன்றம் என்பது ஒரு அரசியல் கருவி. அங்கு இடம்பெறும் விசாரணைகள் அரசியல் மையமாகக்கொண்டுதான் நடக்கின்றன. ஆகவே அந்த நீதிமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவருக்கு முக்கியமளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினார். கடந்தவாரம் செவ்வியொன்றின் போது யுகோஸ்லாவியாவில் நாடுகடத்தல் சட்டவிரோதமானது. ஆகவே மிலோசோவிச்சை நாடுகடத்துவது நடக்கமுடியாத ஒன்று என்று கூறினார்.

# மொங்கோலியாவில் உலங்குவானூர்தி விபத்து!

## ஐ.நா. அதிகாரிகள் மரணம்

(14.01.01)

மொங்கோலியாவில் ஞாயிறன்று நடந்த உலங்கு வானூர்தி விபத்தொன்றில் ஒரு அமெரிக்கர் மற்றும் இரண்டு வெளிநாட்டவர்கள் உட்பட 9 பேர் கொல்லப்பட்டு, 14 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 10 பேரது நிலைமை மோசமானதென அறிவிக்கப்பட்டுள்ளது. மொங்கோலியாவின் வடமேற்குப் பகுதியில் உதவி நடவடிக்கைகளைப் பார்வையிடச் சென்ற ஐ.நா. வின் செயற்பாட்டாளர்களே இவ் விபத்தில் கொல்லப்பட்டவர்களாவர். ஒரு அமெரிக்கர், ஒரு பிரித்தானியர், ஒரு ஜேர்மனியர் உட்பட்ட குழுவினருடன், ரஷ்யத் தயாரிப்பு MI—8 உலங்குவானூர்தி பயணம் செய்தது. நிலத்திலிருந்து 165 அடி உயரத்தில் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், தரையில் மோதி தீப்பிடித்து எரிந்தது. மேற்படி உலங்குவானூர்தியில் 8 ஐ.நா. பிரதிநிதிகள் 2 மொங்கோலிய அரச அதிகாரிகள் மற்றும் ஜப்பானிய மொங்கோலிய செய்தியாளர்களும் பயணம் செய்தனர்.

மேற்படி விபத்துக்கான காரணங்களைக் கண்டறிவதில் மொங்கோலிய விமானத்துறை அதிகாரிகள் விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

# தமிழ்ப் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு

அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம் (ITEC) தமிழ்நாடு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, தை 2001ல் ஆரம்பிக்கும் பட்டப்படிப்பு வகுப்புகள்

புலம் பெயர் மாணவர்களின் கல்வித் தேவை கருதி தமிழியலில் B.A (3 ஆண்டுகள்), M.A (2 ஆண்டுகள்) கற்கை நெறிகள் திறந்த வெளிப் பல்கலைக்கழக அமைப்பு (Open University Scheme), கல்வி விரிவக அமைப்பு (Extension Learning Programs) இரண்டிலும் ஆரம்பிக்கப்படுகின்றன.

## திறந்த வெளிப் பல்கலைக் கழக அமைப்பு (Open University Scheme)

இது ஒழுங்கான கல்வியைப் பெறமுடியாத மாணவர்களுக்காகவும், பள்ளியிலிருந்து விலகியவர்களுக்காகவும் வகுக்கப்பட்டது. இவ் அமைப்பில் இணைய எல்லா நாடுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பள்ளிப் படிப்பை நிறைவு செய்யாத மாணவர்கள் B.A, M.A கற்கை நெறியில் சேர இத் திட்டம் வழிகோலுகிறது. எனினும், மாணவர்களுக்கு வயது தொடர்பான பின்வரும் தகைமை இருக்கவேண்டும்.

அ. B.A. தமிழியல்: 01.07.2000 ல் 18 வயது நிறைந்திருக்கவேண்டும்.

ஆ. M.A தமிழியல்: 01.07.2000 ல் 21 வயது நிறைந்திருக்கவேண்டும்.

## கல்வி விரிவக அமைப்பு (Extension Learning Programs)

இவ் அமைப்பில் சேர்வதற்குக் குறைந்த பட்சக் கல்வித் தகைமைகள் வருமாறு.

அ. B.A தமிழியல்; மாணவர்கள் 12 ஆண்டுக் கல்வித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஆ. M.A தமிழியல்: மாணவர்கள் பட்ட நெறித்தேர்ச்சி (B.A.B.com., Bsc, B.E.A) பெற்றிருக்கவேண்டும்.

**விண்ணப்பத் தொடர்புகளுக்கு:**

**ITEC**
**Stennerstr 27, 33613 Bielefeld**
**Germany**

**Phone: (0049) 521892240**
**Fax: (0049) 5219891586**
**e-mail: itec.va @t-online.de**


**Sikaram**

(இலங்கை) கொழும்பு வவுனியா – திருகோணமலை – மட்டக்களப்பு – மன்னார் – கனடா – சகல ஐரோப்பிய நாடுகள் – சிங்கப்பூர் தாய்லாந்து – ஹொங்கொங் – அவுஸ்திரேலியா – இந்தியாவின் அனைத்துப் பாகங்களுக்கும் 1 மணித்தியாலத்தில் கொடுப்பதற்கான புதிய சேவை ஒன்று எமது பணமாற்றுச் சேவையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டுப்புடவைகள், ஆண், பெண்களிற்கான சகல புடவை வகைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், பதப்படுத்திய மீன் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**சிகரம்**

மேலும் விபரங்களிற்கு

**Schoenegg Str-15**
**8004.Z.H**

எங்களிற்கு வேறு கிளை ஸ்தாபனங்கள் கிடையாது.

Singapore Conduct N°:
**0065 - 96171175**
**Tel&Fax:**
**0065 7430644**



**சிகரம்**

மேலும் விபரங்களிற்கு:

T.P: 01 2912862
01 2913951
Rest: 01 2422718
H.P: 079-3008759
079-6225077
Fax: 01 2913534

உரிமையாளர்- சேகர்

Pub. Sw

# நெதர்லாந்து தூதரக அதிகாரிகள் மட்டு விஜயம்

(14.01.01)

சிறீலங்காவின் நெதர்லாந்து தூதரக அதிகாரிகள் குழுவினர் கடந்த வியாழனன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்து, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மட்டு. - திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரை சந்தித்து பேசியுள்ளனர்.

இதன்போது, விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கும் முகமாக கடந்த மாதம் 24ம் திகதி முதல் ஒருதலைப்பட்சமாக பேரர் நிறுத்தத்தை அறிவித்து அமுல்படுத்தி வருவதை எடுத்துக்கூறிய பிரதிநிதிகள், அரசாங்கம் போர் நிறுத்தம் செய்யாது போர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதையும் சுட்டிக்காட்டி, அரசாங்கமும் போர் நிறுத்தத்தை செய்து சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான நல்லெண்ணத்தை வளர்க்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்வும் கேட்டுக் கொண்டனர். அத்துடன் சமாதானத்தை வலியுறுத்தியும், போர் நிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டும் என்று கோரியும் சமாதான ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவோர் குற்றவாளிகளாக கருதப்படுவார்கள் என படையினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தையும் நெதர்லாந்து தூதரக அதிகாரிகளிடம் கொடுத்தனர். இக் குழுவில் சிறீலங்காவின் நெதர்லாந்து தூதர் திருமதி ஆன்கி சூட்டர், தூதரக முதலாவது செயலாளர் டொரின் வென் நரேன் மற்றும் ஹெரி பொக்பொர்ன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

# ஆலய கிணற்றை சுத்தம் செய்தவர் மரணம்

(14.01.01)

யாழ். பொலிகண்டி வீரபத்திரர் ஆலயத்தின் கிணற்றை சுத்தம் செய்வதற்காக கிணற்றில் இறங்கிய இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார். கடந்த புதன்கிழமை நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் இறைத்துக்கொண்டிருக்கும்போது, மூடப்பட்டிருந்த கிணற்றின் ஒரு வழியினூடாக கிணற்றை சுத்தம் செய்வதற்காக ஐவர் உள்ளே இறங்கியுள்ளனர்.

இதேவேளை நீர் இறைக்கும் இயந்திரத்தில் இருந்து வெளியேறிய புகை மூடப்பட்டிருந்த கிணற்றில் புகுந்ததால் மூச்சுத்திணறி ஐவரும் மயக்கமடைந்துள்ளனர். அவசர அவசரமாக இவர்கள் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் ராசா வீரமோகன் (26) என்ற இளைஞர் மரணமாகியுள்ளார். ஏனைய நால்வரும் தொடர்ந்து கிசிச்சை பெற்று வருகின்றனர்.

# துன்னாலையில் மின்சாரம் தாக்கி பெண் மரணம்

(14.01.01)

யாழ். துன்னாலைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் பெண் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார். கடந்த 7ம் திகதி இரவு சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவதற்காக இணைப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்த வேளை, மின்சாரம் தாக்கியதில் செல்லத்தம்பி மகாராணி (26) என்பவர் மரணமடைந்துள்ளார். இதேவேளை இவரை மின்சாரம் தாக்கிக்கொண்டிருந்தவேளை காப்பாற்றுச் சென்ற அவரது சகோதரனான மணியம் தனேஸ்வரன்(19) என்பவர் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# குருக்களும் மனைவியும் உறவினரும் கைது

(14.01.01)

தலை மன்னாரில் வைத்து இந்துக் குருக்கள் ஆதிநாராயண சர்மா பராசக்தி அவரின் மனைவி குமுதினி, மற்றும் இவர்களின் உறவினரான திருமதி நடர்ராஜா ஆகிய மூவரையும் சிறீலங்கா கடற்படையினர் கடந்த வெள்ளியன்று கைது செய்து மன்னார் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்கள் தலைமன்னார் இந்து ஆலயத்திற்குக் குருக்களாக நியமனம் பெற்று, மட்டக்களப்பிலிருந்து வந்துகொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

# அரியாலையில் வீடு பார்க்கச் சென்றவர் எலும்புக்கூடாக மீட்பு

(14.01.01)

யாழ். அரியாலைப் பகுதியில் வீடு பார்க்கச் சென்றவர் எலும்புக்கூடாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். அரியாலை பொன்னம்பலம் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து இவ் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் அரியாலைப் பகுதியில் உள்ள தனது வீட்டை பார்த்துவரச் சென்ற தம்பிஐயா தங்கராசா (52) என்பவரது எலும்புக்கூடே இது என அடையாளம் காணப்பட்டுள்ளது. வீடு பார்க்கச் சென்ற இவர் காணாமல் போயிருந்ததாக இவரது உறவினர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

# சிறீலங்கா கடற்படையினரிடமிருந்து பாதுகாக்குமாறு கோரி தமிழக மீனவர்கள் உண்ணாவிரதம்

(14.01.01)

சிறீலங்கா கடற்படையினரின் தாக்குதல்களில் இருந்து தமக்கு பாதுகாப்ப வழங்குமாறு கோரி தமிழக மீனவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இராமநாதபுரம் மாவட்ட கடற்தொழிலாளர் சங்கத்தை சேர்ந்த சுமார் 330 மீனவர்கள் மாவட்ட அதிகாரி அலுவலகம் முன்பாக கடந்த திங்கள் கிழமையில் இருந்து போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். இதில் 180 பெண்களும் அடங்கியுள்ளனர் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்கா கடற்படையின் தாக்குதல்களில் இருந்து தமக்கு பாதுகாப்பு வழங்குவது உறுதிப்படுத்தப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# சிஹல உறுமயவிற்காக மன்னிப்பு கேட்ட 'ஆனந்த' சங்கரி !

(14.01.01)

நோர்வேயின் விசேட தூதர் எரிக்சோல் ஹெய்ம் பற்றி மிகவும் கீழ்த்தனமான, நாகரிகமற்ற முறையில் கருத்துக்களை சிஹல உறுமய்வின் திலக் கருணாரட்ண கூறியிருந்தார்.

கடந்த வியாழனன்று சிறீலங்கா பாராளுமன்ற கூட்டத் தொடரில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்த சங்கரி திலக் கருணாரட்ணாவின் கூற்றுக்காக தான் நாட்டின் சார்பில் மன்னிப்பு கேட்பதாக கூறியுள்ளார்.

# பண்டாரவளையில் 14 தமிழர்கள் கைது

(15.01.01)

பண்டாரவளை நகரின் விடுதிகளில் தங்கியிருந்த 14 தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இன்று சிறீலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். நகரைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய பொலிசார் விடுதியில் தங்கியிருந்த ஐந்து இளைஞர்களையும், ஒன்பது இளம் யுவதிகளையும் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைப்புலி சந்தேக நபர்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஆறே மாதங்களில் கணினியை சரளமாக கையாள
Senith Computer Institute
★ சுவிற்சர்லாந்தில் கணினி கல்விநிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
★ கணினி அறிமுக வகுப்புக்கள் கட்டணமின்றி அமர்வுகளுடன் ஆரம்பமாகி 8 மாதகாலம் தொடர்ந்து நடைபெறும்.
★ மத்தியதர, உயர்தர (9-16 வயது) வகுப்புக்கள்
தொடர்புகளுக்கு: Senith Computer Institute
Militar str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60 Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

# மன்னாரில் 32 பேர் படையினரால் சுட்டுக்கொலை

(14.01.01)

மன்னாரில் 2000ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையில் சிறீலங்கா படையினராலும், பொலிசாரினாலும் ஒரு இளம் பெண் உட்பட 32 பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என மன்னார் பிரசைகள் குழு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. இதே வேளை, இவ் 2000 ஆண்டில் 4 பெண்கள் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் 143 பேர் கைதாகினர் ஆனால் இவர்களில் 70 பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர். காணாமல்போனவர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை உறவினர்களுக்குக் கிடைக்கவில்லை எனவும் அவ் அறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது.


NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER

* Colombo
* Madras
* Singepor
* Canada
* London
இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.
★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42


| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.
உடன் பணமாற்று சேவை
உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD
★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.
Pub

## எதிரொலிகள்

# சிறுபிள்ளைத்தனமான விளம்பரங்கள் ஏன்?

ஆசிரியர் ஈழமுரசு!

நான் தங்களது வாரந்தரியை அதன் ஆரம்பகாலம் தொட்டு ஆர்வத்துடன் வாசித்து வருபவன். ஆகையால் அதன் வளர்ச்சியில் எனது விமர்சனங்களை கூறவும், ஆலோசனைகளை வழங்கவும் உரிமை கொண்டுள்ளவன் என்ற எண்ணத்தில் சில விடயங்களை தங்கள் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

ஈழமுரசின் வளர்ச்சி படிப்படியாக ஓர் முதிர்ச்சியான நிலையை அடைந்து வருவது மிகுந்த சந்தோசமான விடயம். மேலும், ஈழமுரசானது சில விடயங்களை பிரசுரிப்பதில்லை என்ற கொள்கையில் இருந்து இன்றுவரை மாறாது இருந்து வருவதும் சந்தோசப்படும் விடயமே. குறிப்பாக சோதிட பலனைக் குறிப்படலாம். சோதிடம் பிரசுரிக்கப்பட வேண்டும் என கடந்த காலங்களில் சில கடிதங்கள் எதிரொலியில் எழுதப்பட்டிருந்ததை நான் வாசித்தறிந்தேன். ஆனாலும் இன்றுவரை அது செயற்படுத்தப்படவில்லை. சோதிடம் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் விடயம். ஆனால் எம் முன்னால் எத்தனையோ கடமைகள் நிற்கையில் அந்த சோதிடத்திற்காக ஓர் பக்கத்தை ஒதுக்கி வாசகர்களை அதற்குள் முடங்கவைக்க ஈழமுரசிற்கு விருப்பமில்லையோ? ஈழமுரசின் முடிவில் நானும் திருப்தி கொண்டுள்ளேன்.

கடந்த சில வாரங்களாக ஈழமுரசு இதழ்களில் ஒரே கட்டுரைகள் மயம்தான். அவைகள் குறைக்கப்படவேண்டும். புலம்பெயர் மக்களுக்கு த்தாய் மண்ணின் நிகழ்வுகள் அவசியம்தான். அதற்காக பக்கத்திற்கு பக்கம் அரசியல் கட்டுரைகளாக எழுதி நிரப்பவேண்டும் என்ற அவசியம் இல்லை. இன்றைய புலம் பெயர் மக்களுக்கு தேவையான எத்தனையோ விடயங்களை அதில் இணைத்துக் கொள்ளலாமே.

ஈழமுரசில் அண்மைக்காலமாக வெளிவரும் விளம்பரங்கள் பற்றி எனது மன வருத்தங்களை உங்கள் முன் வைக்க விரும்பகிறேன். ஈழமுரசின் ஆரம்பகால வாசகன் என்ற முறையில் அதன் கொள்கை, அதன் இலக்கு என்பன எது என்பது ஓரளவிற்கு புரிந்துகொண்டுள்ள ஒருவன் நான். ஆரம்பத்தில் ஈழமுரசில் மதம் சார்பான விளம்பரங்கள் வெளியாகவில்லை. ஆனால் சில காலத்தின் பின் மெது மெதுவாக சில விளம்பரங்கள் தலைகாட்டத் தொடங்கின. விளம்பரங்கள் என்பது பத்திரிகையின் உரிமையானதல்ல. அவற்றிக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு என்பதையும் நான் அறிவேன். ஆனால் அதற்காக யார் தரும் விளக்கமற்ற, முட்டாள்தனமான விளம்பரங்களை எல்லாம் எமது பத்திரிகையில் வெளியிடவேண்டுமா என்பதே எனது கேள்வி?

நான் மதங்களுக்கு முரண்பட்டவனல்ல. எத்தனையோ பொது விளம்பரங்களில் வணக்க வழிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், கடந்த சில வாரங்களாக தங்களது பத்திரிகையில் வரும் ஒரு சில விளம்பரங்கள் என் போன்றவர்களது மனதை நோகடித்திருக்கின்றன என்பதை நான் கூறமுடியும். குறிப்பாக ஓர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் பற்றிய விளம்பரத்தைத்தான் இங்கு கூறமுற்படுகிறேன். அதனை ஒரு அறிவித்தலாக அல்ல விளம்பரமாகவே நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனாலும், அது ஓர் தனிநபர் தனது சொத்திற்கான அறிவித்தலை கொடுப்பது போல வெளியிடப்பட்டிருந்தது. (அவ் விளம்பரத்தில் வந்த வாசகங்களை தான் குறிப்பிடுகிறேன்) ஆலயம் என்பது பொது மக்களுக்கான ஒரு வழிபாட்டுத்தலம். அதனை ஒருவர் தனது பணத்தைக்கொண்டு ஸ்தாபிக்கலாம். ஆனால், தனது பெயரை ஈழமுரசின் வாயிலாகவா பிரபல்யப்படுத்த வேண்டும்?

தயவு செய்து இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான, நாகரிகமற்ற விளம்பரங்கள் மற்றும் அறிவித்தல்களை ஈழமுரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை வாசகன் என்ற உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் இக் கடிதத்தை முடித்துக்கொண்டு மீண்டும் தொடர்வேன் என முடிக்கிறேன். மேலும் இதனை தங்களது எதிரொலிப் பக்கத்தில் பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன்.

நன்றி

த. கனகசபை
லாகூர்நெவ், பிரான்ஸ்

# பாரதியும் ஈழ தேசமும்

*பாரதி தேடிய விடுதலை வாழ்விற்கான கனவுலகிற்கும் இன்றைய தமிழீழ விடுதலைப் போருக்கும் நெருங்கிய பல தொடர்புகள் உண்டு. அக் கவிஞனின் கவி வரிகளோடு ஈழவிடுதலைப் போரை சாளரம் வழியாக ஒரு ஒப்பீடு செய்வதே இச் சிறுதொடர்.*



- 2 -

## சாளரம்

'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்' எனும் வரிகளிலே தாயக விடுதலைக்காக தற்கொடை புரியும் உன்னத ஆத்மீக அர்ப்பணிப்பை உள்ளடக்கிய ஒரு வரலாற்று வரிகளை இங்கே காணமுடிகின்றது. தற்கொடைப் போராளிகளாய் உயிராயுதமாய் கரும்புலிகளாய் களமாடும் ஆத்மீக உணர்வினைப் படம் பிடித்துக்காட்டும் அப்பாடல் வரிகளுக்கு உயிரூட்டியவன் பாரதியல்லவா. இவை, பெண்மையின் சரிநிகர் தன்மையை ஆண்மையின் ஆக்கிரோச முழக்கங்களை ஒன்றுபட்டு விடுதலைத் தீயின் பிரவாகத்தை எடுத்தியம்புகின்றன. இவ்வரிகளை உற்று நோக்கினால் 'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் அதை அங்கோர் காட்டில் பொந்திடை வைத்தேன் வெந்து தணிந்தது காடு...' எனச் செல்கின்றது.

பாரதியின் விடுதலைத் தீயின் தாகம் இங்கே நிதர்சனப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். அவரின் கனவுகளில் தோன்றிய நிழல்கள் இங்கே நிஜமாக்கப்படுவதைக் காணமுடிகின்றது. இதுவே நிதர்சனத்தின் நேர்வழி என்று, இராணுவ வல்லாதிக்கவாதிகளில் வழிகாட்டல்களை, படைநகர்வுகளை, இன அழிப்புத் திட்டங்களை நீதியின் குரல்வளையை நெரிக்க முயலும் சிறீலங்கா பௌத்த சிங்கள ஏகாதிபத்தியவாதிகளினதும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பையும், நீதியின் குரல்வளையை நெரிக்க முயலும் இரும்புக்கரங்களையும் ஒன்றுபட்ட மக்களின் இலட்சியப் பாறையில் ஊன்றிய உறுதி குலையாத சுவடுகளைப் பதித்து நிற்கும் தேசியத் தலைமையின் வழிநடத்தலினால் உடைத்து நொருக்கிய இராணுவப் பலத்தை இன்று சின்னஞ்சிறு தமிழீழ தேசம் பெற்றுக்கொண்டுள்ளது என்பதே உலகின் கண்களிலே புரியாத புதிராக உள்ளது!

இதைத்தான் பாரதியே கூறுகின்றான் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே. அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து சிறந்ததும் இந்நாடே, ஆயிரம் உண்டிங்கு ஜாதி. அன்னியர் வந்திங்கே புகல் என்ன நீதி? தனியொருவனுக்கு உணவில்லையென்றால் ஜகத்தினை அழித்திடுவோம். கொட்டு முரசே வெற்றிகள் எட்டுத் திக்கும் என்று கொட்டு முரசே பொங்கு தமிழுக்கு இன்னல் விழைத்தால் சங்காரம் நிஜம் என்று சங்கே முழங்கு' என்ற தத்துவம் நிறை—ந்த சத்திய வார்த்தைகளைக் கவியாக்கிய பாரதியின் உணர்ச்சிக் கவிகளை உள்ளார்ந்த நோக்கோடு இன்னும் ஆராய்ந்துகொண்டே போகலாம். நாட்டுப்பற்று ஒற்றுமை அடிமையற்ற சுதந்திர வாழ்வைக் கவிவரிகளிலே பொறித்த சத்தியத்தை இன்று எம் தமிழீழ தேசிய விடுதலைப் பாதையிலே உண்மையாகக் காண்கின்றோம். இனம், மதம், மொழி, வாழ்வியலுரிமையுடைய வரலாற்றைக் கட்டியெழுப்ப ஒன்றுபட்டிருக்கும் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் உணர்வுடைய மக்களைக் கூவியழைக்கும் கேளிக்கைகள் இவைகள். கல்வி அரசியல் பொருளாதாரக் கட்டமைப்புக்களைச் சார்ந்து அன்றாட வாழ்வுக்குத் தேவையான உணவு உடை உறையுள் என்பவற்றின் உற்பத்திப் பெருக்கத்தை கையாள்வதும் பாதுகாப்பதும் அவசியமானது என்ற கருத்தினை பொருளாதார அடக்குமுறைகளுக்குள் துன்பப்பட்டும் தமது சுதந்திர வாழ்வின் சுய உணர்வுகளை வெளிக்கொணர்ந்து ஐந்து இலட்சத்துக்குமதிகமான தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வன்னி மண் வளத்தினை உயபோகப்படுத்திய எம் தமிழீழ மக்களை 'இனியொருவிதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம். தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற வரிகளை படம்போட்டுக் காட்டிய எம் தமிழீழ மக்களை நாம் மறந்துவிடமுடியுமா? எந்தவொரு வல்லாதிக்க வக்கிர உறுத்தல்களும் ஒன்றுபட்டெழுந்த மக்களை ஒருபோதும் பயமுறுத்த முடியாது. மக்களின் சக்தியே மாபெரும் சக்தி என்ற ஒன்றுபட்ட மக்கள் போராட்டத்தினை படம்பிடித்துக்காட்டுகின்றார். தியாக வரலாற்றிலே எமது தேசம் ஒரு புதிய கோணத்திலே உறுதிபகர்ந்து நிற்கிறது. கனல் பறக்கும் வார்த்தைகளைக் கோர்—த்து அனல்மூட்டும் தியாக வேள்வியை விடுதலைத் தீ எவ்வளவு சக்திவாய்ந்தது என்பதை சுட்டிக்காட்டியவர். பொதுவான சுதந்திரதாகத்தின் வீச்சை உயிர் மூச்சாக்கி அகங்காரம்; ஆணவம்; சுயநலம் போன்ற தன்னாதிக்கவாதத்தை அடியோடு தகர்க்கின்ற மக்களை உருவகப்படுத்துகின்றார். இது எம் தமிழீழ மக்களின் வாழ்வியலில் நாம் கொண்டுள்ள அக்கறையை சுதந்திரக்காற்றை சுவாசிக்கத்துடிக்கும் புதிய சமுதாயத்தின் விடியலை நோக்கிய புதுயுகத்தையல்லவா சார்ந்து நிற்கின்றது. இதனால் தேசம் விடிய வேண்டும் என்ற உணர்வை கவித் துறையில் மட்டுமன்றி கல்வி; கலை; இலக்கியம் ஊடாக தன் உணர்வுகளைக் கட்டுரையாய் பொழிகின்றார். சுதந்திர இந்தியாவை நோக்கிய கனவு சுதேசமித்திரனில் ஏகாதிபத்தியவாதிகளின் கொடுமைகள் சுட்டிக்காட்டப்படுகின்றது. பிரிட்டிஷ்காரர்களால் நாயைவிடக் கேவலமாக தமிழன் நடத்தப்படுகின்றான் என்பதை படம்பிடித்துக்காட்டினார். இவ்வாறே இராணுவ அடக்குமுறைகளால் எமது தேசத்திலும் பத்திரிக்கை ஸ்தாபனங்கள் எரியூட்டப்பட்டன. எழுத்தாளர்கள் கொலை செய்யப்பட்டனர். பத்திரிக்கைகள் தடைசெய்யப்பட்டன. பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. பத்திரிக்கை தணிக்கை சர்வதேச தொலைத்தொடர்புச் சாதனங்களும் தடை செய்யப்பட்டிருந்த வேளையிலும் எமது தாயகத்திலே சிறீலங்கா இனவாதிகளால் நடாத்தப்பட்ட கொலைகள், கொள்ளைகள், சித்திர வதைகள், புதைகுழி மர்மங்கள், பாலியல் வன்முறைகள், ஊரடங்கு நேரத்திற்குள் நடாத்தப்பட்ட கொடுமைகள் யாவும் நெஞ்சுரம் கொண்டிருந்த எழுத்தாளர்களால் அஞ்சாத பத்திரிக்கையாளர்களால் படம்பிடித்துக்காட்டப்பட்டதை உலகம் இன்று மறந்திருக்கமுடியாது. ஒரு இனத்தின் மனித நேயம் ஜனநாயகத்திற்கான நீதியில் குரல்வளை நெரிக்கப்பட்டபோதும் அவ்வினத்தின் வேதனைகளை விம்மும் நெஞ்சோடு குரல் கொடுக்கின்ற மனித சமூகத்தை, கவிஞர்களை, அறிஞர்களை, எழுத்தாளர்களை புரட்சிப்பாடகர்களை இன்றைய போர்ச்சூழல் தமதாக்கிக்கொண்டுள்ளது. பாட்டுப்பாடிய குரல்கள் காவிய நாயர்களின் பரணிபாட எழுச்சி கொண்டுள்ளது.

*இது எம் தமிழீழ மக்களின் வாழ்வியலில் நாம் கொண்டுள்ள அக்கறையை சுதந்திரக்காற்றை சுவாசிக்கத்துடிக்கும் புதிய சமுதாயத்தின் விடியலை நோக்கிய புதுயுகத்தையல்லவா சார்ந்து நிற்கின்றது.*

[தொடரும்]

- **வேணுகோபால்**, இலண்டன்

# புலிகளின் போர் நிறுத்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி பாரிய தாக்குதலுக்குத் திட்டம்

## - அன்ரன் பாலசிங்கம்

ஒருதலைப் பட்சமாக கடைப் பிடிக்கப்படும் போர்நிறுத்த சமாதான சூழலை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த, யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னியிலும் தாக்குதல்களை நடாத்தும் நோக்கத்துடன், சிறீலங்கா அரசு தனது ஆயுதப் படைகளை முழு அளவிலான போருக்கு தயார்ப்படுத்துவதாக, லண்டனிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'தமிழ் கார்டியன்' இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் புலிகள் இயக்கத்தின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான திரு. அன்ரன் பாலசிங்கம் குற்றம்சாட்டியுள்ளார். விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கு எதிராக பாரிய அளவில் தாக்குதல்களை நடாத்தும் நோக்கத்துடன், சிங்கள அரசு புதிய படையணிகளையும் பீரங்கிகள், டாங்கிகள், பல்குழல் ஏவுகணை செலுத்திகள் போன்ற கனரக அழிவு ஆயுதங்களையும் யாழ்ப்பாணக் களத்திற்கு அனுப்பியிருப்பதாக திரு. பாலசிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கள் இரவு யாழ்ப்பாண மக்களுக்கு விடுத்த விசேட உரையை கடுமையாக விமர்சித்த திரு.பாலசிங்கம் அதனைப் பொய்களும் அர்த்தமற்ற சொற்களும் அடங்கிய பெரியதொரு பொதி என வர்ணித்தார். புலிகளின் சமாதான முயற்சியில் தனக்கு நம்பிக்கையில்லை என சந்திரிகா தெரிவித்த கருத்துப்பற்றி குறிப்பிட்ட அவர், எமது விடுதலை இயக்கம்பற்றி சந்திரிகாவின் மனதில் விகாரமாகப் புரையோடிக்கிடக்கும் ஆழமான வெறுப்பையும் சந்தேகத்தையுமே இக்கூற்று வெளிப்படுத்துவதாக தெரிவித்தார்.

திரு. பாலசிங்கத்தின் செவ்வியின் விபரம்

**சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கள் இரவு யாழ்ப்பாண மக்களுக்கு விடுத்த விசேட உரையை கடுமையாக விமர்சித்த திரு.பாலசிங்கம் அதனைப் பொய்களும் அர்த்தமற்ற சொற்களும் அடங்கிய பெரியதொரு பொதி என வர்ணித்தார்.**

### தமிழ் கார்டியன்

**இன்று சிறீலங்காவில் நிலவும் அரசியல் இராணுவ நிலைமைபற்றி உங்களது கருத்து என்ன?**

### திரு. பாலசிங்கம்

இலங்கையின் நெருக்கடிச் சிக்கலில் பிரதான பாத்திரத்தை வகிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிறீலங்கா அரசுக்கும் மத்தியில், பரஸ்பர நம்பிக்கையீனம். சந்தேகம் காரணமாக, 'பிளவு' விரிந்து செல்கிறது. எமது விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமாக ஒரு மாத கால போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து, மிகவும் ஒழுங்காக சமாதானத்தைப் பேணி வருகிறது. எமது இந்த நல்லெண்ண சமிக்ஞையை கருத்தில் எடுக்காது, பொருட்படுத்தாது சிங்கள ஆயுதப்படைகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. ஒருதலைப் பட்சமாக நாம் கடைப்பிடித்து வரும் போர்நிறுத்தத்தால் எழுந்த சமாதான சூழலை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசத்திலும் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல்களை நடாத்தும் நோக்கத்துடன் சிறீலங்கா அரசு, தனது ஆய்தப் படைகளை முழு அளவிலான போருக்கு தயார்ப்படுத்தி வருகிறது. யாழ்ப்பாணப் போர்க்களத்திற்கு புதிய படையணிகளையும் பீரங்கிகள், டாங்கிகள், பல்குழல் ஏவுகணை செலுத்திகள் போன்ற கனரக அழிவு ஆயுதங்களையும் சிங்கள அரசு அனுப்பி வருகிறது. கிளாலி - எழுதுமட்டுவாள் - நாகர்கோவில் எல்லையோரமாக நிலைகொண்டுள்ள எமது பாதுகாப்பு அரண்களை ஊடறுத்து ஆனையிறவு நோக்கி நகரும் நோக்குடன் ஒரு பாரிய தாக்குதற் திட்டம் வரையப்பட்டிருக்கிறது. இப் பாரிய தாக்குதலை நடாத்த சிறீலங்கா முற்படுமாயின் அதன் விளைவு பாரதூரமாக அமையும். இது எதிரிக்கு பெரும் இரத்தக் களரியை ஏற்படுத்தும் என்பது மட்டுமல்லாமல் போர் என்றுமில்லாத அளவுக்கு விரிவடையும் சாத்தியமும் உண்டு.

சந்திரிகாவின் ஆட்சிப்பீடத்திற்கு சமாதானத்தில் அக்கறையில்லை. பேச்சுவார்த்தை மூலமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் அக்கறையில்லை. இவர்களுக்கு இராணுவத் தீர்வில்தான் அக்கறையும் நம்பிக்கையுமுண்டு. போராடுபவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படும் பாரிய உயிரழிவுகள் பற்றி இந்த ஆட்சிப்பீடம் கவலைப்படுவதில்லை. அரசாங்கத்தின் நோக்கங்களை மதிப்பாய்வு செய்யும்பொழுது சமகால அரசியல் - இராணுவ சூழ்நிலை தெளிவற்றதாக, இருள் படிந்ததாகவே தென்படுகிறது.

### தமிழ் கார்டியன்

**விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் பலவீனமடைந்திருப்பதாக அரசாங்க, இராணுவ வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது. இப் பலவீனம் காரணமாகவே புலிகள் இயக்கம் சமாதானத்தை நாடுவதாகவும், போரில் ஓய்வெடுத்து தம்மை மீண்டும் பலப்படுத்த புலிகளுக்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் பேசப்படுகிறது. இந்த மதிப்பாய்வு பற்றி உங்களது கருத்து என்ன?**



### திரு. பாலசிங்கம்

இந்த மதிப்பாய்வு மிகவும் தவறானது. எமது நேர்மையான நோக்கத்தை அரச தரப்பு தவறாகப் புரிந்திருக்கிறது.

நாம் ஒரு பலமான தளத்திலிருந்தே சமாதானத்தை நாடுகிறோம். இராணுவ ரீதியாக மட்டுமன்றி தார்மீக ரீதியாகவும் நாம் பலமாக இருக்கிறோம். எமது மக்களின் போராட்ட இலட்சியம் நியாயமானதாக, நீதியானதாக அமையப்பெற்றிருப்பதால், அது எமக்குத் தார்மீக பலத்தைத் தருகிறது.

தமிழர்களது இனப்பிரச்சினையானது அடிப்படையில் 95 அரசியற் பிரச்சினையே. ஆகவே இப் பிரச்சினையை அரசியல் மார்க்கமாக, அரசியற் பேச்சுவார்த்தை மார்க்கமாகத் தீர்த்துவிடலாம் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால் தான் நாம் சமாதானத்தை நாடி நிற்கிறோம்.

சமாதான வழிமூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்குமாறு சர்வதேச சமூகம், எம்மையும் சிறீலங்கா அரசையும் வற்புறுத்திவருகிறது. இந்த வேண்டுகோளை சாதகமாக வரவேற்று நாம் சமாதான வழிமுறையை கடைப்பிடிக்கிறோம். வெறும் வார்த்தைகளில் அல்லாமல் செயல்முறை வடிவத்தில் எமது சமாதான நோக்கை நாம் நிரூபித்துக்காட்டியிருக்கிறோம். ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தம் பிரகடனம்செய்து, இராணுவத்தின் ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் மத்தியிலும் நாம் சமாதானத்தைப் பேணி வருகிறோம். நேர்மையான முறையில் சமாதான வழிமுறையை நாடும் எமது முயற்சியை சர்வதேச சமூகம் வரவேற்கும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

### தமிழ் கார்டியன்

**யாழ்ப்பாணத்தில் சமீப காலத்தில் நீங்கள் சந்தித்த பின்னடைவுகளின் அடிப்படையில், உங்களது இயக்கம் இராணுவ ரீதியாக பலவீனப்பட்டிருக்கலாமென அரசாங்கம் கருதியிருக்கலாம். இதுபற்றி உங்களது கருத்து என்ன?**

### திரு. பாலசிங்கம்

யாழ்ப்பாணத்தில், சாவகச்சேரி அரியாலைப் பிரதேசங்களில் நாம் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக தந்திரோபாய பின்நகர்வை மேற்கொண்டோம்.

ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தம் செய்து சமாதானத்தைப் பேணியவாறு பெரிய அளவில் எதிர்த் தாக்குதல்களை நடாத்துவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. அடுத்தபடியாக இப் பகுதிகள் ஒரு பாதுகாப்பு யுத்தத்திற்கு அனுகூலமான நிலப்பரப்பும் அல்ல. திறந்த வெளிப் பகுதிகளைக் கொண்ட இப் பிரதேசத்தில் வான் தாக்குதல்களுக்கு எமது போராளிகள் அநியாயமாகப் பலியாகலாம். அத்தோடு பூநகரியிலிருந்து கடல் நீரேரியைக் கடந்து போராளிகளையும் ஆயுதங்களையும் கொண்டுசெல்வதில் பல சிக்கல்களும் உள்ளன. இத்தகைய காரணங்களுக்காகவும், குறிப்பாக எமது போராளிகள் மத்தியில் உயிர்ச் சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கத்துடனுமே நாம் இப் பகுதிகளிலிருந்து தந்திரோபாயப் பின்நகர்வை மேற்கொள்வதென முடிவு எடுத்தோம். இதனை யாராவது பலவீனம் எனக் கருதினால் அது பெரிய தவறான பார்வையாகும்.

### தமிழ் கார்டியன்

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கள் இரவு தமிழ் மக்களுக்கு விடுத்த நீண்ட உரையில், விடுதலைப் புலிகளை சமாதானத்தின் விரோதிகளென திட்டித்தீர்த்திருக்கிறார். தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கு புலிகளே காரண கர்த்தாக்கள் எனவும் கடுமையாகச் சாடியிருக்கிறார். காரசாரமான இந்த உரையில் உங்களது ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த அறிவிப்பை அவர் நிராகரித்தது மட்டுமன்றி, சமாதானப் பேச்சுவார்த்தையில் உங்களுக்கு அக்கறை இல்லையென்றும் குற்றம்சாட்டியிருக்கிறார். இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?**

### திரு. பாலசிங்கம்

பொய்களும் புரட்டுகளும் வெறுமையான அர்த்தமற்ற வார்த்தைக் குவியல்களும் அடங்கிய பெரியதொரு பொதியாக சந்திரிகாவின் உரையை நாம் வர்ணிக்கமுடியும். இதில் எமது மக்களுக்கு பயனுள்ளதாக எதுவுமே இல்லை. இந்த உரையில் சந்திரிகா தனது அரசாங்கத்தை நன்னெறிப் பண்பின் திருவடிவமாகவும், நீதியையும் சமத்துவத்தையும் கடைப்பிடித்து, சிறுபான்மை சமூகத்தவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்துவரும் ஒரு சிறந்த ஆட்சிப்பீடமாகவும் வர்ணிக்கிறார். அத்தோடு, வடக்கில் கோடி கோடியாகக் கொட்டிக்குவித்து தமிழ் மக்களின் நலனுக்காக தனது அரசாங்கம் பெரும்பணி ஆற்றுவதாகவும் புகழ்ந்துரைக்கிறார். இதையெல்லாம் கேட்கும் பொழுது, 'எமது மக்களுக்கு வியப்பாகவும் வேடிக்கையாகவும்' இருந்திருக்கும். சாராம்சத்தில், சந்திரிகாவின் உரையானது, தமிழ் மக்களின் அறிவுக்கு இழைக்கப்பட்ட ஒரு அவமதிப்பாகக் கருத வேண்டும்.

வடக்கின் வாழ்வியல் யதார்த்தம்பற்றி எமது மக்கள் நன்கறிவார்கள். எமது மக்கள் அந்த நிலத்தில் வாழ்வதால், அங்கு நிகழும் கொடுமையான போர் பற்றியும், அரச ஒடுக்குமுறையின் அநீதிகள் பற்றியும் அனுபவ

(தொடர்ச்சி 24-ம் பக்கம்)

# 'மாமனிதர்' குமார் படுகொலையில் தொடங்கி மிருசுவில் படுகொலையில் முடிந்த ஆண்டு

2000 ஆண்டை புதிய அறிவியல், விஞ்ஞான, பொருளாதார கொள்கைகளை வகித்து தேசத்தையும், மக்கள் வாழ்வையும் மேம்படுத்தும் திட்டங்களுடன் உலக நாடுகள் வரவேற்று செயற்படுத்தின. தமிழ் மக்களோ சிங்கள அரசின் இனப்படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், கைதுகள், சித்திரவதைகள், காணாமல் போதல், சிறையில் அடைத்தல் மற்றும் பொருளாதார, மருத்துவ, ளிபொருள், உணவுத்தடைகளால் வறுமை, பசி, நோய், சாவு என்பனவற்றில் இருந்து புத்தாயிரம் ஆண்டிலாவது மாற்றம் வராதா என எதிர்பார்த்தனர். ஆனால் தமிழ் மக்களிற்கு சிங்களம் மேலும் பல மனித வதைகளையும், மனப் புண்களையுமே ஏற்படுத்தியது. மாமனிதர் குமார் பொன்னம்பலத்துடன் ஆரம்பித்த இவ்வாண்டிற்கான மனிதப் படுகொலைப்படலம் மிருசுவிலில் இராணுவத்தால் கோரமாக வெட்டியும், குத்தியும் கொல்லப்பட்ட 8 தமிழர் உயிர்களுடன் முடிவுற்றது.

சிங்கள அரசின் அடிப்படை நோக்கம் தமிழர் போராட்டத்தை அழிக்கவேண்டும். அவற்றில் வெற்றிகாண முடியாமல் போனதால் அப்போராட்டத்திற்கு பலமாக நிற்கும் மக்கள் சக்தியை அழிக்க வேண்டும். மக்களை இராணுவ, அரசியல், பொருளாதார ரீதியில் நசுக்குவதன் மூலம் தமிழர் எழுச்சியை அடக்கலாம் எனும் எண்ணக்கருவை மனதில் கொண்டு தனது முழுப்பலாத்காரத்தையும் தமிழர்கள் மீது திணித்துள்ளது. இதில் முதற்பலியானவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம். இவர் ஒரு சட்டவல்லுனர். தமிழ் மக்களின்பால் பற்றுக்கொண்டவர். சிங்கள இனவாத கொள்கையையும் மனித உரிமை மீறல்களையும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வெளிக்கொண்டு வந்ததில் பெரும் பங்குவகித்தவர். கொழும்பில் இருந்துகொண்டே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டதுடன், சிங்கள அரசியல்வாதிகள். சமூகவிரோதிகள் ஆகியோர் தமிழர்களை சிறுமைப்படுத்தும் விடயங்களிற்கும், பேச்சுக்களிற்கும், செயல்களிற்கும் கடுமையான பதிலடி கொடுத்து வந்தவர். பயங்கரவாதத்தடைச்



சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் வாடும் இளைஞர்கள், யுவதிகளை வெளிக்கொண்டு வருவதில் அரும்பாடுபட்டவர். இவரின் செயற்பாடானது சந்திரிகா அரசின் இனவாத . கொள்கைக்குப் பெரும் நெருக்கடியாகவும், தலையிடியாகவும் இருந்தது. இதனால் சிங்கள அரசு தன் கைக்கூலிகளைக்கொண்டு 05.01.2000 அன்று அவரை சுட்டுக்கொன்றது.

> *பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் வாடும் இளைஞர்கள், யுவதிகளை வெளிக்கொண்டு வருவதில் அரும்பாடுபட்டவர். இவரின் செயற்பாடானது சந்திரிகா அரசின் இனவாத கொள்கைக்குப் பெரும் நெருக்கடியாகவும், தலையிடியாகவும் இருந்தது.*

தமிழ் மக்களின் மனங்களில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்திய அடுத்த நிகழ்வு யாழ். செய்தியாளர் நிமலராஜன் படுகொலை. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இராணுவத்தினது அத்துமீறல்களையும், படுகொலைகளையும் வெளிஉலகிற்குக் கொண்டு வந்ததில் மிகவும் முக்கியமானவர் இவர். ஒரு நேர்மையான உண்மையான, நடுநிலையான செய்தியாளராக செயற்பட்டவர். உண்மையை வெளிப்படையாக பேசும் ஒரு செய்தியாளர். யாழ்ப்பாணத்தில் நடந்த கொலைகள், ஆள்கடத்தல்கள், காணாமல்போதல், மக்களின் துயர்மிக்க வாழ்க்கையின் நெருக்கடிகளை, உண்மைகளை, உடனுக்குடன் சர்வதேச வானொலிகள் மூலம் வெளிக்கொண்டு வந்தவர். உண்மையை துணிந்து சொல்வதில் இராணுவத்தினதும், சமூகவிரோத இயக்கங்களினதும் பலத்த நெருக்கடியைச் சந்தித்த போதும் இறுதிவரை தமிழ் மக்களின் குரலாகவே ஒலித்தார். இவரையும் இனவாத அரசு தனது கைக்கூலிகளைக்கொண்டு சுட்டுக்கொன்றது.

சிங்கள இராணுவம் தோல்வியைச் சந்திக்கும்போதெல்லாம் அப்பாவி மக்கள்மீது எறிகணை வீச்சையும், விமானக்குண்டுவீச்சையும் கண்மூடித்தனமாக நடத்துவது வழமையாகிவிட்டது. இதில் சாவகச்சேரியில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்ததும், காயமடைந்ததும் அதில் குறிப்பாக பெற்ற பிள்ளைகளாலேயே கைவிடப்பட்டு கைதடி வயோதிபர் இல்லத்தில் அடைக்கலமிருந்த 15 இற்கும் மேற்பட்ட வயோதிபர்கள் கொல்லப்பட்ட சம்பவமும் செம்பியன்பற்று தேவாலயத்தில் உயிரைக்காப்பாற்ற அடைக்கலம் தேடிய மக்கள் மீதான எறிகணை வீச்சில் 4 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 12ற்கு மேற்பட்டோர் காயமடைந்தமையும் பூநகரி பள்ளிக்குடாவில் கிபிர் குண்டு வீச்சால் 5 பேர் உடல் சிதறிப் பலியாகியும், 12 பேர் படுகாயமடைந்தும் சண்டிக்குளத்தில் 4 மீனவக் குடும்ப தலைவர்கள் குண்டுவீச்சால் கொல்லப்பட்டதும், இதே போன்று தமிழீழத்தின் பல பகுதிகளிலும் எறிகணைவீச்சு, விமானக்குண்டுவீச்சாலும் பெறுமதிமிக்க பல உயிர்களை பறித்தும் உள்ளது. அத்துடன் தமிழீழத்தில் படையினர் பலரை துப்பாக்கியாற் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்துள்ளனர்.

இதேபோன்று கடற்படையின் அடாவடித் தனங்களால் பலர் சுட்டுக்கொல்லப்பட்டும், காணாமல் போயும் உள்ளனர். தமிழீழத்தின் சகல கடற்பரப்பிலும் இந்த நிகழ்வு நடைபெற்றுள்ளது. திருமலையில் அப்பாவி மீனவர்களைச் சுட்டுக் கொன்று, பலரைக் காயப்படுத்தினர். குருநகரில் மீன்பிடிக்கச் சென்றவேளை படகு எறிகணைத் தாக்குதலிற்குள்ளானபோது 11 மீனவருக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை.

இதேவேளை சிங்கள அரசு பயங்கரவாத, அவசரகால சட்டத்தின்கீழ் காரணமின்றி தமிழர்களை கைதுசெய்து சித்திரவதை செய்து சிறையில் அடைக்கின்றது. ஆண்டுக் கணக்கில் பலநூறு தமிழ் இளைஞர், யுவதிகள் சிறையில் வாடுகின்றனர். கேட்பாரற்று, விசாரணையற்று, அனாதைகள் போல் உணவு உடை போன்ற அடிப்படை வசதியற்று உற்றத்தாரையும், சுற்றத்தாரையும் பார்க்க ஏங்கியபடி வாடும் அவர்கள் துயரம் பெரும் வேதனையானது. சிறையில் கூட அவர்களிற்கு பாதுகாப்பு இல்லை. களுத்துறைச் சிறையில் 06.01.2000 அன்று காப்பாற்றவேண்டிய அதிகாரிகளே யேசுதாஸ் என்ற இளைஞனை அடித்துக் கொன்றனர். 33 பேர் மோசமாக காயம் அடைந்தனர். மறுநாளும் இதே அதிகாரிகள் மேலும் ஒரு இளைஞனை அடித்துக்கொன்று 12 பேரைக் காயப்படுத்தினர். இவற்றைவிட மோசமான இனவெறிச் செயல் பிந்துனுவெவவில் நடந்தது. தமிழ் இளைஞர்கள் தடுப்பு முகாம் மீது சிங்களக் காடையர்களை ஏவி விட்டு மரம் அறுக்கும் வாளால் அறுத்தும், கத்தியால் வெட்டியும், குத்தியும் 30 க்கு மேற்பட்டவர்களைக் கொன்றும், பலரைக் காயப்படுத்திய செயலானது மனித உணர்வுள்ள எவராலும் பொறுத்துக்கொள்ள முடியாததொன்று.

அத்துடன் தமிழ் மக்கள் காணாமல் போகும் நிகழ்வு சாதாரணமாகிவிட்டது. வடக்கு - கிழக்குப் பகுதியிலும், சிங்களப் பகுதிகளிலும் காணாமல் போவது அதிகரித்து வருகின்றது. குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள வவுனியாவில் மட்டும் 200ற்கும் மேற்பட்டவர்கள் சென்ற வருடம் [2000] காணாமல் போயுள்ளனர். இது சம்பந்தமாக வவுனியா சட்டத்தரணி எமிலியாஸ் கூறுகையில்; 'சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் மக்கள் வாழ்கின்றனர். திறந்த வெளிச் சிறைச்சாலைகளிலும் முகாம்களிலும் மக்கள் வாழ்கின்றனர். இலங்கையிலேயே கூடுதலான மனித உரிமை மீறல்கள் வவுனியாவில்தான் நடக்கின்றது' எனச்சுட்டிக்காட்டியிருக்கின்றார்.



இறுதியாக டிசம்பர் 19ம் திகதி மிருசுவில் பகுதிக்கு வீடு பார்க்கச்சென்ற தமிழ் மக்களை சிங்கள இராணுவத்தினர் கண்ணைக் கட்டி இழுத்துச் சென்று கத்தியால் வெட்டியும், குத்தியும் கொலை செய்து புதை குழியில் போட்டுள்ளனர். ஒருவர் மட்டும் இராணுவத்தைத் தள்ளிவிட்டு தப்பியோடியதால் இவ்வுண்மை வெளிச்சத்திற்கு வந்தது. இந்தக் கோரக்கொலையுடன் இந்த ஆண்டு தமிழர்களிடம் இருந்து விடைபெற்றது.

> **கேட்பாரற்று, விசாரணையற்று, அனாதைகள் போல் உணவு உடை போன்ற அடிப்படை வசதியற்று உற்றத்தாரையும், சுற்றத்தாரையும் பார்க்க ஏங்கியபடி வாடும் அவர்கள் துயரம் பெரும் வேதனையானது. சிறையில் கூட அவர்களிற்கு பாதுகாப்பு இல்லை.**

இதிலிருந்து தமிழ் மக்கள் ஒரு தெளிவான முடிவிற்கு வரவேண்டியுள்ளது. அடங்கி, ஒடுங்கி, சிங்களவனிடம் அடைக்கலம் தேடிச்சென்றால் அழிந்து போவதும், அடிமை வாழ்வுமே மிஞ்சும். போராடுவதன் மூலமே ஒவ்வொரு தமிழனும் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள முடியும். தமது உரிமையைக் காப்பாற்ற முடியும். எமது உரிமையை நாமே வென்றெடுப்போம். இவற்றிற்கு போராடுவதுதான் சிறந்தவழி என்பதை சென்ற ஆண்டும் சிங்கள அரசு எம்மீது கட்டவிழ்த்து விட்ட இனவெறிப் படுகொலைகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

– ரவீந்திரன்



## ஒரு விடிவிற்காக தமது உயிர்களை...

# தளபதி கிட்டு

தமிழீழ தேசியத் தலைவர் உட்பட, எத்தனையோ பெரியோர்களும், தலைவர்களும், கவிஞர்களும் இவர் பற்றிக் கூறிய பிறகு புதிதாக எதனையும் கூறிவிடமுடியாது. ஒரு வரலாற்று நாயகன் பற்றிய பதிவுகளை, ஒரு குறிப்பிட்ட பந்திகளுக்குள் அடக்கிவிடுவதென்பது கடினமானது மட்டுமல்ல, முடியாததும் கூட.

இந்தவகையில் வங்கக் கடலில் காவியமான தளபதி கிட்டுவின் நினைவாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த செய்தியின் ஒரு பகுதியினை முதலும், இரண்டாவதாக, தளபதி கிட்டுவின் மீது அன்பும், மரியாதையும், பற்றுறுதியும் வைத்திருந்த திரு. பழ. நெடுமாறன் அவர்கள், தான் எழுதிய 'காவிய நாயகன் கிட்டு' எனும் நூலில் எழுதியிருந்த முன்னுரையின் ஒரு பகுதியினையும் இங்குதருவது பொருத்தமாக அமையும்.

'அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனுடைய அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால், அவன் ஓர் அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான். போராடினான். அனைத்து மக்களுடைய இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்கள் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனுடைய ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது'.

'மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விவரிக்க முடியாது. என் அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனுடைய மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.'

'நான். கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில் ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனுடைய ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக்கொண்டது.

கிட்டு! நீ சாகவில்லை. ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்.

◆ ◆ ◆



ஓ! கிட்டு! எனது இனிய இளவலே! உன்னை நினைக்கும் தோறும் என் கண்கள் பனிக்கின்றன.

உனது இணையற்ற வீரத்தினாலும், அளப்பரிய தியாகத்தினாலும், தமிழினத்தைத் தலை நிமிரவைத்த மாவீரனே! உன் நினைவு எனது நெஞ்சத்தை நெக்குருக வைக்கிறது.

கொந்தளிக்கும் கடலில் கொடுவாய்ச் சுறாக்களாகச் சூழ்ந்து கொண்ட இந்தியப் போர்க் கப்பல்களின் வல்லாதிக்கத்தை எதிர்த்து நீயும் உன் தோழர்களும் படைத்த வீரகாவியம் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத மென்க்கீர்த்தியாகப் பதிந்துவிட்டது.

தீரமிக்க தம்பியே! நீ மறையவில்லை! தமிழர் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறாய்.

அன்று கடலுள் மாய்ந்த சங்ககாலப் பாண்டியன் இளம் பெருவழுதியைப் போல நீயும் கடலையே கல்லறையாக்கிக்கொண்டாய்.

அந்த நாளில் இதே கடலில் புலிக்கொடி பறந்த சோழரின் கப்பல்கள் தங்குதடையின்றிச் சென்று திசை நான்கினும் தமிழரின் வீரப் புகழைப் பரப்பின. தமிழன் ஆண்ட கடலில் வேங்கையின் மைந்தனான உன்னை வஞ்சகமாக வழிமறிக்கவும் துணிந்தனரே எனக் கொதிக்கிறேன். குமுறுகிறேன்.

கொடுங்கடல் கொள்ளை கொண்ட பண்டைத் தமிழ் மூதாதையரின் குமரிக் கண்டத்தை மீட்டெடுக்கும் ஆசையுடன் கடலில் மூழ்கிச் சென்றனையோ என ஏங்குகிறேன்.

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)



# மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்

## பாகம் – 29

ஆனையிறவுப் படைத்தளத்தை வெற்றிகொண்ட சண்டையில் இயக்கச்சிப் பகுதி வழியாக முன்னேறிய படையணி ஜெயந்தன் படையணியாகும். இராணுவத்தை நிதானிக்கவிடாமல் அதற்கு அவகாசம் கொடுக்காது உக்கிரமாக நடத்தப்பட்ட இத் தாக்குதலில் ஹமில்டன் வணசிங்கவின் மருமகனான கேணல் பாக்கி ஜெயதிலகவும் பலியானதாக தெரிவிக்கப்பட்டது. இதேபோல நிலத்தில் வீழ்ந்த 54வது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி ஹரிஸ் ஹேவாராச்சியை தான் 2 கிலோமீற்றர் தூரம் இழுத்துச் சென்றதாகவும் அவரைக் காப்பாற்ற தான் கவசப்படையினருடன் தொடர்பு கொண்டதாகவும் ஆனால் அது புலிகளின் கடுமையான எறிகணைத் தாக்குதலினால் சாத்தியமாகாமல் போனதாகவும் கட்டளைத்தளபதியின் மெய்ப்பாதுகாவலர் தெரிவித்ததாக 26 ஏப்ரல் 2000 அன்றைய தினகரன் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

எனவே ஜெயந்தன் படையணியினரின் பங்களிப்புக் குறித்து அறிய இந்த அணிகளுக்குத் தலைமை தாங்கிச் சென்ற தாத்தா அவர்களுடன் தொடர்புகொண்டோம். 8 மே 2000 அன்று அவரைச் சந்திக்கக் கூடியதாக இருந்தது. அவருடனான சந்திப்பின்போது நாம் கேட்ட கேள்விகளும் அவரது பதில்களும் வருமாறு.

★ *ஆனையிறவுப் பெருந்தளம் மீதான தாக்குதலில் ஜெயந்தன் படையணியின் பங்களிப்பு எப்போது ஆரம்பித்தது என்பதிலிருந்து நடந்த சம்பவங்களை விபரிப்பீர்களா?*

எமது ஜெயந்தன் படையணியின் ஒரு அணிக்கு இத்தாவில் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக கேணல் கருணா அம்மான் எமக்கு அறிவித்தார். அப்போது யாழ் குடாநாட்டில் ஏற்கனவே சண்டைகள் ஆரம்பித்து நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதன்படி எனது தலைமையிலான அணி பயிற்சிக்கெனப் புறப்பட்டது. எமக்கென வழங்கப்பட்ட பயிற்சிகளில் பெரும்பான்மையானவை தேசியத் தலைவர் முன்னிலையிலேயே நடைபெற்றன. இதற்கென கூடுதலான நேரத்தை தலைவர் எமக்கென ஒதுங்கியிருந்தார்.

நேரடியாக அவரே நின்று எமக்கு பயிற்சி வழங்கியது எமது போராளிகளிற்கு பெரும் உற்சாகம் அளித்தது. பயிற்சி முடிந்ததும் 13 ஏப்ரல் 2000 அன்று முழுநாளும் [புதுவருட தினத்தன்று] எமக்கு ஒத்திகை நடைபெற்றது. அதனை தலைவர் நேரடியாக நின்று பார்வையிட்டதுடன் எம்முடன் மதிய போசனத்திலும் கலந்துகொண்டார். புறப்படும்போது ஆனையிறவைக் கைப்பற்றியதும் மீண்டும் சந்திப்போம் என்றுகூறி எம்மிடமிருந்து விடைபெற்றார்.

17 ஏப்ரல் 2000 அன்று ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு, சண்டையை வழிநடத்திய கேணல் தீபன் ஆகியோர் எம்மை அழைத்து சண்டையில் எமக்குரிய திட்டங்களை விளக்கினர். இதன்படி 18ஆம் திகதி பகல் ஒரு மணிக்கு சோரன்பற்று, மாசார் வழியாக நாம் முன்னேறத் தொடங்கினோம்.

இரு பகுதிகளால் நாம் செல்ல வேண்டியிருந்தது. எனினும் ஒரு பகுதியில் எதிரியின் எதிர்த்தாக்குதல் பலமானதாக இருந்தது. அத்துடன் அப்பகுதியில் எமது அணிகளுக்குத் தலைமை தாங்கிய மேஜர் தூயவனும் வீரச்சாவடைந்தார். எனவே நாம் உடைத்து முன்னேறிய மற்றைய பகுதியால் அனைத்துக் குழுக்களையும் நகர்த்தினோம். அன்றிரவே நாம் குறிப்பிட்ட பகுதிகளைக் கைப்பற்றினோம். கைப்பற்றிய பகுதிகளில் நிலைகளை அமைத்த நாம் அடுத்த நாள் காலை மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்தோம். இச் சண்டையானது இடைவிடாது தொடர்ந்தது. கிட்டத்தட்ட 12 மணி நேரச் சண்டையின் பின்னர் மாலை 6.30 மணியளவில் நாம் கண்டிவீதியைக் கைப்பற்றினோம்.

இதேவேளை சேகர் தலைமையிலான அணியும் கண்டிவீதியை வந்தடைந்தது. இரு அணிகளும் தொடர்பை ஏற்படுத்திய பின்னர் அணிகளுக்கு ஓய்வு கொடுக்கத் தீர்மானித்தோம். பின்னர் புகையிரதப்பாதையைக் கைப்பற்றினால்தான் எமது வெற்றி இலகுவாகும் எனத் தீர்மானித்த நாம் இரவு 10 மணியளவில் சண்டையை ஆரம்பித்து அடுத்தநாள் காலை புகையிரதப்பாதையையும் கைப்பற்றினோம்.

## களமுனையில் இருந்து

இதனைத் தொடர்ந்து ஆனையிறவு வழியாகவும், பளை வழியாகவும் [புகையிரதப்பாதை] இரு முனைகளில் இராணுவம் எம்மீது தாக்குதலைத் தொடுத்தது. பெருந்தொகையான படையினர் இத் தாக்குதலில் பங்குபற்றினர். இரு பகுதிக்குமிடையே கடும் சமர் மூண்டது.

இச்சமரில் எமது தரப்பிலும் ஓரிரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இதனைத் தொடர்ந்து நாம் எறிகணைத் தாக்குதலைத் தீவிரப்படுத்தவே இராணுவத்தினர் பின்வாங்கினர். அப்பகுதியில் நாம் எமது நிலைகளைப் பலமாக அமைத்துக்கொண்டு ஒருநாள் இடைவெளிவிட்டு இயக்கச்சி முகாம் மீதான தாக்குதலை மேற்கொண்டோம். முதலில் மிக வேகமாக முன்னேறிய ஒரு அணி முகாமினுள் புகுந்தபோதும், இந்த அணிக்கு உதவியாகச் சென்ற அணி முகாமிற்குள் செல்ல முடியவில்லை. எதிரி புகைக்குண்டுகளை வீசியதால் திசை தெரியாமல் அந்த அணி முகாமிற்குள் செல்ல முடியவில்லை. இதேவேளை உள்ளே சென்ற அணி தனித்துப் போகவே, ஓரிருவர் வீரச்சாவடைந்தனர். இதனால், அந்த அணி மீண்டும் பழைய நிலைகளுக்குத் திரும்ப வேண்டியிருந்தது. மீண்டும் அடுத்த நாள் காலை சண்டையை ஆரம்பித்த நாம் அன்று பகலே முகாமைக் கைப்பற்றினோம். இந்நடவடிக்கையின்போது 18ம் திகதி தொடக்கம் லெப். கேணல் கண்ணன் உட்பட 27 போராளிகள் வீரச்சாவடைந்தனர். லெப்.கேணல் கண்ணன், தப்பியோடிய இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலின்போது வீரச்சாவடைந்தார். இவரே எமது தரப்பில் இறுதியாக வீரச்சாவடைந்தவர் ஆவார்.

★ *இவர் வீரச்சாவடைந்த சம்பவம் பற்றி விளக்க முடியுமா?*

பின்வாங்கிய இராணுவத்தினர் கடற்கரை வழியாக தப்பியோடினர். இவர்களை வழிமறிக்க எமது அணியினர் முயன்றனர். இம் முயற்சிக்கு இடையில் இருந்த நீரேரி தடையாக இருந்தது. இதனால் பல இராணுவத்தினர் தப்பிச் சென்றனர். ஒரு குளக்கட்டுப் பகுதியில் புல்லிற்குள் பதுங்கியிருந்த இராணுவத்தினரின் தாக்குதலிலேயே இவர் வீரச்சாவடைந்தார்.

★ *இவ்வளவு விரைவாக இவ் இராணுவத்தளத்தை வெற்றி கொள்வோம் என்று நினைத்தீர்களா?*

தாக்குதலுக்குத் திட்டமிடும்போதே தலைவர் அவர்கள் அடிக்கடி வலியுறுத்தும் விடயங்கள் ,பயிற்சி, வேகமான நகர்வு - தந்திரம் என்பனவாகும்

அதன்படி முகாமைப் பிடிப்பதாயின் இரண்டு அல்லது மூன்று நாளில் இதனை நிறைவேற்றிவிடவேண்டும். இல்லையேல் எமது முயற்சி வெற்றியளிக்காது. இதற்கேற்றவாறு எமது நகர்வு வேகமாக இருக்கவேண்டும் எனத் தலைவர் வலியுறுத்துவார்.

மேலும் அவர் அடிக்கடி வலியுறுத்துவது போன்று குவிந்து நிற்கக்கூடாது. இழப்புக்களைக் குறைக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்களையும் நாம் கருத்திற்கொண்டோம்.

எனினும் கண்டிவீதியைக் கைப்பற்றி 2 அல்லது 3 நாட்களாவது வைத்திருந்த பின்னர்தான் முகாமைக் கைப்பற்ற முடியும் என்று நினைத்திருந்தோம். எனினும் நினைத்ததைவிட வேகமாக நாம் இலக்கை எய்தியுள்ளோம். இதற்குக் காரணம் தந்திரமான நகர்வு மற்றும் இலக்குத் தவறாத எறிகணைவீச்சு என்பனவேயாகும்.

[தொடரும்]

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி கார்த்திகா தங்கத்துரை, செல்வி சாருமதி செல்வநேசன், அன்ரனி எடோறா திரோசினி ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்




### குணபாலசிங்கம் கிருசாந்தன்

**இடம்:** 45144 -Essen-Germany
**வயது:** 05 (07.09.1995)
**பொழுதுபோக்கு:** தொலைக்காட்சி பார்த்தல், முத்திரை சேகரித்தல்
**உறுப்பினர் எண்:** G102

உ

தைப்பொங்கல்
தைப்பொங்கல் தைமாதத்தில் கொண்டாடப்படும்
தைப்பொங்கலுக்கு வெடி சுடுவோம்
தைப்பொங்கல் தமிழர்களின் பொங்கல்





### பாஸ்கரன் கீர்த்தனன்

**இடம்:** 8008 - Zürich, Swiss
**வயது:** 05 (30.10.1995)
**பொழுதுபோக்கு:** தொலைக்காட்சி பார்த்தல், பந்துவிளையாடுதல், படம் வரைதல்
**உறுப்பினர் எண்:** S120


பச்சைக் கிளியே வா வா
பாலும் சோறும் உண்ண வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா
பையப் பையப் பறந்து வா
பாடிப் பாடிக் களித்து வா
கையாலே வந்து இருக்க வா
கனி அருந்த ஓடி வா




### மகேந்திரன் தினுஷா

**இடம்:** 47805 Krefeld, Germany.
**வயது:** 05 (09.03.1995)
**தமிழ்ப்பாடசாலை:** கிறிபெல்ட் தமிழாலயம்
**பொழுதுபோக்கு:** படம் வரைதல், தொலைக்காட்சிபார்த்தல், விளையாடுதல்
**உறுப்பினர் எண்:** G130

அம்மா அம்மா வணக்கம் உங்கள்
அன்பு வேண்டும் எனக்கும்
அப்பா அப்பா வணக்கம் – உங்கள்
ஆசி வேண்டும் எனக்கும்






## கதை முற்றம்

### மகிழ்ச்சிக்குக் காரணம்

அணில் ஒன்று மரக் கிளைகளில் தாவி விளையாடிக்கொண்டிருந்தது. அந்த மரத்தின் கீழே தூங்கிக்கொண்டிருந்த ஓநாயின் மேல் அது தவறி விழுந்தது.

விழித்த ஓநாய் அந்த அணிலைப் பிடித்துக் கொண்டது.

உயிர் போகப் போகிறதே என்று அஞ்சியது அணில். 'என்னைவிட்டுவிடு' என்று கெஞ்சியது.

'நான் கேட்கும் கேள்விக்கு நீ சரியான பதில் தந்தால் உன்னை விட்டுவிடுகிறேன்' என்றது ஓநாய்.

'கேள். எனக்குத் தெரிந்தால் பதில் சொல்கிறேன்' என்று நடுக்கத்துடன் சொன்னது அணில்.

'அணிலே! நீங்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். மரக்கிளைகளில் ஓடிஆடி விளையாடுகிறீர்கள். உங்களை விட மிகுந்த வலிமை வாய்ந்தவர்கள் ஓநாய்களாகிய நாங்கள். இருந்தும் நாங்கள் எப்பொழுதும் சோகத்துடன் இருக்கிறோம். அது ஏன்?' என்று கேட்டது ஓநாய்.

'ஓநாயே! என்னை மரத்தின்மேல் ஏற அனுமதி. கிளையில் அமர்ந்து பதில் சொல்கிறேன்' என்றது அணில்.

'அப்படியே செய்' என்று அணிலை விட்டது ஓநாய்.

மரத்தின் கிளையில் பாதுகாப்பாக அமர்ந்தது அணில். 'ஓநாய்களாகிய நீங்கள் கொடியவர்கள். நீங்கள் செய்யும் கொடுமைகளுக்கு அளவே இல்லை. அந்தக் கொடுமைகள் உங்கள் உள்ளத்தை எப்பொழுதும் எரித்துக் கொண்டே இருக்கின்றன. அதனால்தான் எப்பொழுதும் சோகமாக இருக்கிறீர்கள்.

அணில்களாகிய நாங்கள் எந்த உயிருக்கும் தீங்கு செய்வதே இல்லை. அதனால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்' என்றது.

## கண்டுபிடியுங்கள்

### கடந்த வார விடை

| | | | | |
|---|---|---|---|---|
| பி | ரே | சி | ல் | |
| பொ | லி | வி | யா | |
| கொ | ல | ம் | பி | யா |
| ப | ர | கு | வே | |
| வெ | னி | சு | லா | |
| உ | ரு | கு | வே | |
| சி | லி | | | |
| பெ | ரு | | | |

கீழே உள்ள எழுத்துகளின் துணைகொண்டு எட்டு நாடுகளைக் கண்டுபிடியுங்கள் முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | | | | கா |
| க | | டா | | |
| மெ | | | | கோ |
| கி | | பா | | |
| கொ | | | | ஸ் |
| ப | | மா | | |
| ஜ | | | கா | |
| கெ | | தி | | |

## கவிதை முற்றம்

### நாளை பொங்குவோம்

பொங்கல் வந்து போனது – தைப்
பொங்கல் வந்து போனது.
மறந்து போனோம் நாங்களே – அதை
மறந்து போனோம் நாங்களே.
தமிழர் திருநாள் பொங்கலே – அன்று
பொங்க மறந்தே போனமே.
பொங்க முற்றம் இல்லைத்தான் – காலை
கதிரவனும் இல்லைத்தான்.
உழவர் இங்கு இல்லைத்தான் – புது
நெல்மணியும் இல்லைத்தான்.
ஆனாலும்...
பொங்க எமக்கு ஆசைதான்
பொங்கும் மனகம் உண்டுதான்.
தேசம் விடியப் பொங்குவோம் – மக்கள்
துயரம் மடியப் பொங்குவோம்
வையம் துலங்கப் பொங்குவோம் – எங்கும்
மகிழ்ச்சி தவழப் பொங்குவோம்.
நாளை வரும் பொங்கலை – நாம்
மறக்காமல் பொங்குவோம்.
எங்கள்
தமிழர் திருநாளிதுவே
உரக்கப்பாடிப் பொங்குவோம்.

*– நிலா –*

## வினா-விடை முற்றம்

### கடந்தவார விடைகள்:

1. அங்கிளியா.
2. ஐக்கிய அமெரிக்கா.
3. கறுப்பு நிறம் சூட்டை வாங்கி உள்ளே விடாது வைத்துக்கொள்ளும்.
4. 'மெதேன்' என்னும் ஒருவகை வாயு வானில் எரிவதால் உண்டாகும் வெளிச்சத்தை கொள்ளிவால் பிசாசு என மக்கள் நம்பினர்.
5. சூரிய வெளிச்சத்தின் உதவியால் உணவை உண்டாக்கிக் கொள்வதற்கு பச்சைநிறம் தேவையாக இருப்பதால்.
6. கெட்ட வாயு வெளியேறுதல், கிருமிகள் இறத்தல்.

### இவ்வார வினாக்கள்

1. மணல் என்பது என்ன?
2. வண்ணாத்திப்பூச்சிகள் எவற்றிலிருந்து உண்டாகின்றன?
3. நெல்லில் எத்தனை வகைகள் உண்டு?
4. இந்தியாவில் உள்ள பெரிய அணைக்கட்டு எது?
5. சூரியனின் ஒரு கதிரின் ஒளிவேகம் எவ்வளவு என்று கணக்கிடப்படுகிறது.
6. பூனை எத்தனை மாதங்களில் குட்டி ஈனும்?

*அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.*

## சிறு கதை


# ஆலமரம்

மூன்று வருடத்தின் பின் எனது சொந்தக் கிராமத்துக்கு வருகின்றேன். ஒரு கிராமத்துக்கு இருக்கக்கூடிய சகல வரைவிலக் கணங்களும் கொண்ட பாரதிராஜாவின் கருத்தம்மா கிராமம் அது. 1997ம் ஆண்டு எமது கிராமத்தில் நடந்த திடீர் சுற்றிவளைப்பின்போது 'சந்தேகத்தின் பேரில்' கைதாகி களுத்துறையில் அடைக்கப்பட்டு இன்றுதான் விடுதலை ஆனேன். தார்றோட்டைக் கடந்து எனது கிராமத்துக்குச் செல்லும் கிரவல் வீதிக்குள் நான் நுழையும் போதே சைக்கிளில் சென்று கொண்டிருந்த கருப்பனின் மகன் கேசவன் என்னைக் கண்டு சைக்கிளை நிறுத்தினான். ஹான்டிலின் இருபக்கமும் கள்ளுமுட்டி இடுப்பில் இயனக்கூடு, இப்பத்தான் கள்ளுச்சீவீற்று வாறானாக்கும்.

'என்னடா தாசன் இப்படி மெலிஞ்சுபோனாய், கொம்மா நேற்று சொன்னவா நீ இண்டைக்கு வருவாய் என்று, சரி... சரி... சைக்கிளில் ஏறு நான் வீட்டுப்பக்கம்தான் போறன்.' கேசவன் சொல்ல நான் மறுபேச்சின்றி சைக்கிளில் ஏறினேன். சைக்கிள் புளுதியைக் கிளப்பிக்கொண்டு சென்றது. இந்தப் புளுதியை சுவாசிப்பதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. நல்ல தண்ணி அள்ளிக்கொண்டு வந்த ராசாத்தி அன்ரி என்னைக் கண்டதும் சைக்கிளை மறித்து 'தம்பீ இப்பதான் வர்றாபோல கிடக்கு, வீட்டபோனவுடன முதல்ல உந்த தாடியை வழி இல்லையெண்டால் பிறகும் பிடிச்சுப்போடுவான்கள்.' கவலையோடு சொன்னாள்.

'ஓம் அன்ரி; நான் பின்னேரம் வீட்டுப்பக்கம் வாரன், அதுசரி அன்ரி ஐயா இப்பவும் ஆட்டோதானா ஓடுறார்' கேட்டேன். 'ஓம் தம்பி, நீ கெதியாய் வீட்டபோ, பாவம் கொம்மா தேடப் போறாள். உன்னால அவள் ஏறி இறங்காத கோயிலும் இல்லை; பிடிக்காத விரதங்களும் இல்லை' கேசவன் பெடலை வேகமாக மிதித்தான்.

'கேசவன் வீட்டுக்குப்போக முன்னம் என்னை ஒருக்கா அண்ணமார் கோயிலடியில் இறக்கிவிடு' 'எதுக்கு இப்ப அங்க' எரிச்சலாகத்தான் அவன் கேட்கிறான் என்பதை அவன் கேட்ட விதத்திலிருந்தே என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. 'அந்த ஆலமரத்துக்குக் கீழ் கொஞ்ச நேரம் இருந்திட்டு வீட்ட போறன்; சரியாய் மூன்று வருடத்தின் பின் மீண்டும் அந்த ஆலமரத்திற்குக் கீழ்...' நான் முடிப்பதற்கிடையில், 'உனக்கு இன்னும் பைத்தியம் தீரலபோல கிடக்கு கொம்மா உனக்காக வீட்டில காத்திருப்பா; வீட்ட போயிட்டு பிறகு எங்க வேணும் என்றாலும் போ' கேசவன் கண்டிப்பாகச் சொல்வதுபோல் சொன்னான். 'இல்ல நான் முதல்ல அந்த ஆலமரத்தடிக்குப் போகணும், ப்ளீஸ் சைக்கிளை கோயில் பக்கமாகவிடு'. இவர்களுக்கெல்லாம் அண்ணமார் கோயில் ஆலமரம் வெறும் மரமாக மட்டுமே தெரியும். ஆனால் எனக்கு அதுவே போதிமரம். நான் அடம்பிடிக்க... 'தாசன் நீ கோயிலடிக்குப் போனாலும் அந்த ஆலமரத்தைக் காணமாட்டாய்; போன மாசம் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்விழுந்து மரம் முறிஞ்சு பட்டுப்போயிற்று'. 'என்ன மரம் பட்டுப்போயிட்டா' நான் அதிர்ச்சியோடு அவனின் அனுமதியின்றியே சைக்கிள் பிறேக்கை அழுத்தினேன். சைக்கிள் நின்றதும் இறங்கி அண்ணமார் கோயில் பக்கமாய் பித்துப்பிடித்தவன் போல் ஓடினேன். கோயிலடியில் என் பிரியமான ஆலமரத்தைக் காணவில்லை கருகிப்போன ஒரு கட்டைமட்டுமே மிச்சமாக இருந்தது. எனது பத்து வயசில் இருந்து 25 வயசுவரை எனது நெருங்கிய நண்பனாக இருந்த ஆலமரம் இன்று இந்த நிலையிலா?... கடவுளே... என்னையும் மீறி அழுகை பீறிட்டது.



தன் கிளைகளை அகலப் பரப்பி, விழுதுகளை நிலத்தில் ஊன்றி ஒரு பெரிய பிரதேசத்துக்கே நிழல் வழங்கிக்கொண்டிருந்த மரமல்லவா அது, எனது 10வது வயதில் அம்மா 'பள்ளிக்குப்போ' எனத் துரத்திவிடும் போதெல்லாம் நான் ஓடிவந்து மரத்தடியில் உட்கார்ந்து கொள்வேன். பாடசாலை விடும் நேரத்தில் நல்லபிள்ளைபோல் வீடு செல்வேன். இப்படியே ஆரம்பித்த நம் நட்பு எனது 18வது வயதில் கவிதை எழுதவேணும் என்ற ஆசை என்னுள் எழ நான் தாள்களோடு வந்து தனிமையில் மரத்தடியில் மணிக்கணக்கில் குந்தியிருந்து நிறையக் கவிதைகள் எழுதினேன். எந்த ஏ.சி(A.C) யும் தராத சுகத்தை இந்த ஆலமர நிழல் தந்ததல்லவா அன்று.

ஒருமுறை, கோயிலை பெருப்பிப்பதற்காக இடைஞ்சலாக இருப்பதாக கூறிக்கொண்டு ஆலமரத்தின் கிளை ஒன்றை நிர்வாகசபை வெட்டிவிட முடிவெடுத்தபோது நான் எதிர்ந்தேன், 'அண்ணமார் கேட்டவரா கோயிலை பெருப்பிக்கச்சொல்லி; ஏன் இல்லாத ஒன்றுக்காக இருக்கிறதை அழிக்கிறியள்?'

'தமிபீ! நீர் நாஸ்த்தீகவாதம் பேசுகிறீர்; பக்கத்து ஊரில இருக்கிற கோயில்கள் எல்லாம் எப்படி வளர்ச்சியடைந்து இருக்கு; நம்மட கோயில்தான் இன்னும் கொட்டிலில் இருக்கு; நாங்க என்ன மரத்தை அடியோட தறிக்கவாபோறம்; ஒரு கிளையை மாத்திரம்தான் வெட்டப்போறம்' தலைவர் சொன்னார். ஆலமரத்துக்காக வாதாடிய என்னை நாஸ்திகவாதி என ஒதுக்கிவைத்துவிட்டு கிளையை வெட்டினார்கள். நான் உண்மையாகவே அழுதேன். இதைப்பார்த்த ஊர்ச்சனங்கள் எனக்கு 'மண்டைப்பழுது' என க்தையைக் கட்டிவிட்டார்கள். ஆலமரப்பாலால் பல்லுத்தீட்டினால் பல் நல்ல வெளிச்சமாகுமென்று பாட்டி சின்னவயசில எனக்குச் சொல்லி என்னை ஆலமரத்தடிக்கு துரத்தும்போதெல்லாம் நான் மரத்தில் கல்லால் குத்தி பால் எடுக்க மனம் வராமல் திரும்பி வீட்டுக்குப் போய் பாட்டியிடம் 'பல்லுத்தீட்டிட்டேன்' என பொய் சொல்வேன். இப்படியாக கண்மூடித்தனமான பற்று எனக்கு அந்த ஆலமரத்திடம்.

யாழ்ப்பாணத்தை மீட்பதாக சொல்லிக்கொண்டு இராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குதல்களின்போது ஷெல் அடிகளுக்குப் பயந்து இந்தக் கிராமத்துச் சனம் ஒதுங்கியது இந்த ஆலமர விழுதுகளுக்கு கீழ்தான். பல மனித உயிர்களைக் காப்பாற்றிய இந்த ஆலமரத்தால் எப்படி தன்னைக் காப்பாற்ற முடியாமல் போனது- கடவுளே... நான் கருகிப்போன அடிக்கட்டையை கட்டிப்பிடித்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதேன். 'டேய் என்னடா வீட்ட வராமல் இங்க அழுதுகொண்டு நிற்கிறாய்' அம்மாவின் குரல் கேட்டுத் திரும்பினேன். அம்மா கண்ணீரோடு நின்றுகொண்டிருந்தார். அருகில் கேசவன் நின்றான். கேசவன்தான் அம்மாவை அழைத்துவந்திருக்க வேணும். இவனுக்கு ஏன் இந்த தேவையில்லாத வேலை?

'அம்மா! நீ வீட்ட போண! நான் கொஞ்ச நேரத்தால வாரன்' கண்களைத் துடைத்துக்கொண்டு சொன்னேன். 'நீ வந்தால்தான் நானும் போவன்' அம்மா அடம்பிடித்தாள். அம்மா வழமையாகவே பயங்கரப் பிடிவாதக்காரி. அம்மாவோடு மல்லுக்கட்டுவதில் எனக்கு இஸ்டமில்லாமையால் அம்மாவுக்குப் பின்னால் நடந்தேன். என் நினைவெல்லாம் அந்த ஆலமரத்தை சுற்றிச் சுற்றியே வந்தது.

'மனிதர்களை விட இந்த மரங்கள் எவ்வளவு உயர்வானது என்பது இவர்களுக்கு விளங்காது. இருக்கும்போது தின்னக்காய்... ஒதுங்க நிழல்... இறந்துபோனால் எரிக்க விறகு... இப்படிப்பல... இந்த மனிதன் உயிரோடு இருக்கும்போதே மற்றவனை சுரண்டுகிறான். இறந்தும் பலனில்லை. மரங்களோடு மனிதர்களை ஒப்பிடமுடியுமா? இருந்தும் கெடுக்கும் செத்தும் கெடுக்கும் மனிதரை விட, இருந்தும் கொடுக்கும் செத்தும் கொடுக்கும் மரங்கள் அல்லவா உயர்திணை. மனிதர்களோடு பேசுவதை' விட மரங்களோடு பேசுவது எவ்வளவு சுகமானது தெரியுமா? மனிதர்களைப்போல மரங்கள் பொய்பேசுவதில்லை, கோள் சொல்வதில்லை, எப்போதும் உண்மையேபேசும்.

எனக்கு இன்னுமொரு மரம் நண்பனாக கிடைக்கலாம்; ஆனால் இறந்துபோன இந்த ஆலமர நண்பனை என்னால் மறக்கமுடியாது.

நான் மௌனமாக அம்மாவின் பின்னே நடக்கிறேன். என் சிந்தனை எல்லாம் அந்த ஆலமரத்தையே சுற்றி சுற்றி வருகிறது.

வீ.எஸ்.குமார் - லண்டன்

# தொலைக்காட்சியில் ஒலித்த சந்திரிகாவின் பே(ர)ருரை

கடந்த திங்களன்று தொலைக்காட்சியில் தோன்றிய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை அரசு ஏற்கவில்லை என்று அறிவித்துள்ளார். பொதுஜன



ஐக்கிய முன்னணி அரசாங்கம், சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் இப்போதைக்கு நடத்தப் போவதில்லை என்பதை இது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிசெய்துள்ளது. விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் யுத்தத்தை நிறுத்தி, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முன்வருவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் நோர்வே அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே, நோர்வே எரிக் சோல் ஹெய்மைத் தனது விசேட தூதராக நியமித்தது. அவரும் தனது பாராளுமன்ற ஆசனத்தைக் கைவிட்டு முழுநேரமாக இந்த முயற்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திச் செயற்பட்டு வருகின்றார். நோர்வேயிலிருந்து இலண்டன், கொழும்பு, வன்னி, புதுடில்லி என்று அவர் ஓடாத ஓட்டமில்லை. சந்திக்காத முக்கியஸ்தர்கள் இல்லை. இனப்பிரச்சினைக்கான யுத்தத்தின் நிலைமைகளையும், அதனை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தவும், போரில் ஈடுபட்டுள்ளவர்களை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்கான நிலைமைகளையும் நன்கு நாடி பிடித்து அறிந்து, அதற்கேற்ப தனது பகீரத முயற்சிகளில் காய்களை நகர்த்தி வந்தார்.

அதன் முக்கிய திருப்புமுனையாகவே, கடந்த மாதம் 24ம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று நள்ளிரவு முதல், ஒருதலைப் பட்சமாக விடுதலைப் புலிகள் ஒரு மாதத்திற்கான யுத்த நிறுத்தத்தை அறிவித்தார்கள். ஆயினும் அச்சமயத்தில் ஜனாதிபதி சந்திரிகா ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்ததனால், அமைச்சர்களின் ஊடாகவும், ஜனாதிபதி செயலகத்தின் ஊடான அறிக்கையொன்றின் வழியாகவும், விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த நடவடிக்கையை அரசாங்கம் ஏற்கவில்லை என்பது அறிவிக்கப்பட்டிருந்தது. அதேவேளை, மறுபக்கத்தில் நாட்டின் பிரதமராகிய ரட்ணசிறி விக்கிரமநாயக்கா யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது. யுத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். விடுதலைப் புலிகளை அழித்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். யுத்தம் நிரந்தரமாக நிறுத்தப்படுவதற்கான வழியேற்படும் என்று முழங்கிக் கொண்டிருந்தார்.

இருப்பினும், வெளிநாடுகளின் அழுத்தங்களும், சமாதானத்துக்கும், பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கும் ஆதரவான உள்ளூர் சக்திகளும், அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்களும் விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை ஏற்று போரை நிறுத்தி, சமாதானப் பேச்சுக்களில் அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று குரல் கொடுத்தன. குரல் கொடுத்து வருகின்றன. இதன் மூலம் அச்சக்திகள் சமாதான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வந்தன. இன்னும் அந்த அழுத்தங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு சுமார் ஐந்து வாரங்களின் பின்னர் கடந்த மாத இறுதியில் நாடு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கும் உலகுக்கும் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துவார் என்ற எதிர்பார்ப்பு பரவலாகக் காணப்பட்டது. நாடு திரும்பியதுமே சந்திரிகா அமைச்சரவையைக் கூட்டி விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு, அதன் செயற்பாடு ஆகியவை குறித்து ஆராய்ந்து தெளிவான, அதேவேளை யுத்த நிறுதத்திற்குச் சார்பானதோர் அறிவித்தலை வெளியிடுவார் என்று பலரும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இராணுவ முனைப்புச் செயற்பாட்டை விரும்பாமல், சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்று சிறீலங்கா அரசுக்கு வெளிநாடுகள் பலவும் கொடுத்துவந்த அழுத்தம் காரணமாகவும், இந்த எதிர்பார்ப்பு பல முனைகளிலும் அதிகமாகவே காணப்பட்டது.

ஐரோப்பிய விஜயத்தின் போது, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி வெறும் கையோடு நாடு திரும்பியிருந்தார். உதவி வழங்கும் நாடுகள் இலங்கையின் யுத்தச் செயற்பாடுகள் பற்றியும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும் அதிகமாக வலியுறுத்தியதுடன், யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது குறித்து அதிகமாகப் பிரஸ்தாபித்தனவே தவிர, இலங்கைக்கு உதவி வழங்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. கஜானா காலியாகிய நிலையில் நிதி உதவிகளை ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்த சந்திரிகா தலைமையிலான அரசாங்கக் குழுவிற்கு இது பெரும் ஏமாற்றமாகவே அமைந்திருந்தது. இந்த நிலையில் நாடு திரும்பியிருந்த சந்திரிகா, நாட்டின் அரசியல் வட்டாரங்களினதும், சமாதானத்திற்காக ஏங்கிக் கொண்டிருப்பவர்களினதும் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக மௌனமாகவே இருந்தார். அரசாங்கம் யுத்த நிறுத்தத்திற்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என்றும் யுத்த நிறத்தம் தேவையில்லை போரை முன்னெடுத்து விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றும் ஏட்டிக்குப் போட்டியாக நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், புறநீசல்கள் போன்ற அறிக்கைகள், அறிவித்தல்கள், வேண்டுகோள்கள் ஆகியவற்றினால் ஏற்பட்டிருந்த அமளி துமளிகளாலும் சந்திரிகாவின் மௌனத்தைக் கலைக்க முடியாமல் போய்விட்டது. இருப்பினும் கடந்த திங்களன்று தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்பில் திடீரெனத் தோன்றிய சந்திரிகா, போர் நிறுத்தம் செய்யப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்தார். மலர்ந்துள்ள புதிய ஆண்டில் நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படும் என்று எதிர்பார்த்து நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்கு சந்திரிகாவின் இந்த அறிவிப்பு பெரும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது.

அமைதியான புறநிலையையும் நல்லெண்ண சூழ்நிலையையும் ஏற்படுத்தும் நோக்குடனேயே ஒருதலைப் பட்சமாகப் போர்நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பை உதாசீனம் செய்து, விடுதலைப் புலிகளை அடக்கி ஆள ஆவல் கொண்டுதான் சிங்கள அரசு போரைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்று விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளார்கள். பேச்சுவார்த்தைகளுக்கான இயல்பான ஒரு சூழ்நிலையை உருவாக்கி, யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. அதுவே அவர்களின் கோரிக்கை. நிபந்தனைகளின்றி பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்பது அவர்களின் திட்டவட்டமான அறிவிப்பு. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கமும் தயாராக இருக்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் விடுதலைப் புலிகள் முதலில் பேச்சுக்களில் கலந்துகொண்டு பேச்சுக்களை நடத்தி, அதன் போது ஏற்படுகின்ற உடன்பாடுகள் முன்னேற்றங்களுக்கு இசைவாக யுத்த நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று அராசாங்கம் கூறுகின்றது.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்சினைகள் இருக்கின்றன. இனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்ற யுத்தமானது நாட்டைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கின்றது. பிரச்சினை அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும். அழிவிலிருந்து நாட்டைக்காப்பதற்காக யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் நியாயமான முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் சிறீலங்கா அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதேபோல, சர்வதேச சமூகமும், உலக நாடுகளும் சந்தேகத்திற்கு அப்பால் இவற்றைப் புரிந்து கொண்டிருக்கின்றன. அதற்காக அவைகள் குரல் கொடுக்கவும் தொடங்கியிருக்கின்றன. ஆனாலும், நாலுபேர் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் கொடுக்க வேண்டியவற்றை தமிழ் மக்களுக்கு அரசு கொடுக்குமா என்பதுதான் சந்தேகமாக இருக்கின்றது. அவ்வாறு கொடுக்க வேண்டியவற்றைக் கொடுப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை. அதற்குத் தயாராக இல்லை என்பதையே இப்போதைய சமாதான முயற்சிகளில் அரசாங்கத் தரப்பில் காணப்படுகின்ற தேக்க நிலைமை தெளிவாகக் காட்டுகின்றது. சமாதான முயற்சிகளில் பலரும் தீவிரமாக நாட்டம் கொண்டுள்ள வேளையில் அந்தச் சூழ்நிலைக்குக் கொடுக்க வேண்டிய பொதுவான மரியாதை தரவேண்டிய நாகரிகப் பண்பாட்டை வெளிப்படுத்துகின்ற சமிக்ஞையைக் கூட சிறீலங்கா அரசு வெளிப்படுத்தாமல் இருக்கின்றது. இந்தத் தன்னிச்சையான போக்கு சுயமாகச் செயற்படும் புத்தியும் இல்லை.

நாலுபேரின் சொல் வழி கேட்கின்ற புத்தியும் அரசாங்கத்திற்கும், அதன் ஏகபோக அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் இல்லை. இதையே இப்போதைய அரசியல் சூழ்நிலைகள் காட்டுகின்றன. அரசாங்கத்தின் இந்த மந்தபுத்தி நிலைமை நாட்டை எவ்வாறான அழிவு நிலையில் கொண்டு விடப் போகின்றதென்றும் தெரியவில்லை.

> சமாதான முயற்சிகளில் பலரும் தீவிரமாக நாட்டம் கொண்டுள்ள வேளையில் அந்தச் சூழ்நிலைக்குக் கொடுக்க வேண்டிய பொதுவான மரியாதை தரவேண்டிய நாகரிகப் பண்பாட்டை வெளிப்படுத்துகின்ற சமிக்ஞையைக் கூட சிறீலங்கா அரசு வெளிப்படுத்தாமல் இருக்கின்றது.

**வவுனியாவில் இருந்து தீபன்**

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
**தமிழ் அச்சகம்**
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 - 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris _ Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# தமிழர் திருநாளில் உதயமான ஒரு இனிய வரலாறு.
# இது நமது என்று சொல்ல இப்போது ஒரு தொலைக்காட்சியும்.

ஊர்ப் புதினம் தவறாமல் சுமந்து வரும்
உண்மைகளைச் சிறைமீட்டு கொண்டு வரும்

அகிலத்துச் செய்திகளை விரைந்து தரும்
அறிவியலும், இலக்கியமும் கற்றுத் தரும்

சிந்தனையைத் தூண்டுகின்ற வாதம் தரும்
சினிமாவைத் தரம் பிரித்து விருந்து தரும்

நல்ல தமிழ் குழந்தைகளுக்கு சொல்லித் தரும்
நாவூறச் சமைக்கும் விதம் காட்டித் தரும்

விதம்விதமாய் அனைவருக்கும் நிகழ்ச்சி தரும்
வீட்டுக்கு இது வேண்டுமென்ற எண்ணம் தரும்



**FRANCE**
LUNE INTERNATIONAL
5, Rue Perdonnet,
75010 Paris
Tel. & Fax: 01 53 26 76 70

Radio Asia
5-7 RUE EMILE ZOLA
93120 LA COURNEUVE
TEL: 33 1 48393429
FAX: 33 1 48393146

**GERMANY**
LEEMA
மக்கள் களஞ்சியம்
MARIENKIRCH PLATZ 05
41460 NEUSS
Tel. 02 131 54 6311
Fax: 02 131 54 6312

**SWITZERLAND**
NEW MILLENNIUM COMPUTER & ELECTRONIC
Tellstr. 31
8004 ZURICH
Tel. 00 41 1 240 25 08 / 00 41 79 28 77 369
Fax: 00 41 1 240 30 85

**NORWAY**
THAINILAM KALAIYAGAM
POST BOKS 6678
RODELOKKA
0502 OSLO
Tel. 99003154 (Kumar)

**DENMARK**
Mrs. SHANTHY
GRUNDTVIG VEG 681 TH
7400 HERNING
Tel. & Fax: 097 21 46 85
Mobile: 022 45 72 19

**HOLLAND**
SUNRISE IMPORT & EXPORT
ZOUTMANSTRAAT 23
2518 GL DEN HAAG
Tel. 062 915 1259 (NADES)
Fax: 070 35 10 19

**ITALY**
PEOPLE SHOP
KURUNATHAN GENGATHARAN
VIA DABTE 218
90141 PALERMO
Tel. & Fax: 00 39 091 6824056

**UK**
IBC TAMIL
P.O BOX 1505
LONDON SW8 2ZH
U.K.
Free phone: 08000853826
Tel: 02077934024
Fax: 02077934023

தமிழ் ஒளி

தமிழ் தொலைக்காட்சி இணையம்

www.gloddesign.com

LUNE INTERNATIONAL 5, Rue Perdonnet, 75010 Paris FRANCE Tel. & Fax: 01 53 26 76 70

# உங்கள் இல்லங்களில் தமிழ் ஒளி ஏற்றிவிட்டீர்களா?

தமிழ் ஒளி தரவிருக்கும் நிகழ்ச்சிகளில் சில துளிகள்

**கே.பாலச்சந்தரின் சின்னத்திரை**
(ஐந்து நாள் கதைத்தொடர்) திங்கள் முதல் வெள்ளிவரை இரவு 8.30

**பாலு மகேந்திராவின் கதை நேரம்** பிரதி செவ்வாய், வியாழன் இரவு 9.00

**முக்தா சீனிவாசனின் வித்யா** திங்கள் முதல் வெள்ளிவரை இரவு 6.30

**கே.பாலச்சந்தரின்** மின்பிம்பங்கள் வழங்கும்

**ரமணி VS ரமணி** (பாகம் 2) சனி, ஞாயிறு இரவு 7.30

**ஊஞ்சல்** திங்கள், புதன், வெள்ளி இரவு 7.30

**மர்மதேசம்** (பாகம் 3), **சொர்ணரேகை**
செவ்வாய், வியாழன் இரவு 7.30

அப்பு குப்பு சிறுவர் தொடர்

உனக்கா கல்யாணம்?

இவ்வாரத் தமிழகம்
தமிழக அரசியல் நிகழ்வுகளின் தொகுப்பு

குயில் தோப்பு
பிரபல கவிஞர்களின் தலைமையில் வாரந்தோறும் கவியரங்கம்

தமிழ் ஒளி

EUTELSAT HOTBIRD3 position: 13° East
Polarization Horizontal Frequency 12245 Mhz

TAMIL TELEVISION NETWORK

தமிழ் தொலைக்காட்சி இணையம்

LUNE INTERNATIONAL 5, Rue Perdonnet, 75010 Paris FRANCE Tel. & Fax: 01 53 26 76 70

# சமாதானம் பேசுபவர்களுக்கு எதிராக சிறீலங்கா இராணுவ நடவடிக்கை

(மட்டக்களப்பிலிருந்து எஸ். ஜெயானந்தமூர்த்தி)

சிறீலங்கா அரசு மாதம் தோறும் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, நீடிக்கும் அவசரகாலச் சட்டம் மற்றும் நடைமுறையிலுள்ள பயங்கரவாதச் சட்டம் என்பனவற்றின் மூலம் குறிப்பாக தமிழ் மக்களின் உரிமைகளை குழிதோண்டிப் புதைத்து வருகின்றது. சிறீலங்காவில் ஜே.வி.பி.யின் கிளர்ச்சியைத் தடுக்கும் வகையில் 1972 தொடக்கம் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்து வருகின்றபோதிலும், இச்சட்டம் காலத்திற்குக் காலம் நீக்கப்பட்டும் பொதுத் தேர்தலின்போது இல்லாமலும் இருந்து வருகின்றது. ஆனால் தற்போது வடக்குக் கிழக்குப் பிரச்சினையை மையமாக வைத்து நாட்டின் முழுப்பகுதியிலும் அமுலில் இருந்து வருகின்றபோதிலும் இச்சட்டத்தின் கொடூரம் வடக்குக் கிழக்கிலே அதிகம் உணரப்படுகின்றது. இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலும் என்றுமில்லாதவாறு அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நடைபெற்றது.

ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுக்க முழுக்க தமிழ் மக்களுக்காகவே 1979ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரபட்டது. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தைத் தடுக்கும் வகையில் இச்சட்டம் சிறீலங்கா அரசினால் திட்டமிட்டு கடுமையான விதத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் நாட்டின் பிரிவினைக்கு ஆதரவாக வடக்குக் கிழக்கு மாத்திரமின்றி நாட்டில் எப்பகுதியில் சம்பவங்கள் இடம் பெற்றாலும் அதனுடன் தொடர்பாகக் கைது செய்யப்படுபவர்கள் இச்சட்டத்தின் கீழேயே வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றனர். தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உரிமைகளை நிலைநிறுத்துவதற்குமாக நடத்தும் சாத்வீகப் போராட்டங்களைக் கூட இச்சட்டத்தின் மூலம் சிறீலங்கா அரசும் அதன் படைகளும் தடுத்து வருகின்றன. கடந்த எழுபதுகளுக்கு முற்பட்ட காலத்தில் தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்களை நசுக்கப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவே, தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

> இன்று நாட்டில் உள்ள அதிகமானோர் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் புலிகளுடன் பேசியே தீரவேண்டுமென்று கூறிவருகின்றனர். பல உலக நாடுகளும் இக்கருத்தை வலியுறுத்தி வருகின்றன. அவ்வாறானால் இவர்களும் புலிகளின் ஆதரவாளர்களா?

இன்று ஒருபுறம் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களென பல அமைப்புகளும் சாத்வீகப் போராட்டங்களையும் நடாத்தி வருகின்றன. ஆனால் இப் போராட்டங்கள் வடக்குக் கிழக்கில் நடைபெறும்போது அதற்குத் தடைவிதிப்பதும், அவ்வாறு நடாத்துபவர்களுக்கு எதிராகப் படையினர் நடவடிக்கை எடுப்பதும் தொடர்ந்து வருகின்றது. அண்மையில் மட்டக்களப்பில் படையினர் ஒலிபெருக்கி மூலமாக ஒரு அறிவிப்புச் செய்தனர். அதில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போர் நிறுத்தத்தை அரசு ஏற்றுக்கொண்டு போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென அழுத்தம் கொடுக்கும் வகையில் எவரும் ஊர்வலங்களையோ கூட்டங்களையோ நடாத்தக்கூடாது. அவ்வாறு நடாத்துபவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள். அத்துடன் இக்கூட்டங்களையும் ஊர்வலங்களையும் புலிகளின் ஆதரவாளர்களே ஏற்பாடு செய்து வருகின்றனர் என படையினர் எச்சரிக்கைத் தொனியில் அறிவிப்புச் செய்துள்ளனர். குற்றவாளிகளாகக் கருதப்படுவார்களென கூறினால் சாத்வீகப் போராட்டம் நடாத்துபவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என்பதே அர்த்தம். அத்துடன் குற்றவாளிகள் என்றால் அவர்களுக்குத் தண்டனையும் வழங்க முடியும்.

அவ்வாறானால் சமாதானம் வேண்டுமென எந்தவொரு மனிதனும் கோரிக்கை விடுவது பாரதூரமான குற்றமாகவே படையினர் கருதுகின்றனர். ஜனநாயக நாட்டில் தமது கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் எந்தவொரு தனிமனிதனுக்கும் உள்ளது. எவருக்கும் இடைஞ்சல் ஏற்படாதவாறு ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடாத்தி அதன் மூலம் இக்கருத்துக்களை மக்களுக்குச் சென்றடையச் செய்ய முடியும். ஆனால் இதற்கு மாறாக மட்டக்களப்பில் படையினர் மக்களை தமது அதிகாரத்தின் மூலம் அடக்கி ஒடுக்கவே முயலுகின்றனர். அத்துடன் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென மக்கள் கோருவதையோ அவ்வாறான ஒரு போர் நிறுத்தத்தையோ படையினர் விரும்பவில்லை என்பதையும் இந்த அறிவித்தல் சுட்டிக்காட்டுகின்றது. இதேபோல் தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சமூகம் ஏற்பாடு செய்து நடாத்தி வரும் எழுச்சி நிகழ்வுகளை, நாளைமறுதினம் 17ம் திகதி நடைபெறவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வைத் தடை செய்வதில் சிறீலங்காப் படையினரும், பொலிசாரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழகச் சமூகம், தமிழர்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமையே என வலியுறுத்தி பல்கலைக்கழக் வளாகத்தினுள் இவ் எழுச்சிப் போராட்டத்தை நடாத்தி வருகின்றது. ஆனால் இது படையினருக்கு எதிரான ஒரு போராட்டமோ அல்லது அரசுக்கு எதிரான போராட்டமோ கிடையாது. இருந்தும் படையினர் இப்போராட்டங்களைத் தடுத்து வருகின்றனர்.

இப்போராட்டத்தின் மூலம் தூங்கிக்கிடக்கும் மக்களைத் தட்டியெழுப்பவும், உண்மையான கருத்துக்கள் மக்களைச் சென்றடையவுமே இவர்கள் இப்போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர். ஆனர்ல் இது புலிகளுக்கு ஆதரவாகச் செய்யப்படும் போராட்டமென்றும் இதன் பின்னணியில் புலிகள் உள்ளனரெனவும் வாய்கூசாமல் படையினர் கூறிவருகின்றனர். இன்று நாட்டில் உள்ள அதிகமானோர் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் புலிகளுடன் பேசியே தீர வேண்டுமென்று கூறிவருகின்றனர். பல உலக நாடுகளும் இக்கருத்தை வலியுறுத்தி வருகின்றன. அவ்வாறானால் இவர்களும் புலிகளின் ஆதரவாளர்களா? அல்லது இவர்களுக்குப் பின்னணியிலும் புலிகள் உள்ளனரா? என்ற கேள்விகளுக்கு வடக்குக் கிழக்கிலுள்ள படையினர் பதில் கூறவேண்டும். இதற்கு அவர்கள் என்ன பதில் கூறப்போகின்றனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கடந்த சனிக்கிழமை சில கிராம சேவையாளர்களை அழைத்து நடாத்திய கூட்டத்தில், பல்கலைக்கழக மாணவர்களினால் நடாத்தப்படும் இப் போராட்டத்தில் பொதுமக்கள் எவரும் ஈடுபடாதவாறு தடுக்க வேண்டும் எனக்கூறியுள்ளார். அத்துடன் இன்னுமொரு விடயத்தையும் அந்த அதிகாரி தனது அதிகார மிடுக்குடன் கூறியுள்ளார். இந் நிகழ்வை நடக்க நாங்கள் விடமாட்டோம். அவ்வாறு அதையும் மீறி நடக்குமானால் குண்டாந்தடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்வதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றுள்ளார். இது மக்களை மிரட்டும் ஒரு செயல் என்பதுடன் ஜனநாயக உரிமையையும் மீறும் ஒரு கருத்தாகவும் உள்ளது.

இன்று திங்கள் காலை தொடக்கம் பல்கலைக்கழகத்திற்கு வெளியே சிறீலங்காப் படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டு கடும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக மாணவர்களைத் தவிர வேறு எவரையும் உள்ளே செல்ல இவர்கள் அனுமதி வழங்கவில்லை. இதன் மூலம் அமைதியாக எழுச்சி நிகழ்வை நடாத்த இருக்கும் பல்கலைக்கழகச் சமூகத்தை, வேண்டுமென வம்புக்கு இழுப்பது போலவும், தாமாகவே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தவுமே படையினரும் பொலிசாரும் முயலுகின்றனர். யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற போதும் இவ்வாறே பொலிசார் வேண்டுமென பிரச்சினையை உருவாக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் அதில் அநியாயமாக்ப் பதினொரு பேர் பலியாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது தமிழர்கள் அறிந்ததே. தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கவும் அவர்களின் கருத்துக்களை வெளியிட முடியாதவாறு தடுக்கவும் படையினருக்கு நல்ல அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் கொடுக்கும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பனவற்றை சிறீலங்கா அரசு உருவாக்கி வைத்துள்ளது.

Palm Beach
RESTAURANT
10%OFF ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990



இசைமுரசு 2001
21ம் நூற்றாண்டின் முதலாவது இசைமுரசு
காலம்: 13.05.2001
தொடர்புகளுக்கு:
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
EELAMURASU S.A.R.L
22 Rue Perdonnet, 75010 Paris
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

ஈழமுரசு வருடாந்தம் நடாத்தும் இசைமுரசு சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி கடந்த வருடம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் நடைபெறவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.




கில்லாடி மாப்பிள்ளைதான் இவர். மலேசியாவைச் சேர்ந்த அப்துல்ஹமீது என்ற நபர், ஒரே இடத்தில் வேலை செய்துவந்த இரு பெண்களை ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் காதலித்து வந்துள்ளார். ஒருநாள் இரு பெண்களுக்கும் உண்மை தெரியவந்தது.

ஆனாலும் விடயம் விபரீதமாகவில்லை. இரு பெண்களும் அவரை திருமணம் செய்ய சம்மதித்தனர். கடந்த வாரம் நாலாயிரம் உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் கோலாகலமாக திருமணம் நடந்துமுடிந்துள்ளது. தற்போது இருவருடனும் இரு வீடுகளிலும் மாறி மாறி வாழ்ந்து வருகிறார். மலேசியாவில் முஸ்லீம் மதத்தவர் நான்கு பெண்களை திருமணம் செய்வதற்கு அனுமதி உண்டு.

# பலதும் பத்தும்

## சந்திரனை சுட்டவர்கள் கைது

கடந்த செவ்வாயன்று சந்திர கிரணம் இடம்பெற்றதை எல்லோரும் அறிந்திருப்பீர்கள். அன்று எல்லோரும் இந்த சந்திர கிரணத்தை பார்த்துக் கொண்டிருந்த போதுதான்; துருக்கியின் தென்கிழக்கு பகுதி மாநகர் ஒன்றில் பலத்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த பொலிசார் அதிர்ச்சியடைந்தனர். எட்டுப்பேர் சந்திரனை நோக்கி சுட்டுக் கொண்டிருந்தார்கள். உடனடியாக அவர்களின் துப்பாக்கிகளை பறிமுதல் செய்ததுடன் எட்டுப் பேரையும் கைதுசெய்தனர். சந்திர கிரணத்தின்போது சந்திரனை நோக்கி சுடுவது தங்களது பாரம்பரியம் என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.



பாம்பை கண்டால் படையும் நடுங்கும். ஆனால் இவரைக் கண்டால் பாம்புகளுக்குத் தான் நடுக்கம். சிங்கப்பூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பாம்பொன்றை மூக்கின் வழியாக உள்ளே அனுப்பி வாய் வழியாக வெளியே எடுக்கிறார் சீனாவைச் சேர்ந்த கோபூ லேபா என்ற இந்த நபர்.

## கிறிஸ்மஸ் பரிசாக எதைத்தான் கொடுப்பதென்று இல்லையா?

கடந்த வருட இறுதியில் ரூமேனியாவின் படைவீரர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அதுவும் அவர் நத்தார் பரிசுகளை தயார் செய்து கொண்டிருந்தபோது பிடிபட்டார் என்றால் பாருங்களேன்! தனது நண்பர்களுக்கு நத்தார் பரிசுகளை கொடுக்கவேண்டுமே என்ற ஆதங்கத்தில் அவர் ஒரு துணிச்சலான காரியத்தில் ஈடுபட்டார். புதுமையாக நண்பர்களுக்கு இம்முறை கைக்குண்டுகளை வழங்கினால் என்ன என அவர் யோசித்தார். இதற்காகப் போய் பணம் செலவழிப்பானேன். முகாமில் தான் ஏராளமாக உள்ளதே என நினைத்தவர், களஞ்சிய அறையில் இருந்து 25 கைக்குண்டுகளை எடுத்துக் கொண்டார். அது மட்டுமா? இரண்டு டாங்கி எதிர்ப்பு எறிகணைகளையும் அவர் நண்பர்களுக்கான விசேட பரிசாக எடுத்துக் கொண்டார். ஆனால் அவரது கெட்டகாலமோ நண்பர்களுக்கு நல்லகாலமோ...! பொலிசாரிடம் பிடிபட்டு விட்டார். கைது செய்யப்பட்ட வேளையிலும் அவரது சட்டைப்பையினுள் ஒரு கைக்குண்டு காணப்பட்டதாம். இப்போது இராணுவ விசாரணையை எதிர்நோக்கி இருக்கும் அவர், 15 வருடம் வரையான தண்டனையை எதிர்கொள்வார் என நம்பப்படுகிறது.

# ஹீரோ ... சப்புமல்குமார!?

'யாகாவராயினும் நா காக்க, காவாக்கால் சோகாப்பர் சொல் இழுக்கு பட்டு.' எல்லாருக்கும் சனியன் எங்கெங்கையோ இருக்குதெண்டு சொல்லுறவை. ஆனால் விக்கிரமநாயக்காவுக்கு நாக்கிலை தான் இருக்குதெண்டா நாமென்ன செய்ய முடியும். 'தாய் எட்டடி பாய்ஞ்சால் குட்டி பதினாறடி பாயும்' எண்டொரு பழமொழி சொல்லுறவை. இனிமேல் அமைச்சர் எட்டடியெண்டால் பிரதமர் பதினாறடியெண்டு புதிசா ஒரு பழமொழி சொல்லலாம். முன்னம் அம்மான் ரத்வத்தை தான், புலியளை அழிப்பனெண்டு அடிக்கடி காலக்கெடுக்களை விதிச்சவர். யாப்பட்டுணாவைப் பிடிச்சு சந்திரிகாவிட்டை பேழையை ஒப்படைச்சு சப்புமல்குமார எண்ட பெயரெடுத்ததோட நிக்காமல், கிளிநொச்சியிலை நிக்கிற படையளோடை கை குடுக்கிறதெண்டு, ஜெயசிக்குறுய் எண்டொரு நடைபயணத்தை தொடங்கி, இந்தா இண்டைக்கு... நாளைக்கு... எண்டு நொந்து நூலறுந்து சேடம் இழுத்திழுத்து மாங்குளம் வரைக்கும் கொண்டு வந்தவர். கொழும்புப் பத்திரிகையளும் ரத்வத்தையின்ரை இந்த வீரப்பிரதாபங்களை வேதவாக்கா பெரிசு பெரிசா




எல்லாம் வெற்றி முழக்கத்தோட வெளியிட்டவை. எல்லாம் கொஞ்சநாள்த்தான். அமைதியா இருந்த புலியள் ஒருநாள் எழும்பியடிச்ச அலையிலை சிக்குண்டு, சிதறுண்டு, கால் குண்டியிலைபட வவுனியாவுக்கு அப்பாலை போய் நிண்டுதான் எப்பன் மூச்சுவிட்டு திரும்பிப்பார்த்தவை. இந்த அடியோட சிங்கள இனவாதியளின்ரை ஹீரோ ரத்வத்தையார் 'ஷீரோ' ரத்வத்தையா போயிட்டார். ஆனாலும் சொறிஞ்ச கை சும்மாவே இருக்கும்? அது இன்னும் சொறிஞ்சுகொண்டுதான் இருக்குது.

ஆனால், இப்ப விக்கிரமநாயக்கா எண்டொருத்தர் ரத்வத்தையைவிட வேகமா முழங்கிக்கொண்டிருக்கிறார். சிங்கள இனவாதியளுக்கு இவர்தான் இப்ப தீனிபோடுற ஹீரோ சப்புமல்குமார. புலியள் இன்னும் எத்தனை வீதம் மிஞ்சியிருக்கினம் எண்டுதான் ரத்வத்தையார் கணக்குப் போட்டவர். ஆனால் எத்தனை புலியள் இன்னும் இருக்கினம் எண்டதை எண்ணிக் கணக்கு குடுத்து சாதனை படைச்சிதெண்டா அது விக்கிரமநாயக்காவைத்தான் சேரும். இப்ப ஆனையிறவைப் பிடிக்கிறதுக்கும் நாள், தேதி குறிச்சாச்செண்டு சொல்லியிருக்கிறார். சமாதானம் வேண்டாம் சண்டைதான் பிடிப்போம் எண்டு அடம்பிடிக்கிற இவற்றை வாய்ச்சவடால்கள் என்னாகுமெண்டதும் இவயளின்ரை கையிலதான் இருக்குது. ஏனெண்டால் புலியள் சமாதானம் பேசுவம் எண்டுசொல்லி ஒரு மாதம் போர் நிறுத்தத்திலை இருக்கினம். அந்த போர்நிறுத்தத்தை பயன்படுத்தி உவையள் ஒரு நிலைப்பாட்டிற்கு வராட்டி, அடுத்த ஓட்டத்திற்கு உவையள் தயாராகவேணும் எண்டதுதான் இப்ப கன ஆய்வாளர்மாரின்ரை கருத்தா இருக்குது. வன்னியில நிண்டவைக்கெண்டாலும் ஓடுறதுக்கொரு பாதை இருந்திச்சு. ஆனா இதுக்குள்ளை சிக்குப்பட்டவைக்கு அதுகும் இல்லையெண்டதை ஏற்கனவே இவையளே அனுபவமூலம் தெரிஞ்சும் வைச்சிருக்கினம். ஆனா அதைக் கேட்கிற நிலைமையிலையோ, புரிஞ்சுகொள்ளுற நிலைமையிலையோ நாயக்காவோ, ரத்வத்தையோ, பிக்குகளோ, இனவாதியளோ இண்டைக்கில்லை. எல்லாருக்கும் இப்ப ஆனையிறவுக் கனவுதான்.

அந்தக் கனவை அடையிறதுக்கான ஏற்பாடுகளைத்தான் இப்ப வலு மும்முரமாய் செய்துகொண்டிருக்கினம். புலியளின்ரை போர் நிறுத்தம் முடியிறதுக்குள்ளை அந்தக்கனவை அடைஞ்சிடவேணும். அதுக்குப்பிறகு அது 'நிரந்தரமாய் கனவாயே போயிடும்' எண்டதும் அவையளுக்கு நல்ல தெளிவாத் தெரியும். அதாலை கொஞ்சம் உசாராத்தான் நிக்கினம். இதுக்கு அம்மையாரும் ஆசீர்வாதம் வழங்கி, சமாதானம் பேசுங்கோ எண்டு சொல்லுற நாடுகளுக்கும், சாக்குப் போக்குகளைச் சொல்லி மெல்ல மெல்ல இழுத்தடிச்சுக்கொண்டு வருகிறா. யாப்பட்டுணாவைப்பிடிச்சு அம்மான் பெயரெடுத்த மாதிரி, தானும் ஆனையிறவைப்பிடிச்சு பட்டோலை கொடுக்கவேணும் எண்டு நாயக்கா வலு பிடிவாதமாத்தான் நிக்கிறார்.

ஆனால் என்ன செய்ய, சாது மிரண்டால் காடு கொள்ளாதே...!

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின்...

வாயிலாக நன்கு அறிவார்கள். சிங்கள அரச ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக் காலம்தான் கொடிதிலும் கொடிது என்பது எமது மக்களுக்கு நன்கு தெரியும். இக் காலத்தில் எமது மக்கள் தாங்க முடியாத துன்பத்தை அனுபவித்தார்கள். சந்திரிகாவின் ஆட்சிக் காலம் இன்னும் ஆறு ஆண்டுகளுக்கு தொடரப்போகிறது என்பதும் எமது மக்களுக்குத் தெரியும். அதாவது, இன்னும் ஆறு ஆண்டுகளுக்கு போரும், சாவும், அழிவும் தொடரப்போகிறது என்பதையும் எமது மக்கள் அறிவார்கள்.

உண்மையில் இந்த உரை தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு விடுக்கப்படவில்லை. யாழ்ப்பாண மக்கள் புத்திசாலிகள். தந்திரமும் சாணக்கியத் திறமையும் படைத்தவர்கள். சந்திரிகாவின் உரையில் பொதிந்துகிடக்கும் அரசியல் நயவஞ்சகத்தன்மையை அவர்கள் இனம்கண்டுகொள்வார்கள். இந்த உரையானது சர்வதேச சமூகத்திற்கு, குறிப்பாக உதவி வழங்கும் நாடுகளுக்கு விடுக்கப்பட்டிருக்கிறது. சில நெறிகளைக் கொண்ட சிறப்பான ஆட்சி என்றும், சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் நல்லரசு என்றும், போரால் சிதைந்துபோன வட-க்கை புனரமைப்பதே அரசின் இலட்சியம் என்றும் சந்திரிகா சுயபுகழ் பாடுவது, உதவிவழங்கும் உலக நாடுகளுக்குத்தான். ஆனால் சந்திரிகா ஆட்சிப்பீடத்திலுள்ள குறைபாடுகள் பற்றியும், சீர்கேடுகள் பற்றியும் வடக்கில் நிலவும் யதார்த்த நிலைமைகள் பற்றியும் உலக அரசுகள் நன்கறிய, போர் தொடருமானால் வடக்கை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவது சாத்தியமில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். இதன் காரணமாகவே போர்நிறுத்தம் செய்து இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு உலக சமூகம் வலியுறுத்திவருகிறது. உலகத்தின் கோரிக்கைக்கு இணங்க நாம் ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தம் செய்து எமது நல்லெண்ண நோக்கை செயல்வடிவத்தில் காட்டியிருக்கிறோம். ஆனால் சிறீலங்கா அரசு போரை நிறுத்த மறுத்துவருகிறது. போரைத் தொடர்ந்து நடாத்திக்கொண்டு சமாதானப் பேச்சையும் நடாத்தலாமென கூறுகிறது. பேசிக்கொண்டு போரை நடாத்தும் அபத்த நாடகத்தில் நடிக்க நாம் தயாராக இல்லை.

நாம் போரை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து சமாதானத்தை கடைப்பிடித்து வருகிறோம். எமது போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டு, தானும் போர் நிறுத்தம் செய்து, வடக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்த அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமானால் நாம் போர்நிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கும் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கும் நாம் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தோம். எமது நல்லெண்ண சமாதான முயற்சியை நிராகரித்துள்ள சந்திரிகா, போரை நிறுத்துவதற்கும், பேச்சுக்களில் பங்கு கொள்வதற்கும் விடுதலைப் புலிகளுக்கு அக்கறையில்லை எனக் கூறுகிறார். எமது விடுதலை இயக்கம்பற்றி சந்திரிகாவின் மனதில் விகாரமாகப் புரையோடிக்கிடக்கும் ஆழமான வெறுப்பையும் சந்தேகத்தையுமே இக்கூற்று வெளிப்படுத்துகிறது. இந்த வெறுப்பும் சந்தேகமும் காரணமாகவே விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகா அரசுக்கும் மத்தியில் பிளவு விரிந்துசெல்கிறது. இரு தரப்பினர் மத்தியில் நிலவும் வரலாற்றுப் பகைமைபற்றியும், சந்தேகங்கள் பற்றியும் நோர்வே அரசுக்கு நன்கு தெரியும். இதன் காரணமாகவே பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கும் நோக்கத்துடன் இரு தரப்பினரும் பரஸ்பரம் நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ளும் யோசனையை நோர்வே அறிவித்தது. ஆனால் இந்த யோசனை பற்றி சந்திரிகா அரசு இன்னும் முடிவெதுவும் தெரிவிக்கவில்லை.

**தமிழ் கார்டியன்**

**சென்ற ஆண்டு, சிங்களத் தீவிரவாதிகளும் தமிழ் மிதவாதிகளதும் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்ட அரசியலமைப்பு யோசனைகளை மீண்டும் கொண்டுவரப்போவதாக சந்திரிகா அறிவித்திருக்கிறார். இந்த அரசியலமைப்பு யோசனைகள் அடிப்படையில்தான் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். விடுதலைப் புலிகள் இனப் பிரச்சினையின் அடிப்படைகளை இனம்கண்டு அவைபற்றி பேசுவதற்கு முன்வரவேண்டும் என்றும் கூறினார். இது பற்றி..?**

**திரு. பாலசிங்கம்**

செயலிழந்து செத்துப்போன சந்திரிகாவின் அரசியல் யாப்பு திருத்த யோசனைகள் சம்பந்தமாக நாம் ஏற்கனவே எமது கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக விளக்கியிருக்கிறோம். இந்த அரசியல் யாப்பில் ஆழமான குறைபாடுகள் இருக்கின்றன. இது எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யப் போவதில்லை. தமிழரின் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகளை உள்வாங்கிக்கொள்ளும் போதிய சட்ட வாய்ப்புகள் இந்த அரசியல் யாப்புக் கட்டமைப்பில் இருக்கவில்லை.

தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தில் அவர்களுக்குரிய நிலையான, மாற்றமுடியாத உரிமை, தேசிய இனம் என்ற ரீதியில் அவர்களுக்குரிய அரசியற் தகைமை, அவர்களது சுய நிர்ணய உரிமை ஆகியனவையே தமிழர் பிரச்சினையின் அடிப்படைகளாகும். அதுவே அவர்களது அரசியல் அபிலாசைகளுமாகும். எமது மக்களுக்கு எதிரான போரையும் வன்முறையையும் நிறுத்தி, சமாதானத்திற்கு ஒத்திசைவான இயல்பு நிலையை ஏற்படுத்திக்கொடுத்தால் நாம் இந்த அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு தயாராக இருக்கிறோம்.

**தமிழ் கார்டியன்**

**விடுதலைப் புலிகள் இயக்கம் தமது ஒருதலைப்பட்ச போர் நிறுத்த அறிவித்தலை சர்வதேச ஊடகங்களுக்கு வெளியிடுவதற்கு முன்னராக, நோர்வே மத்தியஸ்தர்கள் வாயிலாக சிறீலங்கா அரசிற்கு அறிவித்திருக்க வேண்டுமென அரச வட்டாரங்களிலும் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்களிலும் குறைகாணப்படுகிறது. இதுபற்றி உங்களது கருத்து என்ன?**

**திரு. பாலசிங்கம்**

எமது விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமாக ஒருமாத காலத்திற்கு போர் நிறுத்தம்

> **சந்திரிகாவின் மனதில் விகாரமாகப் புரையோடிக்கிடக்கும் ஆழமான வெறுப்பையும் சந்தேகத்தையுமே இக்கூற்று வெளிப்படுத்துகிறது.**

செய்ய முடிவுசெய்து இருப்பதாக முதலில் நோர்வேயின் விசேட தூதர் திரு.எரிக் சோல்ஹெய்ம்மிற்கு நான் அறிவித்தேன். எமது அதிகாரபூர்வமான அறிக்கையையும் தொலைநகல் மூலம் அவருக்கு அனுப்பிவைத்து, சிறீலங்கா அரசிற்கு அறிவிக்கும்படி சொல்லிய பின்னரே விடயத்தை சர்வதேச ஊடக உலகத்திற்கு அறிவித்தேன். அந்த நேரத்தில் சிறீலங்கா ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் முக்கிய அமைச்சர்களும் கொழும்பில் இருக்கவில்லை. அவர்கள் எல்லோரும் வெளிநாடுகளில் விடுமுறையைக் கழித்துக்கொண்டார்கள். அதனால் தான் அவ்வேளை அவர்களைத் தொடர்புகொள்ள முடியவில்லை என திரு. எரிக் சோல்ஹெய்ம் எனக்குத் தெரிவித்தார். எனவே நாம் அரசுக்கு அறிவிக்கவில்லை என எம் மீது எவரும் குறை சொல்ல முடியாது.

**தமிழ் கார்டியன்**

**புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை வரவேற்றும் அரசும் பதிலுக்கு போர்நிறுத்தம் செய்து புலிகளுடன் பேசவேண்டுமென வலியுறுத்தியும் பத்து அரசியல் கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து பரப்புரைசெய்துவருகின்றன. அதேவேளை தமிழ் மக்கள் மத்தியிலும் உங்களது சமாதான முயற்சிக்கு பரந்த அளவு வரவேற்பு பெருகிவருகிறது. இந்தத் திருப்பங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**திரு. பாலசிங்கம்**

இது மிகவும் வரவேற்கத்தக்க நல்லதொரு திருப்பம் என்றே சொல்லவேண்டும். சமாதானம் குறித்தும், சமாதான வழியிலான அரசியற் தீர்வு குறித்தும் தமிழரிடையே கருத்தொற்றுமை உருவாகிவருவதன் அறிகுறியாகவும் இதனைப் பார்க்கலாம். எமது மக்களின் விடிவிற்காக நாம் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு ஒன்றுபட்ட தமிழரின் குரல் ஓங்கி ஒலிப்பதைக்காண எமக்கு பெருமகிழ்ச்சியாக இருக்கிறது.

சுயநிர்ணய உரிமைதான் தமிழ் மக்களின் ஆழமான அபிலாசை என்பதை உணர்த்தும் வகையில் யாழ்ப்பாண மக்கள் எழுச்சிக்கோலம் கொண்டு குரல் எழுப்ப ஆரம்பித்திருப்பதும் ஒரு வியக்கத்தக்க ஒரு புதிய திருப்பம் என்றே சொல்லவேண்டும். இராணுவ ஆக்கிரமிப்பின் கீழு-ள்ள இப் பிரதேசத்தில், அரசியல் அழுத்தங்கள் எதுவுமின்றி துணிச்சலான ஒரு வெகுசன எழுச்சி பரிணமித்துவருவது வரவேற்கத்தக்கது. தமிழரின் அரசியல் வரலாற்றில் இதுவொரு ஆக்கபூர்வமான திருப்பமாகும்.

**தமிழ் கார்டியன்**

**விடுதலைப் புலிகளின் தலைமையில் நடைபெறும் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரித்து சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் உலகெங்கும் பிரச்சாரம் செய்துவருகிறார். அடுத்த மாத ஆரம்பத்தில் பிரித்தானியாவில் நடைமுறைக்குவரும் பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகளையும் தடைசெய்யுமாறு பிரித்தானிய அரசு மீது அழுத்தம்போட்டு வருகிறார். பிரித்தானிய அரசும் கதிர்காமரின் கோரிக்கையை கடுமையாக பரிசீலனை செய்வதாகவும் சொல்லியிருக்கிறது. இந்தப் பிரச்சினையை நீங்கள் எவ்விதம் நோக்குகிறீர்கள்?**

**திரு. பாலசிங்கம்**

தமிழரின் தேச சுதந்திரப் போராட்டத்திற்கு இழுக்கு ஏற்படுத்தி தனது சிங்கள எஜமான்களைத் திருப்திப்படுத்தும் வகையில் கதிர்காமர் தனது தொழிலை செவ்வனே செய்கிறார் என்பது எமக்கு நன்கு தெரியும். தமிழரின் விடுதலைப் போராட்டம் பயங்கரவாதமெனப் பொய் சொல்லி அமெரிக்கர்களை நம்ப வைப்பதில் அவர் வெற்றியும் கண்டிருக்கிறார். இதனால் அமெரிக்கா ஒரு தவறான முடிவை எடுத்தது. இந்த முடிவு தமிழர்களுக்கு எதிராக போரைத் தீவிரப்படுத்த சிங்கள அரசுக்கு ஊக்கத்தை அளித்தது. ஆனால் இந்த தவறான முடிவால் அமெரிக்கா சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஆக்கபூர்வமாகப் பங்களிக்க முடியவில்லை.

பிரித்தானியா ஒரு முக்கியமான வல்லரசு. இனப் பிரச்சினையில் இரு தரப்பினரையும் சமாதானப் பாதையில் இட்டுச் செல்லும் நோர்வேயின் முயற்சிக்கு பிரித்தானிய அரசு பக்கத்துணையாக நின்று பங்களிப்புச் செய்கிறது. பிரித்தானியாவுக்கு இன்னொரு வரலாற்றுக் கடப்பாடும் உண்டு. காலனித்துவ யுகத்தில் பிரித்தானியாவின் தலையீடுகள் காரணமாகவே இரு தேசங்கள் மத்தியில் முரணியக்கம் முளைத்தது. ஆகவே, இப் பிரச்சினையை தீர்த்துவைக்கும் கடப்பாடு பிரித்தானியாவுக்கு உண்டு.

தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நசுக்கிவரும் ஒரு இனவாத அரசின் கரங்களைப் பலப்படுத்துவதே கதிர்காமரின் நோக்கம் என்றும், அவரது கோரிக்கைக்கு இசைந்து விடுதலைப் புலிகளை தடைசெய்வதால் எழக்கூடிய எதிர்மறை விளைவுகள் பற்றி நான் பிரித்தானிய அரசின் உயர்மட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்து விளக்கியிருக்கிறேன். முதலாவதாக, எமக்கு எதிராகத் தடைகொண்டுவரப்பட்டால் தற்போதைய சமாதான முயற்சிகள் பாரதூரமான முறையில் பாதிக்கப்படும். இந்த நடவடிக்கையால் பிரித்தானியாவின் நடுநிலை அந்தஸ்து அகன்று போய்விடும். அதனால் ஆங்கில அரசு தமிழரின் இனப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான பங்களிப்பு எதையும் செய்ய முடியாது. அடுத்ததாக, தமிழரின் நலன்களைப் பேணி அவர்களின் போராட்டத்தை முன்னெடுக்கும் மாபெரும் அரசியல் இராணுவ சக்தியாகத் திகழும் விடுதலைப் புலிகளை தடைசெய்தால், ஒடுக்கப்பட்டு நிற்கும் தமிழரின் நலன்கள்தான் பாதிக்கப்படும். மூன்றாவதாக, ஈழத் தமிழரின் இலட்சியப் போராட்டத்திற்கு 10 கோடி உலகத் தமிழர்கள் தார்மீக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் ஆதரவு வழங்கி வருகிறார்கள். புலிகளுக்கு எதிராக தடை கொண்டுவரப்பட்டால் பிரித்தானிய அரசு உலகத் தமிழ்ச் சமூகத்தின் வெறுப்பைத்தான் சம்பாதிக்க முடியும். நான்காவதாக, மிக முக்கியமாக ஒரு விடயம் சொல்வதாக இருந்தால் நாம் சர்வதேசப் பயங்கரவாதத்தில் ஈடுபடும் ஒரு இயக்கம் அல்ல. இந்தக் கற்பிதம், கதிர்காமரின் விகாரமான மனக்குகைக்குள்தான் குடியிருக்கிறது. மூன்றாவது உலகத்தில் நிகழ்ந்த, நிகழ்ந்துவரும் ஆயுதப் போராட்ட வடிவங்கள் பற்றியும் அவற்றின் வரலாறுகள் பற்றியும் ஆழமான வரலாற்று அனுபவத்தையுடைய ஆங்கில அரசு, அவசரப்பட்டு தவறான முடிவுகளை எடுக்கமாட்டாது என நாம் நம்புகிறோம்.




ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL

'எப்பொழுதுமே மலிவு விலை'

OPEN: 7 Days a Week
Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Tel: 0181-9033063-Fax: 0181-9039711

Pub

# புத்திசிகாமணி பதில்கள்

★ ஐயா என்னிடம் சீட்டெடுத்த பணம் இருக்கிறது. அதைக் கொண்டு நான் மேலும் முன்னேற எவ்வாறான தொழிலைத் தொடங்கலாம். குறிப்பாக எந்த வகையான வர்த்தக நிறுவனம் ஒன்றை தொடங்கலாம் என்ற உங்கள் அறிவுரையைத் தருவீர்களா?

- க. நிமலராஜன்
பாரிஸ் - பிரான்ஸ்

❢ ஏற்கனவே அதிகம்தான். இருந்தாலும் நீர் ஒரு கோயிலைத் திறக்கலாமே!

★ சிஹல உறுமயவிற்காக ஆனந்த் சங்கரியார் மன்னிப்பு கோரியுள்ளாரே. இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பரந்தாமன்
பேர்லின் - ஜேர்மனி

❢ அவர்களின் வேலை அதுதானே!

★ இலங்கையில் 24ம் திகதிக்குப் பிறகு என்ன நடக்கும்?

- ந. பரலிங்கம்
பாரிஸ் - பிரான்ஸ்.

❢ இவர்கள் யுத்தம் சரணம் கச்சாமி தான் முடிவென்றால், மீண்டும் பேரலைகள் எழுவது தவிர்க்க முடியாமல் இருக்கும்.

★ புலம் பெயர்ந்த தமிழ்ச் சூழலில் தற்போது ஏற்பட்டிருக்கும் ஊடகங்களின் அதிகரிப்பு (சஞ்சிகை, பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி) ஆரோக்கியமானதா?

- தி. நரேந்திரன்
இலண்டன்.

❢ ஊடகங்களின் அதிகரிப்பு நல்லது. அவை ஆரோக்கியமாக இருக்கும் வரையிலும்!

★ யுத்த நிறுத்தம் என்பது வலிந்து தாக்காமல் இருத்தலைத்தானே குறிக்கும்?

- ரமேஷ்
பாரிஸ் - பிரான்ஸ்.

❢ வடக்கில் சில பகுதிகளில் படையினரின் முன்னேற்றத்தை புலிகள் ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்று தானே கேட்கவருகிறீர். புலிகள் தற்போது, நடத்திக் கொண்டிருப்பது வெற்றிகரமான 'அரசியல்' யுத்தம்.

★ பாரதி படத்தில் பிரபல்யமான நடிகர் நடித்திருந்தால் எப்படி இருக்கும்?

- க. பாரதிதாசன்
எசன் - ஜேர்மனி

❢ பாரதி படத்தில் பாரதியை தரிசித்தோம். பிரபல்யமான நடிகர் நடித்திருந்தால் அவரைத்தான் தரிசித்திருக்க முடியும்.

★ யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பேரெழுச்சி குறித்து உங்கள் கருத்தென்ன?

- எஸ். கதிர்வேல்
பாரிஸ் - பிரான்ஸ்

❢ இவ் இதழில் உள்ள அன்ரன் பாலசிங்கம் அவர்களின் பேட்டியை வாசித்துப்பாரும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## போர் மூலமே...

மகாநாயக்கர்:- இந்த யுத்தம் இராணுவ ரீதியாக வெல்லப்பட வேண்டும். அதன் பின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**தூதுவர்:–** வெளிநாட்டில் வாழும் மக்களிடையே இந்த யுத்தம் இராணுவ ரீதியாக வெல்லப்பட முடியாதது என்ற கருத்து உள்ளது.

மகாநாயக்கர்:- இது வெளிநாட்டில் வாழ்பவர்களது கருத்து. யுத்தம் எமது நாட்டில்தான் நடக்கிறது. நான் எமது நாட்டில் வாழ்பவர்களில் பெரும்பான்மையானவர்களின் கருத்தைப் பற்றி பேசுகின்றேன். வெளிநாட்டவர்கள் வாழச் சொல்வதுபடி நாம் வாழமுடியாது. இது சிறீலங்காவில் மட்டுமல்ல இந்த உலகத்தில் எந்தவொரு நாட்டிலும் மற்றொரு நாட்டவரது விருப்பிற்காக வாழ்வதென்பது நடக்கமுடியாத ஒன்று.

**தூதுவர்:–** சிலர் சொல்கிறார்கள் இப்பிரச்சினை இராணுவ ரீதியாகத் தீர்க்கப்படவேண்டும் என்று, வேறு சிலர் சொல்கிறார்கள் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று...

மகாநாயக்கர்:- அது சிலரது கருத்துக்கள்.

**தூதுவர்:–** அப்படியானால் உங்கள் கருத்து என்ன?

மகாநாயக்கர்:- இந்த யுத்தம் யுத்தத்தின் மூலம்தான் முடிவுக்கு வரவேண்டும்.

**தூதுவர்:–** சிங்கள மக்களுக்கு இருக்கும் உரிமைகளும் அதே போல், தமிழர்களுக்கு இருக்கும் உரிமைகள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

மகாநாயக்கர்:- இந்த நாடு சிங்களவர்களுக்கு உரிமையானது. பண்டைக்காலத்தில் இருந்து எல்லா சமுகங்களும் ஒன்றாகத்தான் வாழ்ந்து வருகின்றன. இந்த பிரச்சினைகள் எல்லாம் வெளிநாடுகளால் தோற்றுவிக்கப்பட்டவைகள். எமது பிரச்சினைகளில் அவைகள் தலையிடுகின்றன.

**தூதுவர்:–** எந்த நாடுகள்?

மகாநாயக்கர்:- நான் நாடுகளை வேறுபடுத்திக் கூற விரும்பவில்லை. அத்துடன் அரசியல்வாதிகளும் பிரச்சினையைத் தோற்றுவிக்கிறார்கள்.

**தூதுவர்:–** அதிகாரப்பகிர்வு குறித்த திட்டங்கள் எதாவது உங்களிடம் உள்ளதா?

மகாநாயக்கர்:- அது அரசியல்வாதிகளுடைய வேலை.

**தூதுவர்:–** விசேடமாக எமக்கு கூறுவதற்கு எதாவது உங்களிடம் உள்ளதா?

மகாநாயக்கர்:- இந்த விடயங்களை எல்லர்ம் கையாளவேண்டியவர்கள் இந்த நாட்டை ஆள்பவர்கள். அவர்கள் என்னிடம் எப்போது வருகிறார்களோ அப்போது அவர்களிடம் நான் கூறுவேன்.

**தூதுவர்:–** கொழும்பில் நான் அவர்களை சந்தித்தால் நீங்கள் அழைத்ததாகக் கூறவேன்.

மகாநாயக்கர்:- இல்லை. எந்த நபரையும் வரவேற்க வேண்டிய அவசியம் இல்லை.

**தூதுவர்:–** எனது கருத்து இந்த யுத்தம் இராணுவ ரீதியாக வெல்லப்பட முடியாதது. இது பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. நான் நினைக்கிறேன் தமிழ் மக்கள் மேல் சற்று அதிகமான கரிசனை காட்டப்பட வேண்டும். இரு சமூகங்களும் ஒன்றாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

# கிடைக்கப்பெற்றோம்

அண்மையில் ஜேர்மனியில் இருந்து மட்டுவில் ஞானக்குமாரன் எழுதி வெளியிட்டுள்ள 'முகமறியா வீரர்களுக்காக.... கவிதைத் தொகுப்பு கிடைக்கப்பெற்றோம். புலம் பெயர்ந்த மண்ணிலிருந்து, நிலம் நினைத்து முகிழ்த்திருக்கும் இவரது கவிதைகள் யாவும் ஈழப்போராட்ட வரலாற்றில் உணர்வுப்பதிவுகளாய் நிமிர்ந்து நிற்கின்றன.

ஈழத் தமிழர்களாகிய நாங்கள் ஒரு போராட்ட யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். களத்திலே உயிர்கொடுத்து நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிற போராட்டத்திற்கு புலத்திலே வாழும் நாம் எம்மால் இயன்ற அனைத்தையும் செய்யவேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் இருக்கிறோம். குறிப்பாக எழுத்தாளர்களுக்கு அந்தப் பொறுப்பு நிறையவே உண்டு அந்த வகையில் மட்டுவில் ஞானக்குமாரன் இன்றய கவிதைப் புயலாய் முகிழ்ந்திருக்கின்றார். அவர் தொடர்ந்து தேசவிடிவு நோக்கி அகலச் சிறகுவிரிப்பார் என நம்புகிறோம்.

அதிகாலை என்றாலும்
நெஞ்சம் சுடும்
இராணுவ இரைச்சல்
எம் உயிரைப்
பதறவைக்கும்

மனதுக்குப் பட்டது...
எந்த நகரமோ
நரகமாகுமென்று
என்றவாறாய்
இராணுவ
அடக்குமுறைக்குள்ளான
மக்களின் அவலத்தை
வெளிப்படுத்துவதிலும் சரி
'செம்பு தண்ணியை
ஒரு முடக்கில் குடித்தான்
வெறுமனே வழியனுப்ப
மனம் மறுத்து
கையிலே பழமொன்றைக்
கொடுத்தேன்'
என்றவாறாய்
மக்களுக்கும்
போராளிகளுக்குமான
உயிர்ப்பான உறவை
வெளிப்படுத்தியதிலும் சரி
வெடிகுண்டேந்திய வீரர்கள்
கொழும்பு வீதியெங்கும்
வலம் வந்த செய்திகேட்டு
சிலிர்த்தோம்.
துடிப்படங்கிப் போகும்வரை
எதிர்ச்சமர் செய்த ஒலி
எங்கும் கேட்டது.
என்றவாறாய்
தற்கொடைப் போராளிகளின்
உச்ச தியாகத்தையும்
துணிச்சலையும்




வெளிப்படுத்தியதிலும் சரி,
மட்டுவில் ஞானக்குமாரன்
தன்னை நன்றாகவே
வெளிப்படுத்தி நிற்கின்றார்.
பரவலாக எல்லாக்
கவிதைகளிலுமே
எதிர்காலத்தில், புலம்
பெயர்ந்த மண்ணில் ஒரு
எழுச்சிக்கவிஞன் உயிர்ப்புப்
பெறுவதை எம்மால் உணர
முடிகின்றது. வளர்க!
தொடர்க! அவரது
கவிப்பணி.

**கவிதைத் தொகுப்பை பெறவிரும்புவோர்:**

முகவரி:
M. Gnanakumaran
Seminar Str - 2
49074 Osnabruick
Germany.

E-mail:
maduvilan@hotmail.com

— அபிநயபிரியன்

கேணல் கிட்டு மற்றும் ஒன்பது தோழர்களினதும்
8ம் ஆண்டு நினைவு எழுச்சி நிகழ்வு
எழுச்சி மாலை
இசை வில்லிசை நடன நிகழ்ச்சி




கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட; ஓய்வில்லாத
புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.
வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது.
அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.
கிட்டு: நீ சாகவில்லை
ஒரு புதிய சூரியனாகப் பிறந்திருக்கிறாய்!
தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

21-01-2001 ஞாயிறு மாலை 5.30மணி
Theatre Gymanase
28 Bld. Bonne Nouvelle
75010 Paris
Metro- BONNE NOUVELLE

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம், மேலதிக தொடர்புகட்கு: 01 43

ஓயாத அலைகள் 03, ஆனையிறவுப் பெருஞ்சமர் அடங்கிய ஒளிப்பேழைகளை இந்நிகழ்வில் பெற்றுக் கொள்ளலாம்.

# உமறு இப்னு அல்-கத்தாப்



உமறு இப்னு அல்—பத்தாப் பெயர்கொண்ட கெய்ரோ மசூதி

உமறு இப்னு அல்-பத்தாப் கலீபாக்களில் இரண்டாமவரும் அவர்களில் முக்கியமானவருமாவார் என்று சொல்லலாம். முஹம்மது நபி (சல்) அவர்களுக்கு வயதில் இளையவரான உமறும் மக்காவிலே பிறந்தவர். அன்னார் பிறந்த ஆண்டு சரியாகத் தெரியவில்லை. அநேகமாக கி.பி 586 ஆம் ஆண்டாக இருக்கலாம்.

துவக்கத்தில் உமறு, முஹம்மது நபி (சல்) அவர்களுடைய புதிய மார்க்கத்திற்கும் கடுமையான எதிரியாக இருந்தார். ஆனால், திடீரென்று அவர் அம் மார்க்கத்தில் சேர்ந்து, அதன் வலிமை மிக்க ஆதரவாளர்களில் ஒருவரானார். முஹம்மது(சல்) அவர்களின் ஆலோசர்களில் ஒருவராய் உமறு ஆகி அன்னாரின் வாழ்நாள் முழுவதும் அவ்வாறே இருந்துவந்தார்.

தமக்குப் பின்னால் யார், பதவிக்கு வரவேண்டும் என்பதைக் குறிப்பிடாமலேயே முஹம்மது நபியவர்கள் 632ஆம் ஆண்டில் காலமானார்கள். உடனேயே உமறு தயக்கம் எதுவுமின்றி முஹம்மது நபியவர்களில் நெருங்கிய தோழரும், மாமனாருமான ஆயுபக்ர் பதவி ஏற்கவேண்டுமென்று ஆதரவு தெரிவித்தார்கள். இதனால், பதவிப் போட்டி தவிர்க்கப்பட்டு, அபூபக்ர் முதல் கலீபாவாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்க முடிந்தது.

கலீபா ஆபூபக்ர் வெற்றிமிக்க தலைவராக விளங்கினார்கள். ஆனால் இரண்டே ஆண்டுகள் ஆட்சிப் பணி புரிந்துவிட்டு அன்



னார் காலமானார்கள். எனினும் அவர்கள் தமக்குப் பின்னர் உமறு பதவிக்கு வரவேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார். அபூபக்ரைப் போலவே உமறும் நபிகளின் மாமனாராவார். அபூபக்ரின் முன்யோசனையினால் பதவிப்போட்டி மீண்டும் தவிர்க்கப்பட்டது.

உமறு கி.பி. 634 இல் பதவியேற்று, 644 வரை பதவியில் இருந்தார். அந்த ஆண்டில் அவரை பாரசிக அடிமை ஒருவன் மதீனாவில் குத்திவிட்டான். மரணப் படுக்கையில், உமறு தமக்குப் பின் பதவிக்கு வருபவரைத் தேர்ந்தெடுக்க அறுவர் கொண்ட ஒரு குழுவை அமைத்து; அவர்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்தார். இவ்வாறாக, மீண்டும் பதவிக்கான ஆயுதப் போட்டி தவிர்க்கப்பட்டது. இந்தக் குழு மூன்றாம் கலீபாவாக உதுமானைத் தேர்ந்தெடுத்தது. அவர்கள் 644 முதல் 656 வரை ஆட்சி செய்தார்கள்.

உமறுடைய பத்தாண்டு கிலாபத்தின்போதுதான், அரபுகளுக்கு முக்கிய வெற்றிகள் கிட்டின. உமறு பதவியேற்ற சிறிது காலத்தில், அப்போது பைஸாந்தியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த சிரியாவும், பாலஸ்தீனமும் அரபு இராணுவத்தின் படையெடுப்புக்கு இலக்காகின. யர்முக் போரில் (636) அரபுகள் பைஸாந்தியப் படையினைத் தோற்கடித்துப் பெரும் வெற்றி கண்டார். அதே ஆண்டு டமாஸ்கசும் (திமிஷ்கும்) வீழ்ந்தது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் ஜெரூசலமும் சரணடைந்தது. கி.பி. 641 க்குள், பாலஸ்தீன் முழுவதையும் சிரியாவையும் அரபுகள் வெற்றி கொண்டு, இன்றைய துருக்கியாக அறியப்படும் நாட்டையும் நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தனர். 639இல் பைஸாந்திய ஆட்சியின் கீழிருந்து எகிப்தின் மீதும் அரபு இராணுவம் படையெடுத்து, மூன்று ஆண்டுகளுக்குள் எகிப்தும் முழுமையாக வெற்றிகொள்ளப்பட்டது.

உமறு அவர்கள் பதவியேற்பதற்கு முன்னரேயே, அப்போது பாரசீகர்களின் ஸஸ்ஸானியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த ஈராக் மீது தாக்குதல் தொடங்கப்பட்டது. கி.பி.641க்குள் ஈராக் முழுமையும் அரபு ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டது. அது மட்டுமல்ல அரபு இராணுவம் பாரசீகத்தின் மீதே படையெடுத்தது. நஹாவந்துப் போரில், கடைசி ஸஸ்ஸானியப் பேரரசின் படைகள் முற்றிலுமாக முறியடிக்கப்பட்டன. உமறு 644-ல் காலமானார். அப்போதே கிழக்கு ஈரானியப் பகுதியும் கைப்பற்றப்பட்டுவிட்டது. உமறு காலமான பின்னருங்கூட அரபு இராணுவத்தின் வேகம் குறையவில்லை. கிழக்கே, அவை பாரசீகம் முழுவதையும் கைப்பற்றின. மேற்கே ஆபிரிக்காவை நோக்கி அவை முன்னேறின. உமறு அவர்களுடைய வெற்றிகளின் பரப்பு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அவை நிரந்தரமாகவும் இருந்தன என்பதுதான். ஈரானிய மக்கள் இஸ்லாத்தைத் தழுவினர் என்றாலும், இறுதியில் அவர்கள் அரபு ஆட்சியிலிருந்து தம் சுதந்திரத்தை மீட்டுக்கொண்டனர். சிரியா, ஈராக், எகிப்து ஆகிய நாடுகள் அவ்வாறு மீட்டுக் கொள்ளவில்லை. இந்நாடுகள் முழுமையாக அரபு மயமாகின என்பதுடன், இன்றளவும் அவ்வாறே இருந்து வருகின்றன.

தம்முடைய படைகள் வெற்றி கொண்ட இப்பரந்த பேரரசை முறையாக ஆட்சி செய்வதற்குரிய தக்க திட்டங்களை உமறு வகுக்க வேண்டியதாயிற்று. அரபுகள் சலுகைகள் பெற்ற இராணுவப் பிரிவினராகத் தாங்கள் வெற்றி கொண்ட வட்டாரங்களில் வாழ வேண்டும் என்றும் உமறு முடிவெடுத்தார். பெருவாரியாக அரபுகளாக இருந்த முஸ்லிம் ஆட்சியாளர்களுக்குக் குடிமக்கள் திறை செலுத்தி வரவேண்டும். மற்றபடி அவர்களுடைய வாழ்க்கையில் எவ்வித தலையீடுமின்றி, அவர்களை அமைதியாக இருக்க விட்டுவிடவேண்டும். இன்னும் குறிப்பாக அவர்களைக் கட்டாயப்படுத்தி இஸ்லாத்தில் சேருமாறு செய்யக்கூடாது என்றும் அன்னார் வழி செய்தார்கள்.

உமறுடைய சாதனைகள் நிச்சயமாக எவர் மனதிலும் ஆழ்ந்து பதிந்து நிற்கக்கூடியவை. முஹம்மது நபியவர்களுக்குப் பின்னர் இஸ்லாம் பரவியதற்கு அன்னார் முக்கியமான காரண புருஷராக விளங்குகிறார்கள். அவர்களுடைய வேகமான வெற்றிகள் இல்லாதிருந்தால், இஸ்லாம் இன்றிருக்கும் அளவுக்குப் பரவியிருக்குமா என்பது சந்தேகம்தான்.

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

அன்றியும் அன்னார் காலத்தில் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் பல இன்றும் அரபுத் தன்மையுடையதாகவே இருக்கின்றன. இவ் வளர்ச்சிகளை முக்கியமாக இயக்கி வைத்தவர் என்ற நிலையில் முஹம்மது அவர்களுக்குப் பெருமளவு புகழுண்டு. எனினும், உமறு அவர்களின் பங்களிப்பைப் புறக்கணிப்பது பெருந்தவறாகும். உமறு கண்ட வெற்றிகள் முஹம்மது நபி தந்த ஊக்கத்தினால் மட்டுமல்ல (இஸ்லாமிய ஆட்சியின்) ஓரளவு விரிவாக்கம் நிச்சயமாக நிகழக்கூடியதுதான். ஆனால் உமறு அவர்களின் ஒளிமிக்க தலைமையின் கீழ் வெற்றி கண்ட அளவுக்கல்ல.

உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்திபெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசை முறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப்பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.

# அமெரிக்கத் தூதரின் திருமலை விஜயம்

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை, நிலாவெளி -கோபாலபுரம் பகுதிக்கு வந்த வெளிநாட்டுப் பிரஜைகள் சிலர் அப் பகுதிகளில் உள்ள வீடுகள் சிலவற்றிற்குச் சென்றனர். அவ்வீடுகளின் குடியிருப்பாளர்களைச் சந்தித்து பேசினர். நிலாவெளி - கோபாலபுரம் பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் சிறீலங்கா கடற்படையினருக்கு இத்தகவல் எட்டியது. உடனே, கடற்படை அதிகாரிகள் சிலர் நிலாவெளியில் உள்ள உல்லாசப் பயணிகள் தங்கும் கடற்கரை விடுதிக்குச் சென்று, விடுதியில் தங்கும் வெளிநாட்டவர்கள் யார், யார் என்று விசாரித்தனர். சிறீலங்காவின் அமெரிக்கத் தூதர் ஆஷ்லி வில்ஸ் மற்றும் அவரது அதிகாரிகளும் தான் விடுதியில் தங்கியிருப்பதாக படையினருக்குத் தெரிவிக்கப்பட்டது. திருமலைக் கடற்படைத் தலைமையகத்திற்குத் தகவல் பறந்தது.

கண்டியில் மல்வத்தை மகாநாயகரைச் சந்தித்த கையோடு அமெரிக்கத் தூதர் திருமலை விஜயத்தை மேற்கொண்டிருந்தார். திருமலை மாவட்டத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்களின் கஷ்டங்கள் முதலியவற்றை நேரடியாக அறிந்து கொள்வதே அமெரிக்கத் தூதரின் விஜயத்தின் நோக்கமாகவிருந்தது. அவரது மனித உரிமை மீறல் பற்றிய தேடல் நிலாவெளி - கோபாலபுரம் கிராமப்புறப் பகுதிகளிலேயே ஆரம்பித்தது. செவ்வாய்க்கிழமை அமெரிக்கத்தூதர் திருமலை மாவட்டத்தில் உள்ள சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அப்போது திருமலை மாவட்டத்தில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் பற்றி புள்ளி விபரங்களுடன் அவர்கள் தெரிவித்தனர். நிலாவெளி - கோபாலபுரத்தில் கடந்த ஆண்டின் இறுதியில் ஆறு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்த முழு விபரங்களையும் அவர் பெற்றுக் கொண்டார். கடற்படையினரின் அட்டூழியங்கள் தொடருமானால் தாங்கள் நிலாவெளி மற்றும் கோபாலபுரம் கிராமங்களை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அவ்வூர் மக்கள் தெரிவித்தனர். மூதூர்ப் பிரதேசத்தில் பூநகர் என்ற சிறிய கிராமத்தில், சிறீலங்கா ஊர்காவல் படையினரால் ஏழு தமிழ் மக்கள் கண்ட துண்டமாக வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பற்றியும் அமெரிக்கத் தூதரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

பின்னர் அமெரிக்கத் தூதர் திருமலை அரசாங்க அதிபர் மற்றும் சிறீலங்கா கடற்படைத் தளபதி, இராணுவக் கட்டளைத் தளபதி, பொலிஸ் தலைமை அதிகாரி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். கண்டியில் மல்வத்தை மகாநாயக்கருடன் நடத்திய சூடான பேச்சுவார்த்தையை அடுத்து அமெரிக்கத் தூதர் திருமலை விஜயத்தின் போது படையினருடன் நடத்திய மனித உரிமை மீறல்கள் பற்றிய பேச்சுவார்த்தை மூடிமறைக்காத ஒன்றாக இருந்ததாக அரச சார்பற்ற நிறுவனங்களின் வட்டாரங்கள் தெரிவித்தன. அமெரிக்கா இப்போது சிறீலங்கா அரசுக்கு இராணுவ ஆயுதப் பயிற்சிகளை உள்நாட்டிலும் வெளியிலும் வழங்கி வருகின்றது தெரிந்ததே. இந்த நிலையில் யுத்தத்தை யுத்தத்தினாலேயே முடிவு கட்டுவோம், எமக்கு வெளிநாட்டுத் தூதர்களின் ஆலோசனை தேவையில்லை என்று கண்டியில் வைத்து மகாநாயக்க தேரர் அமெரிக்கத் தூதரிடம் கூறியிருந்தார்.

திருமலையில் வைத்து அமெரிக்கத் தூதர் கடற்படை மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேசும்போது, தமிழ்ப் பிரதேசங்களில் தொடர்ந்து மனித உரிமை மீறல்கள் இடம்பெறுமானால் தற்போது அமெரிக்கா சிறீலங்காவிற்கு வழங்கி வரும் இராணுவ உதவிகளை நிறுத்துவது குறித்து பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்று அரச சார்பற்ற நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த மறைமுக எச்சரிக்கை திருமலை மாவட்டத்தில் மட்டுமல்ல ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு உதவுமா என்பது போகப் போகத்தான் தெரியும் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. பண்டாரவளை பிந்துனுவேவா புனர்வாழ்வு நிலையப் படுகொலையின் பின்னர் சர்வதேச சமூகத்தின் கவனம் இலங்கை மீது தீவிரமாகத் திரும்பியுள்ளது தெரிந்த விஷயம். மனித உரிமை மீறல்களைத் தடுப்பது என்ற பேரில்தான் சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சினை விஷயத்தில் தலையிடுவதற்குத் தீர்மானித்து விட்டது என்பது அனைவருக்கும் தெரிந்தது.

திருமலை விஜயத்தின் முடிவில், மறுநாள் புதனன்று அமெரிக்கத் தூதரை சந்தித்து பேசியபோது, வவனியா மற்றும் புத்தளம் பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலவரங்களைப் பார்வையிட்டேன். இப்பொழுது திருமலை மாவட்டத்தின் மனித உரிமை நிலவரத்தைப் பார்வையிட்டேன். அடுத்த மாதம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள நிலவரங்களைப் பார்வையிட இருக்கின்றேன். அதன்பின்னர் தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க அரசுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவித்தார். சமர்ப்பிக்க உள்ள அவ் அறிக்கையினை நீங்களும் பெறலாம் என்றும் அமெரிக்கத் தூதர் கூறினார். ஆனால், இவ்வறிக்கைக்கு அப்பால் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதே தமிழ் வட்டாரங்களின் எதிர்பார்ப்பு.

(திருமலையில் இருந்து நாதன்)

## புகலிட நிகழ்வுகள்

# மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் மாவீரர்நாள் 2000

தேசிய விடுதலைப் போரில் விதையாகிப் போன மாவீரத் தெய்வங்களை நினைவு கூறும் மாவீரர் நாள் நிகழ்வு மலேசியாவின் பல்வேறு முக்கிய நகரங்களில் எழுச்சியாக நடைபெற்றன.



அதன் தொடர்பில், உலகத் தமிழர் நிவாரண நிதிய தலைமையகத்தின் ஏற்பாட்டில், மாவீரர் நாள் நிகழ்வு கடந்த 09.12.2000 காரிக்கிழமை (சனி) மாலை 7.00 மணி தொடங்கி மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் அமைந்துள்ள 'பிரிக்பில்ட்ஸ்' பார்வையற்றோர் சங்க மண்டபத்தில் எழுச்சியாக நடைபெற்றது.



நிகழ்வு அமைதி வணக்கத்துடன் இனிதே தொடங்கியது. அனைவரும் சுடரேந்தி நிற்க மாவீரர் பாடல் ஒலிக்கப்பட்டது. அனைவரும் கண்ணீரால் தங்கள் வணக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர். வந்திருந்த மாந்த மனங்களை நெகிழ்த்திய 'தாயகக் கனவினில் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே...' நம் உயிரைப் பிழியும் உண்மைகளாகும்.

ஈகைச் சுடரினை ஏற்றினார் உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் மகளிர் பிரிவின் பொறுப்பாளர் அவர்கள். தொடர்ந்து, மாவீரத் தெய்வங்களின் துயிலகங்களுக்கும், நிழற்படங்களுக்குமாக மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் வரவேற்புரையாற்றினார் நிகழ்வின் தொகுப்பாளர் புருணை கலைமணி அவர்கள். அவர், மாவீரர் நாள் தமிழனை தலைநிமிர வைத்த வரலாற்றுப் பெருவிழா என குறிப்பிட்டார். அதோடு மாவீரர் நாளை நாம் இங்கு கொண்டாடுவது நாம் செய்த மிகப் பெரிய பேறு என்றார்.

அவரைத் தொடர்ந்து சிறப்புரை நிகழ்த்தினார் உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் அமைப்பாளர் திருமிகு. சி. பகுபதியார் அவர்கள்; மாவீரர்களை வணங்கி தம் உரையைத் தொடங்கினார். மலேசியாவில் மாவீரர் நாள் நடத்தப்படுவதன் நோக்கம், தமிழீழ போராட்டத்தின் எழுச்சி எமது மக்களிடமும் ஏற்பட வேண்டும் என்றார். மேலும் அவர்களின் ஈகங்களும் அருஞ்செயல்களும் மக்களிடம் விளக்கப்படுத்துவது காலத்தின் கட்டாயம் எனக் குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்து அவர், தமிழீழ விடுதலைப் போராட்டம் வரலாற்றில் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. அதனை தகர்த்தெறிந்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போராளிகளை எந்த வலிமையாலும் வீழ்த்தவே முடியாது. தமிழீழம் நிச்சயம் பூக்கும் — மாவீரர் கனவு நனவாகும் என விழைந்து விடைபெற்றார்.

இடையிடையே பல்வேறு பாடல்களும், கவிதைகளும், எழுச்சி நடனங்களும் தமிழ்நெறிக் கழக 'பத்துமலை கிளை' மாணவர்களால் படைக்கப் பெற்றது.

மலேசியத் தமிழ்நெறிக் கழகத்தின் தேசியத் தலைவர் திருமிகு. இராதிருமாவளவன் அவர்கள் எழுச்சியுரையாற்றினார். பண்டைத் தமிழரின் மாவீரர் நிகழ்வுகளை குறிக்கும் புறநானூற்றை மேற்கோள்காட்டினார். தமிழன் வாழும் நாடுகளில் எல்லாம் நாடோடியாக, கூலியாக வாழ்ந்து வந்தான். தன் தாய் மொழியை அவனால் நிலை நிறுத்த முடியவில்லை. அஞ்சி, அஞ்சி வாழ்ந்தான். அடிமையாக வாழ்ந்தான். இவனே இவனுள்ளத்தில் பூட்டிக்கொண்ட அடிமை மனப்பான்மையை



உடைத்தெறிவதற்கு எந்த தமிழனும் இல்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழனின் அடிமை விலங்கொடிக்க, ஒரு தமிழன் மானமிக்க தமிழீழ மண்ணில் பிறப்பெடுத்திருக்கிறான். பெற்ற கரிய தலைமகன், தனிப்பெரும் தலைவன் வழிகாட்டலில் தமிழீழம் நிமிர்ந்து நிற்கிறது. குனிந்த தமிழன் இன்று நிமிர்ந்துபார்கிறான். அந்த வரலாற்றுப் பெருமை உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற ஒரே தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்களையே சாரும். தமிழீழ விடுதலைப் போர் மூலம் உலகத் தமிழர்கே விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோல் சொல்லப் பயன்படும் கீழ்.**

என்கிறார் வள்ளுவப் பேராசான். எல்லோராலும் எடுத்துக் காட்டாக காட்டப்பெற்று, வாழ்வுக்கு வழிகாட்டியாக கொள்ளப் பெறுபவர் சான்றோர். பலராலும் அவர் சொல்லப்படுவர்.

எனவேதான், உலகம் முழுமையும் வாழும் தமிழர்க்கு நம்பிக்கை ஒளி தருகின்ற மாவீரர்களே சொல்லப் பயன்படுவர் எனக் குறிப்பிட்டார்.





தொடர்ந்து சிறு உரை நிகழ்த்தினார் மலேசியத் தேசிய பல்கலைக்கழக பேராசிரியர் டக்மர் இராஜநாயகம் அவர்கள். இறுதியாக பொறுப்புரையாற்றினார் உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் கிள்ளான் பொறுப்பாளர் திரு.மு.கோவிந்தராசு அவர்கள். அவர் இக்கால சூழல் பற்றியும், ஈழத்தமிழருக்கு நாம் உதவவேண்டிய கடமைதனையும் விளக்கினார். மேலும், நிவாரண நிதியத்தின் புதிய வெளியீடுகள் பற்றிய விளக்கமும் அளித்தார்.

அதோடு வந்திருந்தவர்கள் தங்களின் மேலான பங்களிப்பினை அள்ளி வழங்கினார்கள். கடந்தாண்டைவிட வந்திருந்தோர் தங்களின் பங்களிப்பினை அள்ளி வழங்கியது, தமிழீழ விடுதலையில் மலேசியத் தமிழர் பங்கும் உண்டு என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது.

— குன்றன்

# இத்தாலியில் மாவீரர்நாள் 2000

கடந்த 03.12.00 ஞாயிற்றுக்கிழமை இத்தாலி பலெர்மோ மாநகரில் Ranchbile (Donbosco) றங்கீபிலே (டொன் பொஸ்கோ) அரங்கில் மாலை 5.00 மணிக்கு




மண்ணை நினைத்து மரணத்தை அரவணைத்துக்கொண்ட தமிழீழத் தேசிய மாவீரர்நாள் நிகழ்வுகள் நடைபெற்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழீழ மக்களும் நூற்றுக்கும் மேற்பட்ட இத்தாலி மக்களும் கலந்துகொண்டிருந்த வேளையில்,

21.11.1986 ஒட்டிசுட்டான் சிறீலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரன் லெப்ரினன்ட் கனேஸ்,

27.11.1989 பளையில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவை தழுவிக்கொண்ட மாவீரன் லெப்ரினன்ட் தினேஸ்,

26.06.1999 பள்ளமடு சிறீலங்கா இராணுவத்தின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் தேன்மொழி

ஆகிய மூவரின் அன்புச் சகோதரியும் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளரின் மகளும், மாவீரர்களின் ஈகைக்



சுடரை ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மாவீரர்களுக்கு ஈகைச்சுடரை ஏற்றி வைத்தனர். அவ்வேளை தமிழீழ மாவீரர் துயிலுமில்ல நிகழ்வு வெண்திரையில் காண்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசிய கொடியேற்றல் நிகழ்வு நடைபெற்றது. தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப்புலிகளின் இத்தாலிப் பணியக பிரதிநிதி ஏற்றி வைத்தார். தொடர்ந்து உயிர் நீத்த தமிழீழ தேச மக்களுக்கும் அமைதியான அகவணக்கமும்; மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மாவீரர் நினைவு சுமந்த கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. மாலதி கலைப்பள்ளி மாணவிகளும், கத்தானியா மாநிலத்தைச் சேர்ந்த தமிழ்ச் சங்க மாணவியர்களும், பலெர்மோ கலைபண்பாட்டுக்கழக நடனக் கலைஞரும் விடுதலை நடனத்தை வழங்கினர். தொடர்ந்து மாவீரர்நாள் நினைவுரையை கத்தானியா மாநிலத்தைச் சேர்ந்த மாணவ மாணவியரும் பலெர்மோ திலீபன் தமிழ் பாடசாலை மாணவியும் வழங்கியிருந்தனர்.

தமிழீழத்தில் வன்னி மண்ணில் எம் தமிழ் உறவுகள் படும் இன்னல்களையும் துயரங்களையும் உறுதிமிக்க தலைவன் வழியில், எம் மக்கள் தவிடு பொடியாக்கி இலட்சிய உறுதியுடன் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளை; புலம்பெயர் மண்ணில் வாழும் எம்மவர்கள் தாயகத்து வீரர்களின் கரங்களைப் பலப்படுத்துமாறு கத்தானியா தமிழ் சங்க சகோதரி ஆரியதாஸ் சறோஜினி தேவி அவர்கள் தனது உரை மூலம் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இத்தாலி பணியக நிதிப் பொறுப்பாளர் எழுச்சி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து 20.11.1999 அன்று கத்தோலிக்க புனித தேவாலயமான மடுத் திருப்பதி மீது சிங்கள இனவெறி அரசு குண்டுகளைப் போட்டு ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவி பொதுமக்கள் குழந்தைகள் கொல்லப்பட்ட உண்மை நிகழ்வு வெண்திரையில் காண்பிக்கப்பட்டது. இத்தாலி மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் பல்கலைக்கழக இத்தாலிய மாணவி செல்வி கிளாவுடியா இத்தாலிய மொழியில் வழங்கினார்.

தமிழீழத்தின் தற்போதைய நிகழ்வினையும் சிங்கள அரசின் தொடர்ச்சியான இன அழிப்பு நடவடிக்கையைப் பற்றி இத்தாலி மொழியில் செல்வி த. ஜனனி அவர்கள் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து திரு.லடிஸ்லாஸ் அன்ரனி சேகரின் நெறியாள்கையில் கலைபண்பாட்டுக்கழக கலைஞர்கள் வழங்கிய 'மண்பற்று' நாடகமும் கலைபண்பாட்டுக்கழக கலைஞர்கள் வழங்கிய 'மாவீரர் நினைவு கானங்களும் இடம்பெற்றன. நிகழ்ச்சித் தொகுப்பினை செல்வன் கேதீஸ்வரன் அவர்கள் தொகுத்து வழங்கினார். மேடை அலங்காரத்தை செல்வன் பிறைனர், கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் மாவீரர் துயிலுமில்ல நினைவு இல்லத்தை 'வரைவினால்' வடிவமைத்திருந்தார். இறுதியாக 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்...' என்ற பாடலுடன் தமிழீழத் தேசியக் கொடியிறக்கலுடன் மாவீரர் நினைவு சுமந்த 2000 ஆண்டு நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன.

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் –

(டிகோல் தொடர் - 27)

கருத்து வேற்றுமை, எப்போது இந்த நடவடிக்கையை எடுப்பது என்பதில் மட்டும் அல்ல, எப்படி இந்த நடவடிக்கையை எடுப்பது என்பதிலும் இருந்தது.

டிகோல் கருத்து வேற்றுமைகளைப் பெரிதாக்க விரும்பில்லை. இன்றைய நிலையில், டக்காரை, ட்சாத், கமரூன், உபாங்கி, கொங்கோ போன்று சுதந்திர பிரான்சு மட்டும் பிடிக்க முடியுமா என்றால், முடியாது.

டக்கார் முக்கியமான இடம். பிரஞ்சு மேற்கு ஆஃப்ரிக்காவின் தலைநகர். துறைமுகம் பிரஞ்சுக் கடற்படையால் பாதுகாக்கப்படுகிறது. டக்கார் நகரத்தில் பிரஞ்சு இராணுவம் பலமாக நிற்கிறது.



இதனைப் பிடிக்க, இங்கிலாந்தின் உதவி அவசியம். இங்கிலாந்தே முன்வந்து, உதவுகிறோம் என்கிறது. இந்த உதவியை, உடனே ஏற்றுக்கொள்ள வேண்டியது தான் என்று டிகோல் முடிவெடுத்தார்.

சுதந்திர பிரான்சு தரப்பில் 3 சிறு இராணுவக் கப்பல்களும், 4 சாமான் ஏற்றும் கப்பல்களும் 2000 வீரர்களுடன் டக்காரைப் பிடிக்கக் கிளம்பின.

டக்கார் பயணத்துக்குத் தயார் ஆன போது, ஒவ்வொரு இரவும், நூற்றுக் கணக்கான ஜெர்மன் விமானங்கள் லண்டன் மீது குண்டு மழை பொழிந்தன. பல கட்டிடங்கள் அழிந்தன. மறுநாள் காலை, பிரதமரும், மன்னரும், இடிந்துவிழுந்த கட்டிடங்கள் மத்தியில் நின்றனர். மக்களிடம் 'எதிரி குண்டு வீசட்டும்- நம்மை அழிக்க முயற்சிக்கட்டும்- முடிவான வெற்றி நமக்குத் தான்' என்று கர்ஜித்தார் பிரதமர்.

31-08-1940தில், டிகோல் ஆலந்து நாட்டின் Westerland கப்பலில், ஆங்கில ஜெனரல் Spears உடன் டக்கார் புறப்பட்டார். லிவர்பூல் துறைமுகத்தில் இருந்து பிரஞ்சுக் கப்பல்களும், பிரஞ்சு வீரர்களும் டக்காருக்குள் கிளம்பினர்.

13-9தில், டக்காருக்கு அருகே, சியரோ லியோனின் Frectown னை இவர்கள் அடைந்தனர்.

அப்போது, ஒரு கெட்ட செய்தி இவர்களுக்குக் கிடைத்தது. செப்டம்பர் ஆரம்பத்தில், மத்திய தரைக் கடலில் Toulon துறைமுகத்தில் இருந்து 6 பிரஞ்சுப் போர்க்கப்பல்கள் கிளம்பி, இங்கிலாந்துக்குச் சொந்தமான ஜிப்ரால்டார் வழியே தெற்கு நோக்கி, டக்காருக்குச் செல்வதாகத் தெரிந்தது. 6 புதிய கப்பல்கள் வந்திருக்கும் நேரத்தில், டக்கார் நகர இராணுவத் தலைவர்கள் விட்டுக்கொடுப்பார்களா?

இந்தப் புதிய சூழ்நிலையில், டக்காரைக் கைப்பற்றும் எண்ணத்தைக் கைவிட்டுவிடவேண்டும் என்று ஆங்கிலேய அமைச்சரவை முடிவெடுத்து அறிவித்தது.

முடிந்தவரை, இந்தமுறை டிகோல் இந்த முடிவை ஏற்க மறுத்தார். இவ்வளவு தூரம் வந்தாயிற்று. முயற்சி செய்வோம். இப்போது முயற்சியைக் கைவிடமுடியாது.

ஆங்கில அமைச்சரவை இறங்கிவந்தது. 'சரி, முயற்சியைத் தொடருங்கள்' என்று கூறப்பட்டது.

23-09 தில் டிகோலும் அவரது குழுவினரும் டக்கார் அருகே வந்து சேர்ந்தனர். எதுவுமே திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

காலை 6 மணிக்கு, டக்கார் அருகில் உள்ள உவாக்கம் விமானநிலையத்தில், இரு சிறு பிரஞ்சு விமானங்கள், சுதந்திர பிரான்சின் அதிகாரிகளையும், துணை அதிகாரிகளையும் இறக்கிவிட்டன. அவர்கள் அந்த விமான நிலையம் முழுதையும் பிடித்துவிட வேண்டும் என்பது அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை. அவர்கள் தரை இறங்கியதும், மார்ஷலுக்கு ஆதரவாளர்கள் அவர்களைக் கைது செய்தனர். விமான நிலையம் சுதந்திர பிரான்சு கரங்களில் விழவில்லை. காலை 7 1/2 மணிக்கு, வானொலி மூலம், டிகோல், டக்கார் மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் தன்னுடன் வந்து இணைந்து போரைத் தொடர வேண்டும் என்று உரையாற்றினார். இரு வேகமான சிறு கப்பல்கள், சுதந்திர பிரான்சைக் குறிக்கும் லொரெய்ன் கொடி பொறித்த பெரிய பிரஞ்சுக் கொடிகளுடனும், இருவெள்ளைக் கொடிகளுடனும் டக்கார் துறைமுகத்தை அடைந்தன. டிகோலின் நம்பிக்கைக்குரிய டர்ழான்லியு இக்கப்பல்களில் வந்து இறங்கினார். எதிர்கொண்ட அதிகாரியிடம், வந்த நோக்கத்தை தெரிவித்தார். அதிகாரி, விவரத்தை அவரது மேல் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

மேல் அதிகாரி, டர்ழான் லியுவைக் கைது செய்யக் கட்டளை இட்டார். விவரம் தெரிந்ததும், டர்ழான்லியுவும், அவரது குழுவினரும் அவசர- அவசரமாகத் திரும்ப முயற்சித்தனர். எதிர்த்தரப்பினர் சுட்டனர் - டர்ழான்லியு காயமடைந்தார். அதேசமயம், தரை மூலம், ஒரு குழுவினருடன் டக்கார் சேர்ந்த முதல் அதிகாரி புவாலாம் பேர், மக்களை மார்ஷல் ஆட்சிக்கெதிராக ஒன்று சேர்ந்த நேரத்தில் கைது செய்யப்பட்டார்.

இந்த முதல் தோல்வியைத் தொடர்ந்து, டிகோல் வானொலி மூலம் 2வது முறை பேசினார். அதற்கடுத்து மீண்டும் இருவேகமான சிறு கப்பல்களைத் துறைமுகத்துக்கு அனுப்பி வைத்தார். பேச்சுவார்த்தை நடத்த. இந்த முறை, இந்தக் கப்பல்கள் துறைமுகத்தை நெருங்கிய போது, எதிர்த் தரப்பினர், கப்பல்களை நோக்கி, பீரங்கிகளால் சுட்டனர். பிறகு, துறைமுகத்தில் தங்கி இருந்த பிரஞ்சு போர்க் கப்பல்கள் கடலுக்குள் நுழைந்தன- கண்ட ஆங்கிலக் கப்பல்களைத் தூரப் போகும்படி ஆணையிட்டு, விரட்டின.

இந்தச் சமயத்திலும், நம்பிக்கை இழக்காத டிகோல், துறைமுகத்தைவிட்டு விட்டு, டக்காருக்கு வடக்கே, 20 கி.மீ. தூரத்தில் இறங்கி, முன்னேறிச் சென்று, நகரைக் கைப்பற்றலாம் என்று திட்டமிட்டார். கடலில் உருவான கடுமையான மூடு பனியால் எதையுமே திட்டமிட்டபடி செய்ய இயலாது போயிற்று. திட்டமிட்டபடியே, மாலையில், டக்காருக்கு வடக்கே தரை இறங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அங்கும் சொல்லி வைத்தாற்போல, மார்ஷலின் அணியினர் இவர்களுக்காகக் காத்திருந்தனர். 7 சுதந்திர பிரான்சு வீரர்கள் கொல்லப்பட்டனர்.

உடனே, டிகோல் டக்காரைப் பிடிக்கும் திட்டத்தைக் கைவிட்டார். இரத்தம் சிந்தாமல், அவர் டக்காரைப் பிடிக்கவிருப்பினார். இரத்தம் சிந்திவிட்டது. மேலும், மேலும் பிரஞ்சுக் காரர்களே பிரஞ்சுக் காரர்களைக் கொல்லும் நிலையைத் தொடர அவர்விரும்பவில்லை.

பிரஞ்சு மேற்கு ஆஃப்ரிக்கா இப்போதைக்கு, டிகோல் அணிக்கு வந்து சேராது. இந்தத் தோல்வி டிகோலை மிகவும் பாதித்தது. அவர் சிந்தித்தார். 'நான் எனக்காகவா போரைத் தொடருகிறேன்? பிரான்சின் மானத்துக்காக, பெருமைக்காக, உயர்வுக்காகப் போராடுகிறேன்- என்னை எதிர்ப்பவர்கள் யார்? இவர்களும் பிரஞ்சுக்காரர்கள் தானே. இவர்களுக்கு ஏன் என்னைப்போன்று தன்மான உணர்வு இல்லை? ஏன், எதிரிக்கு அடிமையாகி விட்டவர்கள் பக்கம் இவர்கள் எல்லாம் நிற்கவேண்டும்? டக்கார் துறைமுகத்தில் நிற்கும் பிரஞ்சுக் கப்பல்களும், எம்மீது சுட்ட பீரங்கிகளும் பிரஞ்சு மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்டவை. அந்தக் கப்பல்களும், அந்த ஆயுதங்களும் எதிரிக்கு எதிராக அன்றோ பயன்படுத்தப்பட வேண்டும்? எனக்கும் எனது நண்பர்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படுகிறதே. நாட்டின் மானத்தைக் காப்பாற்றப் போராடும் என் பக்கம் சில ஆயிரம் போர் வீரர்கள். நாட்டை அடிமை ஆக்கியவர்கள் பக்கம் பல்லாயிரம் பல்லாயிரம், பல இலட்சம் போர் வீரர்கள். நாட்டின் பழம் பெருமையைக் காப்பாற்றப் புறப்பட்ட என்பக்கம் ஆயுதங்கள் இல்லை, அல்லது குறைவு. எதிரிக்கு நாட்டை விற்றவர்களிடம் நவீன ஆயுதங்கள்.

என்னை எதிர்க்கும் இந்த பிரஞ்சுக்காரர்களும், இந்த ஆயுதங்களும் என்னிடம் இருந்தால், எதிரியை அழிக்க நினைக்கும் எனது வேலை எவ்வளவு எளிதாகும்! 'என்றெல்லாம் எண்ணி நொந்து கொண்டார்.

அவரது துணைவியாருக்கு எழுதிய மடலில், 'இந்தத் தோல்விக்கான முழு பொறுப்பும் நான் தான் என்று பிரச்சாரம் செய்யப்படும். அடுத்த சில மாதங்கள் எனக்குச் சோதனை நிறைந்த மாதங்களாக இருக்கும்' என்று எழுதினார்.

அவர் எதிர்பார்த்தபடியே, ஆங்கில-அமெரிக்கச் செய்தித்தாள்கள், இத்தோல்விக்கு டிகோலைப் பொறுப்பு ஆக்கியதுடன், அவருக்கு எதிர்காலமே இல்லை என்றும், அவர் இடத்தில் வேறொரு ஜெனரலையோ, வேறொரு அட்மிரலையோ நியமிக்க வேண்டும் என்றும் எழுதின.

டக்காரைக் கைப்பற்றும் முயற்சி, ஆங்கிலேயர்களின் தவறால், ஒழுங்காகத் திட்டமிடப்படவில்லை. வெளிநாடு ஒன்றைத் தாக்க, பிரஞ்சு- ஆங்கிலக் கடற்படைகள் தயாராவதை இரகசியமாக வைத்துக் கொள்ள இங்கிலாந்து தவறிவிட்டது.

சரித்திர உண்மை இவ்வாறு இருக்க, சுதந்திர பிரான்சால் இரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாது என்று தவறுதலாக முடிவுசெய்து, 1942 இன் முக்கிய இராணுவ நடவடிக்கை ஒன்றின்போதும், 1944 இன் மிக முக்கியமான இராணுவ நடவடிக்கை ஒன்றின் போதும் ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும், ஜெனரல் டிகோலிடம் முன்கூட்டியே ஒன்றும் தெரிவிக்கமாட்டார்கள்.

(தொடரும்)

# கவிக்களம்

## நினைவுகளில் வாழும் கிட்டு



அன்று
எங்கள் காதுகளை
தாக்கியது
ஒரு இடி...!

செய்வதேதென அறியாது
ஒரு கணம்
அசைவற்றுப்
போனதெங்கள்
தமிழ்க்குடி...!

இந்துப் பெருங்கடலில்
எந்தன் தோழரை
சிறையிட
எத்தனைநாள் காத்திருந்தாய்
புதுடெல்லியே?

சிந்திய குருதியில்
நீலக்கடல் சிவக்கவே
ஒருபாதகம்
எவன் சொல்லி....?

வருவாய் வருவாய் என
அன்புத்தலைவன்
காத்திருந்தான் கண்கள்
சிவக்க.

வீரர்கள்
சாவடைந்த
செய்திகேட்டு
வாடிப்போனார் உள்ளம்
கனக்க

பகலிரவாய்
காட்டிலும் மேட்டிலும்
காலிழந்தும்
தமிழன் விடிவிற்காய்
உழைத்தவன்
கேணல் கிட்டு.

பல்லாயிரம்
வீச்சுள்ள வீரரை
பாசறையில் உருவாக்கி
எங்கே
போனாயோ
எமை விட்டு....

தலைவன் சொல்லே
வேதம் என்று
அன்னைமடியை
தவழ்ந்த மண்ணை
அன்பான காதலியை பிரிந்து
உலகெல்லாம் ஓடிச்சென்று
பணிபுரிந்தான்...!

பணிமுடிய
தலைவன் முகம்காண
களம்தேடி ஓடி வந்தான்.

காத்திருந்த
கழுக்கு கூட்டங்கள்
கைது செய்ய வந்தவேளை
கடலோடு வெடித்து
தமிழன் வீரத்தை
நிலை நாட்டினான்.

வரிப்புலிகள்
சாவுக்கு
அஞ்சுவதில்லையென
வெளிக்காட்டினான்.

முன்னர்
யாழ்நகரெங்கும்
கவசமாய்
காவல் நின்றான்.

எமை
கொல்லவந்த சிங்களத்தின்
பெரும்
பகையை வென்றான்

இப்போ
நீ இன்றி வாடுகின்றோம்.

வீரனே
உன் நினைவுகளும்
நிமிர்ந்த நின் நடையும்
வீரம் தெறிக்கும் பேச்சும்
எம்மில்
என்றும் வாழும்.

– மட்டுவில் ஞானகுமாரன்



# காலம் ஆகி வந்த கதை

அது ஒரு அருமையான அழகான பருவம். ஊரெல்லாம் அழகு பூத்துக் குலுங்கியது. வெய்யில் சுட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை. 'தொப்பிபோட்டுக் கொண்டு போ' என்று அம்மா கத்துவார். செருப்பு போட்டுக்கொண்டு கூடப் போவதில்லை. போட்டுக்கொண்டு போன நாட்களும் இருந்தனதான். ஆனால் அது எப்படியோ தொலைந்து போகிறது. செருப்பும்தான். நாட்களும்தான். ஒற்றைச் செருப்பு மாத்திரம் தொலைகியது. 'லஞ்சு'க்கு வகுப்பில் செருப்பைக் கழட்டிவிட்டு பந்தடிக்கப்போனால், பிறகு வந்து பார்க்கிறபோது ஒரு செருப்பு மாத்திரம் காணாமல் போய்விடுகிறது. என்ன மாயமோ தெரியவில்லை. நாய் செருப்பைச் சப்பியதாக நான் அறியேன். ஒரு செருப்பு தொலைவதன் விசித்திரமும் புரியவில்லை. தொலையாத மற்றைய செருப்பை ஒளித்து வீட்டிற்குக்கொண்டு வந்து வளவுக்குள் எறிந்துவிடுவேன். அடுத்த நாள் காலையில் செருப்பைக் காணவில்லை என்று அம்மாவுடன் தேடுவேன். அந்த ஒற்றைச் செருப்பை நான் காணாத மாதிரிக்கு அம்மாவைக் காணவைத்துவிடுவேன். அம்மா கண்டெடுத்த ஒரு செருப்பை வைத்து மற்றைய செருப்பை நாய்கொண்டுபோய்விட்டதாக நாயைத்திட்டுவார். கூடவே எனக்கும் ஒரு வரித்திட்டு விழும். 'பள்ளிக்கூடத்தாலை வந்தால் செருப்பை உள்ள வைக்கிறதுக்கு ஏன் வெளியாலை வைப்பான்?' பிறகு நாய்க்கு ஒரு எச்சரிக்கை. 'உனக்கு இண்டைக்கு மத்தியானம் சாப்பாடில்லை'

அப்பிடிச் சொன்ன அம்மா நாய்க்குச் சாப்பாடு கொடுக்காமல் விடமாட்டா. பஞ்ச காலத்திலும் எங்கள் வீட்டு நாய் கொழுத்திருந்தது.

தொடங்கியது எங்கேயோ. இப்படித்தான் சுற்றிச் சுழன்று வேறெங்கேயோ போகின்றது. கதையும் அப்படித்தான். காலங்களும் அப்படித்தான்.

அப்ப அந்த நாட்களில் பள்ளிக்கூடம் என்றால் ஒரே கள்ளம். என்ன சாட்டுக்கள் சொல்லி பள்ளிக்கூடம் போகாமல் நிற்கலாம் என்று காலை எழுந்தவுடன் யோசனை தொடும். அம்மாள் கோயில் திருவிழா நாட்களில் வேறொரு சாட்டும் தேவையில்லை. திருவிழா ஒன்றே போதும். மற்றைய நாட்களில் கொஞ்சம் கஷ்டம்தான். கலியாண வீடு வந்தால், நாலு நாட்களுக்கு சாட்டு இருக்கும். செத்த வீடு வந்தால் அந்திரட்டி வரைக்கும் ஒரு மாதிரி சமாளிக்கலாம். அதுவும் இல்லையென்றால் பள்ளிக்கூடம் போயே தீரவேண்டும்- பெனடிக் வாத்தியிட்டை அடிவாங்கியே தீரவேண்டும். மோட்டசைக்கிளில வருகிற பெனடிக் வாத்தி றோட்டுக்கரையில் இருக்கிற வெள்ளை வாய்க்காலில் விழவேண்டும் என்று இறைவனை வேண்டி இருக்கிறோம். பள்ளிக்கூடம் வந்தவுடன் முதலில் பார்ப்பது பெனடிக் வாத்தி வந்திட்டுதோ எண்டதுதான். வந்திருந்தால் அடையாளமாக மோட்டசைக்கிள் நிற்கும். மோட்டசைக்கிள் நம்பரும்கூட நல்ல பாடம். 1 சிறீ 4628.

மழைக்காலமென்றால் கள்ளம் படுத்த கொஞ்சக் காரணம் கிடைக்கும். அநேகமாகக் காலையில் மழை பெய்துவிடும். மழை பெய்கிற மாதிரி இருந்தாலே போதும். அன்று பெனடிக் வாத்தியை யோசித்து மனதுள் சிரித்துவிடுவேன்.

'இண்டைக்கு ஆருக்கு அடிக்கப்போறார்?'

மழை நாட்களில் ஏமாற்றத்துக்கு ஆளான தருணங்களும் இருக்கின்றன. 'அது மழை வராது' என்று சொல்லி அப்பா எப்படியும் என்னை அனுப்பி விடுவார். அப்பா பள்ளிக் கூடத்துக்குப் படிப்பிக்கப் போய்விட்டிருப்பார் என்று ஊகித்த நேரத்தில் வீடு திரும்புவேன்,

அம்மா வாசலில் நின்று திட்டுவார். 'இப்ப ஏன் திரும்பி வாறாய்?'

'கூத்தஞ்சீமாவடியிலை நல்ல மழை. அது தான் பள்ளிக்கூடம் போகையில்லை'.

'நீ நனையக் காணேல்லை' எனக்கு உடனை சாட்டுச்சொல்ல முடியேல்லை.' தூறிச்சுது நான் ஒதுங்கீட்டன்'

'தூறல் முடிய பள்ளிக்கூடம் போயிருக்கலாமே?'

என்னிடம் மறுமொழி இல்லை. அடுத்த முறைக்கு நான் கவனமாக இருந்துகொண்டேன்.

அந்த நாட்களில் ஒரு நாள் பள்ளிக்கூடம் போகிறபோது மழை தூறியது. பிறகு மழை நின்றுவிட்டது. என்னுடன் வந்த சிவம் பள்ளிக்கூடம் போகப்போகிறேன் என்றான். எனக்கு வீட்டை திரும்புவதுதான் யோசினை. சிவத்தை பள்ளிக்கூடம் போகவிட்டு, திரும்பினேன். புத்தகப்பையைக் கவனமாக ஓரிடத்தே வைத்துவிட்டு றோட்டில் தேங்கிக்கிடந்த வெள்ளத்தை அள்ளி, தலையையும் உடுப்பையும் நல்லாய் நனைத்தேன். புத்தகப்பையையும் கொஞ்சமாய் அம்மாவிடம் சொன்னேன் 'ஐயற்றை கிணத்தடியிலை போகேக்க சரியான மழை'

நம்புவதைத்தவிர அம்மாவிற்கு வேற வழி இருக்கவில்லை. 'தடிமன் பிடிக்கப்போகுது போய்த் தலையைத் துடை'

அப்ப பிடித்த தடிமன் அந்த மழைக்காலம் முழுக்க போகவில்லை. இப்படித்தான் செய்த திருகுதாளம் அநேகம். இப்படித்திருகுதாளம் செய்யத் தேவையில்லாத படி ஒருநாள் வந்தது.

அன்று எப்படியும் பள்ளிக்கூடம் போகவேண்டும். அப்பாவின் கண்டிப்பான உத்தரவு அது. எனக்கோவென்றால் போகவே முடியாது. நித்திரை தூக்கி அடிக்குது.

முதனாள் கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் பூங்காவனம். 'போகவேண்டாம்' என்று அப்பா சொன்னார். 'போவேன்' என்று நான் ஒற்றைக்காலில் நின்றேன்.' போனால் நீ நாளைக்குப் பள்ளிக்கூடம் போகமாட்டாய் நித்திரை தூங்குது என்று நிப்பாய்'

'இல்லை, நான் பள்ளிக்கூடம் போவன்'

'நாளைக்குப் பள்ளிக் கூடத்திற்கு போவாய் எண்டால் பூங்காவனத்துக்குப் போ'

எனக்கு அப்போது நாளைக்குப் பள்ளிக்கூடம் போகலாம்போல்தான் இருந்தது. எல்லோருக்கும் பூங்காவனத்திற்கு வருவேன் என்றும் சொல்லி விட்டேன். இருபத்தஞ்சு சதம் சேகரித்தும் வைத்திருக்கிறேன்.

பூங்காவனத்துக்கு நான் போனேன். மேளச்சமா பார்த்தேன். கோஷ்டி கானம் கேட்டேன். சிகரம், சப்பறம், வண்ணச்சோடினைகள் பார்த்தேன். வெடி கொளுத்திப் போட்டார்கள். வாணம்விட்டார்கள். காய், பழம், பிஞ்சுகள், இலை, தழை, குழைகள் இவற்றினிடையே பிள்ளையார் அழகுற வீற்றிருந்தார்.

பூங்காவனம் முடிந்து, சூரியன் பனைகளின் மேலால் ஏறத்தொடங்கிய நேரம், வீட்டை போகும் நினைப்பு வந்தது. வீட்டைபோய் பள்ளிக்கூடம் போக வேண்டிய நினைப்பு வந்தது. அப்போதுதான் அந்த நினைப்புடன் தான் நித்திரைத் தூக்கம் வரத்தொடங்கியது.

பள்ளிக்கூடம் எப்படியும் போகவேணும், அப்பா விடமாட்டார். பள்ளிக்கூடம் போனால் பெனடிக் வாத்தியிட்டை 'நெவிள்'பறக்க அடி வாங்கவேணும். வீட்டுவேலை செய்யவில்லை. மற்றது நித்திரை தூங்கியபடி இருப்பேன். ஒன்றுமாக விளங்கவில்லை. பெரும் இக்கட்டில் மாட்டிக்கொண்டேன். வீட்டைபோனேன். முகம் கழுவினேன். வெளிக்கிட்டேன். சாப்பிட்டேன். ஒன்றும் பறையாமல் புத்தகப்பையையும் தூக்கிக்கொண்டு பள்ளிக்கூடம் போனேன். போகிறபோது சாடையாக அழுகை வந்தது 'இறைவன் ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறார்?'

சடாரென யோசினை வந்தது. இப்படியே சுடலை மடத்திற்குப் போய் படுக்கலாம் என்று. அதிலும் ஒரு பயம்தான். மதியம் 12 மணிக்கு நித்திரையாய் இருக்கிறபோது பேய்களே என்னை எழுப்பிவிடலாம்.

நடக்கத் தொடங்கினேன். வீதி வழியெங்கும் இருபுறமும் விரிந்த பனைகள், அழகிய பனைகள், இளம்பருவத்து நுங்குகள் விழுந்திருக்கின்றன. ஒரு கண் ஈய்க்கப்பட்ட நுங்குகள், சோளகத்தின் மெல்லிய சலகலப்புக்கு பனைகள் ஆடுகின்றன. இவற்றையெல்லாம் ரசிக்கிறதாக அன்றைய காலை இருக்கவில்லை.

மடத்தடியிலை திடிரென்று ஆனந்தண்ணை என் முன்தோன்றினார்.

'உன்னை ஆர் பள்ளிக்கூடம் போகச் சொன்னது?

வீட்டைபோ' ஏசினார். 'வெளிக்கிட்டிட்டியள்' புறுபுறுத்தார். எதற்கு என்று கேட்கமுடியவில்லை. ஆனந்தண்ணை கடுங்கோபத்திலையிருந்தார். கண்கள் சிவந்திருந்தன.

பலர் பள்ளிக்கூடம் போகாமல் திரும்பி வாறது தெரிந்தது. கால்கள் வீட்டை நோக்கி திரும்பிவிட்டன. என்ன விசயம்? ஏன் பள்ளிக்கூடம் போகக்கூடாது?

ஆனந்தண்ணை பள்ளிக்கூடம் போகிற ஆக்களைக் கலைக்கிறதில் நின்றார். 'என்ன விசயம்? ஏன் பள்ளிக்கூடம் போகக்கூடாது?'

விசயம் தெரிந்தது. விபரீதமான விசயம். அப்போது அதனைப் புரியமுடியவில்லை. வீட்டைபோகலாம். படுக்கலாம். இதுதான் அப்போதைய தேவை. இது சந்தோசத்தைத் தந்தது.

ஆனால் அந்தச் செய்தியின் பின்னால் இருந்த, அந்தச்சாவின் பின்னால் இருந்த துயரம், விடுதலை வேட்கை பெருநெருப்பாய் கனன்றதை காலம் பிறகு பிறகு சொல்லிற்று.


'சிவகுமாரன் செத்துப்போனான்'
செய்தி இதுவே. யார் இந்தச் சிவகுமாரன்?
காற்றிலும் வலியன் நீ
கடலினும் பெரியன் நீ
சேற்றாகிச் சிதைந்த வாழ்வில்
சிறு அரும்பாகித் துளிர்த்தவன் நீ
நேற்றாகி இன்றாகி
நெடு நின்ற நாளாகி
ஊற்றாகி நின்றவன் நீ
உயிராகி நிறைந்தவன் நீ'
என்றாகி நின்றவன்.

அடுத்த நாள் - கண்ணீர் அஞ்சலி, சிவகுமாரன் என்று சிவகுமாரனின் படங்களுடன் போஸ்ரர்கள் ஒட்டப்பட்டன. நோட்டீசுகள் வீசப்பட்டன.

அன்றிலிருந்து அண்ணாக்கள் சிலரை போர்க்கோலத்தில் கண்டேன். இடுப்பில் கூரான கத்தியில்லை. சுழன்றெழுகின்ற வாளும் இல்லை. அம்பு,வில்லு, அம்பறாத்துணி அவையொன்றும் இல்லை. முறுக்கிய மீசை இல்லை. முன் கோபக்கண்கள் இல்லை. மிடுக்கான நடை, உருண்டு திரண்ட தோள்கள், கை கால்கள் அப்படியொன்றும் இல்லை. நிமிர்ந்த நடை, நேர் நின்ற பார்வை இவையொன்றும் கிடையா. நீண்டகுழல் கொண்டு குறிபார்த்துச் சுடும் துப்பாக்கி இது கூட இவர்களிடம் இல்லை என்றுதான் சொல்வேன். ஆயினும் அன்றிலிருந்து அண்ணாக்கள் சிலரைப் போர்க் கோலத்தில் கண்டேன்.


இரவி. அருணாசலம்.

# சாதனை நீட்டும் அவுஸ்திரேலிய தலைவர்



ஒரு காலத்தில் சாதனை படைத்துக்கொண்டிருந்த மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கட் அணியைப்போல் தற்போது உலகின் சாதனைகளை தன்வசப்படுத்திவரும் அணி அவுஸ்திரேலிய அணி என்பது மறுக்க முடியாது. அப்படிப்பட்ட சிறந்த அணியின் முதிர்ந்த அனுபவமான வீரன் என்பதைவிட அவ்வணியின் முழுமையாக செயற்பாட்டையே பின் நின்று இயக்குபவர் அணித்தலைவர் ஸ்ரிவ் வோவ். 1985/86 காலப்பகுதியில் அவுஸ்திரேலிய அணிக்கு பகுதிநேர மிதவேகப்பந்து வீச்சாளராகவும், சகலதுறை வீரனாகவும் இணைந்துகொண்ட இவர், காலப்போக்கில் தன் முழுத் திறமையையும் துடுப்பாட்டத்தில் காட்டி பிரகாசிக்க ஆரம்பித்தார். பல இக்கட்டான கட்டங்களில் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்காக பாடுபட்டார். இப்படிப்பட்ட ஸ்ரிவ் வோவ் 1997/98 காலப்பகுதியில் அணியின் ஒருநாள்போட்டிகளுக்கான தலைவராக நியமிக்கப்பட்டு அதில் கிடைத்த வெற்றிகளையும் அனுபவங்களையும் கொண்டு, 1999ம் ஆண்டிலிருந்து இதுவரை அவுஸ்திரேலியாவின் அசைக்க முடியாத அணித்தலைவராக தன்னை இனம் காட்டியுள்ளார். 1987, 1999 இருமுறை உலகக்கிண்ணம் பெற்ற அணிகளிலும் ஆடிய பெருமைக்குரியவர். தொடர்ச்சியாக 15 டெஸ்ட்போட்டிகளை வெற்றிகொண்டு சாதனை படைத்த அணியின் பிரதான தளபதியாகவும் இவர் விளங்குகின்றார். இவரே இன்றைய கங்காரு தேசத்தின் கனவு நாயகன். கடந்த 11.01.2001 மெல்பேர்ன் நகரில் நடைபெற்ற 'ஹால்டன் தொடர்' ஒருநாள் போட்டியில் மேற்கிந்திய தீவுகளுக்கெதிராக ஆடியதில் புதிய சாதனையை உருவாக்கியுள்ளார். அதாவது அவுஸ்திரேலிய வீரர்களில் முதல் முதலாக 300 ஆவது ஒருநாள் பந்தயத்தை ஆடியவராகவும் மாறியுள்ளார். இப்போது உலகில் மூன்றாவது நபராக இவர். இதற்கு முன் வசிம் அகர்ம், அசாருதீன் 300 போட்டிகளை தாண்டியுள்ளனர்.

# இங்கிலாந்தை தோற்கடித்த தமிழக வீரன்



இந்திய கிரிக்கட் வளர்ச்சியில் தமிழக வீரர்களின் பங்கு குறிப்பிடத்தக்க வகையில் இருந்து வருகின்றது. வெங்கட்ராகவன், கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந், லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் போன்ற பிரபலங்கள் வரிசையில் தற்போது சடகோபன் ரமேஸ், றொபின்சிங், பதானி, சிறிராம், குமரன் போன்றோர் தமிழகத்தின் சார்பில் இடம்பிடிக்கின்றனர். அடுத்து வரவிருக்கும் வீரர்கள் வரிசையில் தன்னையும் அடையாளம் காட்டியுள்ளார் வியூத் சிவராமகிருஷ்ணேன் என்கின்ற இடதுகை சுழல்பந்து வீச்சாளர்.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருக்கும் 19 வயதுக்குட்பட்டோர் இங்கிலாந்து அணியை 12.01.2001 அன்று மும்பாயில் தோற்கடித்தது 19 வயதுக்குட்பட்டோர் இந்திய அணி. இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர் வியூத் சிவராமகிருஷ்ணன். இவர் இப்போட்டியில் 12 விக்கட்டுக்களை வாரிப்போட்டுக்கொண்டு இங்கிலாந்தை ஆட்டம் காண வைத்தார்.

முதலில் துடுப்பாடிய இந்திய அணி 257 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்காடிய இங்கிலாந்தும் சளைக்காது 285 ஓட்டங்களைப் பெற்றது. வியூத் 4 விக்கட்டுக்களை கைப்பற்றினார். அடுத்து இரண்டாவது இனிங்சில் இந்தியா 378 ஓட்டங்களைப் பெற்றது. 351 ஓட்டங்களைப் பெறுவதற்கு ஆடிய இங்கிலாந்தை 183 ஓட்டங்களுடன் ஓரம் கட்டி வியூத் 8 விக்கட்டுக்களை வீழ்த்தினார். இந்திய அணியில் ஆடிய ஒரேயொரு தமிழகவீரன் வியூத் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அகஸ்ரி, கிங்கிஸ் வெற்றி

அவுஸ்திரேலிய ஓப்பன் டெனிஸ் போட்டிகள் ஆரம்பிக்க முன் நடைபெற்ற ஒத்திகை போட்டிகளான சிறு போட்டிகளில் அகஸ்ரி, கிங்கிஸ் பிரகாசித்துள்ளனர்.





கடந்த சனிக்கிழமை மெல்பேர்ன் நகரில் முடிவுற்ற 'காலனியஸ் கிளாசிக்' போட்டியின் இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் முன்னணி வீரன் அகஸ்ரி வெற்றிபெற்றார். இவர் ரஷ்சியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக விள்ங்கும் ஹல்னிகோவை 6:3, 3:6, 6:3 என்று தோற்கடித்துள்ளார்.

இதேதினம் சிட்னி நகரில் நடைபெற்ற பெண்களுக்கான, 'சிட்னி சர்வதேச டெனிஸ்' போட்டி இறுதியாட்டத்தில் மாட்டீனா கிங்கிஸ் கடும் சோதனையை சந்தித்து கோப்பையை வென்றார். உலகின் முதல்தர வீராங்கனையான சுவிசைச் சேர்ந்த மாட்டீனா கிங்கிஸ் 2ம் தரத்தை பிடித்திருக்கும் அமெரிக்கரான டவன் போட்டை எதிர்த்து கடுமையாக போராட வேண்டியிருந்தது. முடிவில் கிங்கிஸ் 6:3, 4:6, 7:5 என வென்றுள்ளார்.

இவ்வெற்றிகள் மூலம் அகஸ்ரி, கிங்கிஸ் உற்சாகத்துடன் அவுஸ்திரேலிய ஓப்பனை எதிர்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

# ஓட்டப்பந்தய வீரன் ஜோன்சன் ஓய்வுக்கு தயார்

ஓட்டப்பந்தய போட்டிகளில் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு எந்தநாடும் ஈடுகொடுக்க தயாராக இல்லை. அதிலும் கறுப்பின வீரர்களின் வேகத்தின் வெற்றியை சாதனைகள் காட்டி நிற்கின்றன. 100 மீற்றருக்கு லூயிஸ் 200, 400 மீற்றர்களுக்கு ஜோன்சன் என்பது இன்றைய உலக கணிப்பு. அப்படியாக அசைக்கமுடியாத ஜோன்சன் தனது ஓய்வுபெறும் திட்டத்தை தெரியப்படுத்தியுள்ளார். 33 வயதை எட்டியுள்ள இவர் இவ்வருட முடிவில் ஓட்டப்பந்தயத்துக்கு முழுக்குப்போடவுள்ளார். முக்கிய ஓட்டப் பந்தயங்களில் 14 தங்கப்பதக்கம் வென்ற ஜோன்சன், 5 ஐ ஒலிம்பிக் கோட்டிகளில் பெற்றார். முதல் முதலாக 1991 இல் பார்சலோனா நகரில் 4 x 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் ஒலிம்பிக் பதக்கம் வென்றார். அடுத்து 1996 இல் அத்லாந்தாவில் 200, 400 மீற்றர் ஓட்டங்களில் ஒலிம்பிக் தங்கம் வென்ற முதலாவது வீரனாக சாதனை படைத்தார். இன்றுவரை 200 மீற்றர் ஓட்டத்தை 19.32 செக்கன்களிலும் 400 மீற்றர் ஓட்டத்தை 43.18 செக்கன்களிலும் கடந்து உலக சாதனையாக வைத்திருப்பவர் மிசைல் ஜோன்சன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பித்துவிட்டன அவுஸ்திரேலியன் ஓப்பன் டெனிஸ்போட்டிகள்

மிகப்பெரும் 'கிராண்ட் டெனிஸ் போட்டிகள்' வரிசையில் இவ்வாண்டின் முதலாவது முக்கியபோட்டி அவுஸ்திரேலியாவில் 15.01.2001 அன்று ஆரம்பித்துவிட்டது. சிட்னி நகரில் ஒலிம்பிக்சூடு தணிவதற்குள் மெல்பேர்ன் நகரில் அவுஸ்திரேலியன் ஓப்பன் ஆரம்பித்து உலக கவனத்தை ஈர்த்து வருகின்றது. டெனிஸ் விளையாட்டின் பிரபலங்கள் முட்டி மோதி ஆடிக்கொள்ளும் காட்சியை பார்த்து மகிழ இரசிகர்கூட்டம் படையெடுக்கும் அதேவேளை, பல்வேறு கோணங்களில் படப்பிடிப்புச் செய்ய படப்பிடிப்பாளர்களும் திரண்டிருப்பதாக அங்கிருந்து அறியமுடிகின்றது.




டோட்முண்ட் பிறைட்டன் ஸ்தாபனத்தினரின்
இவ்வார திரை வெளியீடுகள்

லக்கி ஸ்டார் அஜீத்குமார், லைலா, நக்மா, சுரேஷ்கோபி, நாகேஷ் நடிப்பில்

'தீனா'

19.01.01 வெள்ளி
நள்ளிரவு 12.30 மணிக்கு
Bambi Theater
Hansa Str - 18
Dortmund (Stadt Mitte)

புரட்சிக்கலைஞர் விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன், சாக்ஷி பிரகாஷ்ராஜ், நாசர், விசு நடிப்பில்

'வாஞ்சிநாதன்'

21.01.01 ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு
Theater Camera
Mallinckrodt Str 209
Dortmund

குறிப்பு 'தீனா' 'வாஞ்சிநாதன்' படப்பெட்டிகள் ஜேர்மனிக்கு வந்துவிட்டன. இவ்வாரம் கண்டிப்பாக திரையிடப்படும்.

தொடர்புகளுக்கு
Brightan Video & Asiashop
Jewellery & Textiles
Oestermarsch - 27
44145 Dortmund - 0231 - 819431 - 838703
Handy - 01741889040

(32-ம் பக்கத் தொடர்ச்சி)
### ஆனையிறவை....

மொன்றை நடத்தவுள்ளனர். ஆனால் அதை படையினர் எந்தவிதத்திலும் அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, மறுநாள் 11ம் திகதி காலை பத்திரிகையாளர்கள் கோப்பாய் பகுதி ஊடாக சாவகச்சேரி மற்றும் தனங்கிளப்பு பகுதிக்கு அழைத்துச் சென்று தம்மால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களையும் காட்டியுள்ளனர். பின்னர் அங்கிருந்து நாவற்குழி, கைதடி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பத்திரிகையாளர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் மற்றும் கலைப்பீட ஒன்றியத் தலைவர் ஆகியோரையும் சந்தித்து உரையாடியுள்ளனர். இதன்போது, 17ம் திகதி நடைபெறவுள்ள பொங்கும் எழுச்சி நிகழ்வுபற்றி மாணவர்கள் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)
### நிர்மூலமாக்கப்பட்டுள்ள...

பட்டுள்ளன என்றும், அக் குழிகளில் அரைவாசிக்கு நீர் நிரம்பியிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

அத்துடன் இப் பகுதிகள், மனித நடமாட்டங்களின்றி ஒரே பற்றைக்காடுகள் போல் காட்சியளிப்பதாகவும், மக்கள் மீளக் குடியேறுவதற்கான எந்தவொரு சாத்தியங்களும் உடனடியாக இங்கு இல்லை எனவும், குண்டுகள் தாக்காத கட்டடங்கள் கூட, குண்டு வெடிப்புகளினால் பெரும் அதிர்வுகளுக்கு உள்ளாகி, வெடி-ப்பு ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், அப் பகுதியில் இருந்த பாடசாலை ஒன்று இருந்த சுவடே தெரியாத அளவிற்கு முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இப் பகுதிகளில்தான் சிறீலங்கா இராணுவமும், தமிழ் கூலிக் குழுவும் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவின் சற்றலைற் பேச்சு

(14.01.01)

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா யாழ்குடா மக்களுக்கு கடந்த 8ம் திகதி திங்களன்று சற்றலைற் ஊடாக உரையொன்றை ஆற்றியுள்ளார். மிக நீண்ட அவ் உரையில், விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை தாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனத் தெரிவித்ததுடன், விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும். போர் தொடர்ந்துகொண்டு இருக்கும் போதே பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும். யுத்த நிறுத்தம் குறித்து பின்னர் யோசிக்கலாம் எனவும் கூறியுள்ளார். நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு தாம் தயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்துடன் ஒரு நல்லெண்ண புறநிலைச் சூழ்நிலையிலேயே பேச்சுவார்த்தை இடம் பெறவேண்டும் எனவும் மாவீரர் தினச் செய்தியில் குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு உரையொன்றை ஆற்ற உள்ளதாகவும் இதனை அங்குள்ள மக்கள் கேட்பதற்கான ஏற்பாடுகளை சிறீலங்கா அரசின் கூலிக் குழு டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வேலைக்கு கொண்டு சென்றவர்களை அடிமைகளாக நடத்தும் கொடூரம்

(15.01.01)

புத்தளம் மாவட்டத்திலுள்ள தளுவ என்னுமிடத்தில் உள்ள கரைவலை மீன்பிடித் தொழிலுக்கு மட்டக்களப்பிலிருந்து கூலிவேலைக்குச் சென்றவர்களை நீண்டநாட்களாகியும் அவர்களின் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்காமல் சிங்கள முதலாளிமார் தடுத்து வைத்து வேலை செய்விப்பதாகவும் அவர்கள் பல துன்பங்களை அனுபவிப்பதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த அக்டோபர் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாசிவன்தீவு, கதிரவெளி, வாகரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 22 பேரை முதலாளிமார் கரைவலை மீன்பிடிக்குக் கூலி வேலைக்குக் கூட்டிச் சென்றுள்ளனர். இவர்களை தை மாதம் 10ம் திகதி தைப்பொங்கல் பண்டிகைக்காகத் திருப்பி அனுப்புவதாகவும் கூறி அழைத்துச் சென்றுள்ளனர். ஆனால் வலைவாடியில் சுமார் நூறு பேர் செய்ய வேண்டிய வேலையை இந்த 22 பேர் மட்டுமே செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனவும் இதனால் இவர்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் தப்பிச்செல்லாதவாறு அவர்களின் அடையாள அட்டைகளை முதலாளிமார் வாங்கி வைத்திருப்பதுடன் இரவில் இவர்கள் தங்கியிருக்கும் குடிசைக்கு இருவர் துப்பாக்கியுடன் காவல் புரிவதாகவும் கூறப்படுகின்றது. அங்கிருந்து தப்பிவந்த ஒருவர் அங்கு நடக்கும் அநியாயங்களை உறவினர்களுக்குக் கூறியதை அடுத்து, மனைவி பிள்ளைகள் அங்கு சென்று தமது கணவன்மாரை தங்களுடன் அனுப்புமாறு கூறியுள்ளனர். அதற்கு முதலாளிமார் சம்மதம் தெரிவிக்காததுடன் மிரட்டியும் உள்ளனர். இதையடுத்து இவர்கள் புத்தளம் பொலிசில் முறைப்பாடு செய்தனர். ஆனால், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அறியவருகிறது. பொலிசாரை இந்த முதலாளிமார் இலஞ்சம் கொடுத்து மட-க்கி வைத்திருப்பதாகவும், இதனால் என்னதான் முறைப்பாடு செய்தாலும் பொலிசார் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)
### படையினரின்....

மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பின் தேசிய அமைப்பாளர் வணமாதம்பாகம அஜிதநாயக்க தேரர் கண்டித்துள்ளார். போர் காரணமாக நாம் ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். போரை நிறுத்துமாறு கூறுவது எந்தவிதத்திலும் குற்றமாக அமையாது. இதனால் எம்மை யாரும் கைது செய்யமுடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

தோற்றம்: 04 – 03 – 1913



மறைவு: 18 – 12 – 2000

## முருகேசு கனகரத்தினம்

(அரியாலை)

(யாழ்/ அரசினர் வைத்தியசாலை இளைப்பாறிய ஊழியர்)

குழந்தையென்று அன்பாக எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் குழந்தை உள்ளம் கொண்ட அன்புத் தந்தையே!

உமக்குப் பிள்ளைகளாகப் பிறந்ததற்கு அந்த ஆண்டவனுக்கு நன்றி. அன்பென்னும் வேதம் சொல்லி, பண்புடனும், நல்ல அறிவுடனும் எம்மை வாழவைத்தாய். பாசமிகு தந்தையே உம் சிரித்த வதனத்தை எப்போ இனிக் காண்போம். உம் பிரிவு எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. தந்தையின் உருவத்தில் வந்த அன்புத் தெய்வமே! உம் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் வாடும் மனைவி நாகம்மா(ஈழம்)

பிள்ளைகள், மருமக்கள் தனலெட்சுமி - துரைராஜா(பிரான்ஸ்), நித்தியானந்தன் - பத்மாவதி (ஜேர்மனி), இந்திராணி - ஜெகநாதன் (ஈழம்), மனோரஞ்சிதம் - ராஜா (ஜேர்மனி), விஜயலட்சுமி - ரவீந்திரன் (ஈழம்), தயாநிதி - கிருபாலிங்கம்(நோர்வே) மற்றும் பேரப்பிள்ளைகள்.

எம் தந்தையின் மரணச்செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டும், ஈழத்தில் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் உதவி புரிந்த அனைவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்கள் தருபவர்கள்
மனைவி, மக்கள், மருமக்கள்

Pub Fr

# தளபதி கிட்டு...

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

தமிழீழக் கரையிலும், தமிழகக் கரையிலும் ஓயாது வந்து மோதும் அலைகள் உன் புகழை என்றும் பாடியபடியே இருக்கின்றன.

தாயக மீட்புக்காக தலைவன் அழைத்தபோது ஈன்றதாயை விட்டுப்பிரிய நீ தயங்கவில்லை.

காதல் இளம் மனையாள் கண் கலங்கி நிற்க நீயோ அவள் விழி நீரைத் துடைக்கக்கூட நேரமின்றி தலைவனின் ஆணையேற்று கருமமே கண்ணாக அகிலமெல்லாம் சென்று தாயக விடுதலைக்கு ஆதரவு திரட்டத் தயங்கவில்லை.

'இந்தத் தலைவன்தான் எனக்கு எல்லாமே!' என எத்தனை முறை என்னிடம் கூறியிருக்கிறாய். உனது உயிருக்கும் மேலாக நீ நேசித்த அந்த உன்னதமான தலைவனை விட்டுப் பிரிந்துசெல்ல உன் மனம் துணிந்தது எப்படி? இன்னமும் புரியாமல் திகைக்கிறேன். நான் மட்டுமா? அந்தத் தலைவனும்கூட!

தமிழன்னையின் பால் குடித்து வளர்ந்து, கடலன்னையின் மடியில் மீளா உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட எனது இனிய இளையவனே!

வாழ்ந்த காலத்திலும் நீ வரலாறு படைத்தாய்!
சாவிலும் நீ சரித்திரம் படைத்துவிட்டாய்!

தொகுப்பு: கதிரவன்

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR Sarl

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# நிர்மூலமாக்கப்பட்டுள்ள தென்மராட்சி மனித நடமாட்டமின்றி காடாக மாறியுள்ளது

கடந்தவாரம் சிறீலங்காப் படையினரால் யாழ். குடாவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட உள்ளூர் மற்றும் வெளியூர் பத்திரிகையாளர்கள் தென்மராட்சி பகுதியின் நிலையைக்கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த செப்டெம்பர் மாதம் சிறீலங்காப் படையினர் ஆரம்பித்த 'கினிஹிர ஒன்று' நடவடிக்கையில் இருந்து இன்றுவரை நடத்தப்பட்ட கினிஹிர-8 நடவடிக்கை வரை படையினர் நடத்திய எறிகணை, விமான மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களினால் அரியாலை முதல் மீசாலை வரையான பகுதிகளில் உள்ள கட்டடங்கள், வீடுகள், வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புலிகளிடம் இருந்து இப் பகுதிகளை கைப்பற்றுவதற்காக படையினர் பெரும் தாக்குதல்களை நடாத்தியிருந்தனர். புலிகள் போர்நிறுத்தம் அறிவித்த பின்னர் அங்கிருந்து பின் வாங்கியதை அடுத்து, இப் பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பில் வந்துள்ளன. இவற்றை பார்வையிடுவதற்கே பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

கடந்த புதனன்று பத்திரிகையாளர்கள் கோப்பாய் கைதடிப் பாலம் ஊடாக தென்மராட்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் கண்ட காட்சியை கூறுகையில், சாவகச்சேரியை படையினர் பிடித்த போது அந்நகர் எப்படி முற்று முழுதாக அழிந்து போயிருந்ததோ அதே நிலையில்தான் இப் பகுதிகளும் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சியில் திரும்பும் திசை எங்கும் குண்டுவீச்சின் தாக்கங்கள் காணப்படுவதாகவும் பல இடங்களில் 20 அடி ஆழம் கொண்ட 15 அடி விட்டம்கொண்ட பாரிய குழிகள் விமானக் குண்டு வீச்சால் ஏற்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# ஆனையிறவை விட யாழ்குடா பாதுகாப்பே முக்கியம்

## அன்ரன் விஜேந்திரா

(14.01.01)

தற்போதைய சூழ்நிலையில் புலிகளின் வசமுள்ள ஆனையிறவைப் பிடிப்பது எமது நோக்கமல்ல, யாழ். குடாநாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே முக்கியமான விடயமாகுமென சிறீலங்காவின் யாழ்குடா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா தெரிவித்துள்ளார். கடந்த புதனன்று பலாலியில் கொழும்பிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டிருந்த உள்ளூர் மற்றும் வெளியூர் பத்திரிகையாளர்களை சந்தித்து உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள பொங்கும் தமிழ் விழாபற்றி நிருபர் ஒருவர் கேட்டபோது, அனைத்துத் தமிழர்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் பணி அவர்களுடையதல்ல. அதற்கு வேறு அமைப்புகள், கட்சிகள் இங்குள்ளன. அவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள். கல்வி கற்பதற்கே பல்கலைக் கழகத்திற்குச் சென்றுள்ளனர். படிக்க வந்தவர்கள் படிப்பைக் கவனிக்கவேண்டுமே தவிர அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. இதைக் கவனிக்க அரசியல் வாதிகள் உள்ளனர். யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புலிகளின் பின்னணியுடன் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இவர்கள் 17ம் திகதி எழுச்சிப் போராட்ட

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# நான்கு போராளிகள் வீரச்சாவு

(15.01.01)

25.10.2000 அன்று தென்மராட்சி பளைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்திருந்த 2ம் லெப். தியாகவிழி (கணபதி தவச்செல்வி — கிளிநொச்சி) என்ற போராளி இன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளார். இதேவேளை முல்லை மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக வீரவேங்கை கருவேலன் (வேலுப்பிள்ளை தவராசா — வட்டக்கச்சி) என்ற போராளி மரணமடைந்துள்ளார். கடந்த 22.12.2000 அன்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் வீரவேங்கை இனியவன் (இராமையா தினேஷ் — ஆனையிறவு), வீரவேங்கை கலைச்செல்வன் (நடராசா சுபாஸ்கரன் — யாழ்ப்பாணம்) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர்.

—பு.கு

# ஆனையிறவை மீட்பது கௌரவப் பிரச்சினை

## இராணுவ தளபதி பலகல்ல

(14.01.01)

ஆனையிறவுத் தளத்தை புலிகளிடம் இருந்து மீட்டெடுப்பது ஒரு கௌரவப் பிரச்சினை என சிறீலங்கா இராணுவத் தளபதி பலகல்ல கூறியுள்ளார். ஆனையிறவை மீட்பதால் புலிகளை தோற்கடித்துவிடலாம் என்பதல்ல. இன்றைய நிலையில் இது வொரு கௌரவப் பிரச்சினை. இராணுவம் இந்த விடயத்தில் தெளிவான நிலையிலேயே திறந்த மனத்துடன் இருக்கிறது. வீட்டுக்கு ஒருவர் படையில் சேர முன்வரவேண்டும். வீட்டுக்கு ஒருவர் வருவார்களேயானால் எதிர்பார்க்கும் வெற்றியை எளிதில் சாதித்துவிடலாம் எனவும் பலகல்ல மேலும் தெரிவித்துள்ளார்.

# படையினரின் எச்சரிக்கையை மீறி மட்டக்களப்பில் பேரணிக்கு ஏற்பாடு

(15.01.01)

மட்டக்களப்பில் சிறீலங்காப் படையினர் சமாதானப் பேரணிகளுக்கும், ஊர்வலங்களுக்கும் தடைவிதித்ததுடன் மீறுபவர்கள் குற்றவாளியாக கருதப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என எச்சரித்துள்ள நிலையிலும் போரை நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோசத்துடன் மட்டக்களப்பில் மாபெரும் பேரணி எதிர்வரும் 23ம் திகதி நடைபெற ஏற்பாடாகி வருக்கிறது.

சமாதானத்தை ஆதரிக்கும் பேரணியோ, கூட்டமோ, உண்ணாவிரதமோ மேற்கொள்ளுபவர்கள் குற்றவாளிகளாக கருதப்படுவார்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மட்டக்களப்பில் துண்டுபிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி மூலமும் படையினர் பகிரங்க அறிவித்தல் விடுத்ததற்கு சவாலாகவே இந்த பேரணியை தாம் நடத்தப்படவிருப்பதாக மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு தெரிவித்துள்ளது. படையினரின் இந்த அச்சுறுத்தலை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 02084236321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub